மகாத்மா காந்தி

அருளிய

ராம நாமம்

RĀMA NĀMAM

By Gandhi (MK)

CONNEMARA PUBLIC LIBRARY
17 FEB 1955
MADRAS
784

மொழிபெயர்ப்பு :

கோ. கிருஷ்ணமூர்த்தி

tr. by Kirusnamurtti (Ko)

கிடைக்குமிடம் :
ஸர்வோதயப் பிரசுராலயம்,
தேவ்ஜி காலனி, திருப்பூர்.
...ட்களில்
...ன்றன.

முதல் பதிப்பு : பிப்ரவரி '51—3000
2-ஆம் ,, ஏப்ரல் '54—3000

விலை அணா 12

[அகமதாபாத் நவஜீவன் டிரஸ்டின் அனுமதிபெற்று தமிழ்நாட்டுக் காந்தி நினைவு நிதிக்காக, ஸர்வோதயப் பிரசுராலயம் வெளியிட்டது.]

...ng Works, Madras (2499)

CONNEMARA ... LIBRARY
17 FEB 1955
MADRAS

குறிப்பு

பரம்பொருளே இராமன் ; இராமனே பரம்பொருள்.

பண்டைக் காலத்தில் பாவ புண்ணிய அறிவு சிறிதுமின்றி காட்டு மிருகங்களினிடையில் தானுமொரு மிருகமாய் இம்சையே இயற்கையாய் வாழ்ந்த வேடுவன் ராமநாமத்தின் உதவியினால் வான்மீகியாகி, ஆதிகாவியம் எனப்படும் இராமாயணத்தை இயற்றி உலக மகாகவிகளிடையே உன்னத ஸ்தானம் பெற்றான்.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில், தஞ்சை ஜில்லா காவிரி பாயும் திருவையாறு என்னும் ஊரில் வாழ்ந்த ஸ்ரீ தியாகராஜர் இராமனே கதியென வாழ்ந்து ராமபக்தி ததும்பும் எண்ணிறந்த அமர ஸாஹித்தியங்களை இயற்றிப் பொன்றாப் புகழ் பெற்றார்.

பாரத நாடு செய்த புண்ணியத்தின் பயனாய் 80 ஆண்டுகள் நடமாடும் தெய்வமாய் நம்மிடையே வாழ்ந்து இன்றைக்கு ஆறு ஆண்டுகளுக்கு முன் உயிர் நீத்த மகாத்மா காந்தியின் திருவாயிலிருந்து இறுதியாக இருமுறை வெளிவந்தது "ராம்" என்ற தாரக மந்திரமே.

எண்ணிறந்த ஜன்மங்களிற் செய்த புண்ணியத்தின் பயனாய் காந்திஜிக்கு பிள்ளைப்பிராயம் முதலே ராம நாமத்தில் மனம் தோய்ந்துவிட அது அவருக்கு வாழ்க்கையின் எல்லாச் சங்கடங்களிலும், சிக்கல்களிலும், ஆபத்துக்களிலும் கைகொடுத்து உதவி வந்தது.

இந்த ராம நாமம் என்பது என்ன, இது நமக்கு எவ்வாறு உதவும், எப்படி உதவாது, இதன் உதவிபெற விரும்புவோர் பின்பற்றவேண்டிய விதிகள் யாவை என்ற விஷயங்கள் காந்திஜியின் 'சத்திய சோதனை' என்ற சுய சரிதையில் தொடங்கி, 'யங் இந்தியா', 'ஹரிஜன்' பத்திரிகைகளின் பக்கங்களிலும், அவர் அன்பர்களுக்கு எழுதிய கடிதங்களிலும், இறுதி நாட்களில் செய்த பிரார்த்தனைப் பிரசங்கங்களிலும் விரவிக்கிடக்கின்றன.

இவைகளையெல்லாம் காலக்கிரமப்படி, உரிய தலைப்புகளின் கீழ் தொகுத்து 'ராம நாமம்' என்ற பெயருடன் அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தார் ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி ஆகிய பாஷைகளில் ஐந்து வருஷங்களுக்கு முன் வெளியிட்டனர். மேற்கூறிய பாஷைகள் தெரியாத தமிழ் மக்களும் மகாத்மாவின் மாண்புமிக்க அனுபவத்தினின்றும் பிறந்த அருள் மொழிகளைத் துய்க்க உதவக் கருதி இந்நூலை 1951-ல் கோமதி பிரசுர நிலையத்தார் நேர்த்தியான முறையில் வெளியிட்டு அடக்க விலைக்கே விற்றதால் வெகு விரைவில் பிரதிகள் செலவாய்விட்டன. இப்பொழுது இவ்விரண்டாம் பதிப்பு தமிழ்நாட்டுக் காந்தி நினைவு நிதியின் நான்காம் வெளியீடாய்ப் பிரசுரமாவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

இந்நூலை (ஹிந்தி பதிப்பு) ஆசார்ய வினோபா பாவே "ஹிந்தி ஸர்வோதய"ப் பத்திரிகையில் விமர்சனம் செய்து கூறியிருப்பதாவது :

"இதில் பாபுவின் சில கட்டுரைகளும், சில சொற்பொழிவுகளும், சில கடிதங்களும் அடங்கியுள்ளன. பின் இணைப்பில் பாபுவின் வாழ்வின் இறுதிக் காலத்தில் ராம நாமம் எவ்வாறு அவருடைய அகத்திலும் புறத்திலும் ஊறிப்போயிருந்தது என்பதை விளக்கும் ஒரு நிகழ்ச்சியின் விவரம் இணைக்கப் பெற்றிருக்கிறது. இந்தப் புத்தகம் சிறிய அளவினதாயினும் இதில் எல்லாம் அடங்கியுள்ளது. இது (பதினொரு) விரதங்களை விளக்கிக் கூறும் பாபுவின் 'மங்கள பிரபா'த்தைப் போன்று சிரஞ்சீவித்துவம் பெற்று விளங்கக்கூடியது."

இதற்கு மேலும் நாம் என்ன சொல்லவிருக்கிறது?

பிரசுரித்தோர்.

17 FEB 1955
MADRAS

பொருளடக்கம்

		பக்கம்
1.	அரம்பை விதைத்த நல்விதை ...	1
2.	வாழ்வின் ஊன்றுகோல் ...	3
3.	நம் ஒரே புகல் ...	7
4.	ராம் நாமமும் தேசசேவையும் ...	8
5.	அவன் உதவியை நாடுக ! ...	9
6.	செபத்தின் சிறப்பு ...	11
7.	யோகப் பயிற்சிகள் ...	13
8.	உறுதியான உதவி ...	14
9.	ராம நாமத்தைக் கேலிசெய்தல் ...	15
10.	ராமநாமமும் மந்திரங்களும் ...	16
11.	என் இராமன் ...	16
12.	இராமன் யார் ? ...	18
13.	தசரதகுமாரனும் இராமன் ...	19
14.	கடவுள் யார், எங்கே இருக்கிறார் ? ...	21
15.	ராம நாமமும் இயற்கைச் சிகிச்சையும் ...	23
16.	இயற்கைச் சிகிச்சை ...	24
17.	ராம நாமம்—பழுதுரு மருந்து ...	25
18.	இயற்கை வைத்தியத்தில் ராமநாமத்தின் இடம் ...	28
19.	தலைசிறந்த மருந்து ...	30
20.	ஆயுர்வேதமும் இயற்கைச் சிகிச்சையும் ...	34
21.	உருளிகாஞ்சனில் ...	36
22.	காஞ்சன் கிராமத்தில் இயற்கைச் சிகிச்சை ...	40
23.	எளியோருக்கு இயற்கைச் சிகிச்சை ...	41
24.	இயற்கைச் சிகிச்சையும் நவீன வைத்தியமும் ...	42
25.	ஐரோப்பாவின் போதனை ...	43
26.	இயற்கையின் விதிகள் ...	45
27.	‘ நம்பிக்கை வைத்திய ’மும் ராம நாமமும் ...	47
28.	ராம நாமம் பற்றிய குழப்பம் ...	50
29.	ஒரு சங்கடமான நடவடிக்கை ...	52
30.	முக்தியை நோக்கி ...	53

			பக்கம்
31.	பிரார்த்தனைப் பிரசங்கங்களிலிருந்து :	...	56–69
	ராம நாமம்—அதன் விதிகளும் ஒழுங்கு முறையும்	...	56
	பயன்தரும் மருந்து	...	57
	பயிற்சி தேவை	...	57
	அகத்தூய்மையும் புறத்தூய்மையும்	...	58
	ராம நாமத்தின் துஷ்பிரயோகம்	...	58
	ராம செபம் செய்யும் முறை	...	59
	மோனசிந்தனையின் சக்தி	...	61
	ராம நாமத்தையொத்த மந்திரமில்லை	...	63
	பிரார்த்தனைகள் அனைத்தின் சாரம்	...	64
	வெறும் ஆஷாடபூதித்தனம்	...	65
	கடவுள் திருநாம அமுதம்	...	65
	நம்பிக்கை விளைக்கும் அற்புதங்கள்	...	66
	ராம நாமத்தின் பொருள்	...	67
	அகத்துப்புரவும் புறத்துப்புரவும்	...	68
	தலைசிறந்த மருந்து	...	69
32.	தினக்கருத்துக்கள்	...	70
33.	இரு கடிதங்கள்	...	74
34.	வினு விடை	...	75
	பின் இணைப்பு :—		
I.	இந்த இராமன் யார் ?	...	77
II.	ஸர்வரோக நிவாரணி	...	78
III.	ஒரே கடவுளின் ஆட்சியை ஒப்புவோம்	...	80
IV.	சகிப்பு	...	80
V.	மக்களின் மருந்து	...	81
VI.	ராம செபம்	...	83
VII.	உண்மை ஒளி	...	83
VIII.	முந்திய நாள்	...	84
IX.	"ராம ! ராம !"	...	85
X.	ராம நாமம்	...	87

17 FEB 1955
MADRAS

ராம நாமம்

1. அரம்பை விதைத்த நல்விதை

ஆறும் அல்லது ஏழாம் வயது முதல் பதினாறும் வயது வரை நான் பள்ளியில் படித்து வந்தேன். ஆனால் எனக்கு மதம் ஒன்றைத் தவிர மற்ற எல்லா விஷயங்களும் போதித் தார்கள். சிரமமெதுவுமின்றி ஆசிரியர்கள் எனக்கு அளித் திருக்கக் கூடியவைகளை நான் பெறவில்லை யென்று சொல்லலாம்; ஆயினும் என் சுற்றுப் புறங்களிலிருந்து, இங்குமங்குமாய், பல மத விஷயங்களைக் கிரகித்துக் கொண்டேதான் இருந்தேன். நான் மதமென்ற சொல்லை உபயோகிப்பது அதன் பரந்த பொருளில், ஆத்மஞானம் அல்லது ஆன்மீக அறிவு என்ற அர்த்தத்தில், ஆகும்.

வைணவ மதத்தில் பிறந்ததினால் நான் அடிக்கடி பெருமாள் கோயிலுக்குப்போக நேர்ந்தது. ஆனால் கோயிலில் என்றுமே எனக்கு சிரத்தை இருந்ததில்லை. அதில் காணப்பட்ட பகட்டும், படாடோபமும் எனக்குப் பிடித்ததில்லை. மேலும் அங்கே செய்யக் கூடாதவையெல் லாம் செய்யப்பட்டு வருவதாய் என் காதில் விழவே எனக்கு அதில் பற்றே அற்றுப்போயிற்று. எனவே கோயிலிலிருந்து நான் பெற்ற நன்மை ஒன்றுமேயில்லை.

ஆனால் அங்கே நான் பெற இயலாமற் போனதை குடும்பத்தின் பழைய வேலைக்காரியான என் செவிலித் தாயினிடம் பெற்றேன். அவள் என்னிடம் காட்டி வந்த அன்பு எனக்கு இன்றும் நினைவிருக்கிறது. எனக்குப் பேய்-பிசாசுகள் என்றால் ஒரே பயம். இந்த பயத்திற்கு மருந்து ராம நாம செபம் என்று அரம்பை (இதுவே அவள் பெயர்) எனக்குச் சொன்னாள். அவள்

கூறிய மருந்தைவிட அவளிடம் எனக்கு நம்பிக்கை அதிக மாகையால் அந்தச் சிறு பிராயத்திலேயே என் பேய்-பிசாசுப் பயத்தைப் போக்குவதற்காக ராம நாமத்தை செபிக்கத்தொடங்கினேன். இது நடந்தது சிறிது காலத் திற்கே. ஆயினும் பிள்ளைப் பிராயத்தில் விதைக்கப்பட்ட அந்த நல்விதை வீணுகவில்லை. அரம்பையென்ற அந்த உத்தமி விதைத்த விதை காரணமாகவே இன்று எனக்கு ராமநாமம் பழுதுரு மருந்தாய் உதவிவருகிற தென்று நினைக்கிறேன்.

என் தந்தையின் முன்பு படிக்கப்பட்டு வந்த இிராமா யணம் என் மனத்தில் நன்கு பதிந்திருந்தது. என் தந்தை நோய்வாய்ப் பட்டிருந்த காலத்தின் ஒரு பகுதியை போர் பந்தரில் கழித்தார். அங்கே ஒவ்வொரு நாள் மாலையிலும் அவர் இராமாயணம் கேட்பது வழக்கம். இராமாயணத்தைப் படித்து வந்தவர் பிலேச்வர் என்ற ஊரைச் சேர்ந்த பெரிய ராமபக்தரான லாதா மகாராஜ் என்பவர். அவர் தம் குஷ்ட நோயை எந்த மருந்தின் உதவியுமின்றி நோய் தோன்றி யிருந்த இடங்களில் பிலேச்வர் கோயிலின் சிவலிங்கத்திற்கு அருச்சனை செய்து கழித்த வில்வ இலைகளைக் கட்டிவந்து தினந்தவருது ராமநாமத்தை செபித்து வந்ததினுலேயே போக்கிக் கொண்டாரென்று கேள்வி. அவருக்கு ராம நாமத்திலிருந்த நம்பிக்கையே அவரது நோய் தீர்ந்தமைக் குக் காரணமென்று சொல்வார்கள். இது உண்மையோ என்னவோ தெரியாது; ஆனல் நாங்கள் மட்டும் இதை நம்பினேம். லாதா மகாராஜ் இராமாயணம் வாசித்து வந்த பொழுது அவருடைய உடலில் குஷ்டத்தின் அறிகுறியே இல்லை யென்பது உண்மை. அவருடைய குரல் கேட்க இனி மையாயிருக்கும். அவர் தோஹாக்களையும் (ஹிந்தி இருவரிப் பாட்டுகள்) செளபாயிகளையும் *(ஹிந்தி நால்வரிப் பாட்டு கள்) இசையொடு பாடி, பொருளை மெய்ம்மறந்து விளக்கி

* இவ்விருவகைச் சந்தங்களிலேயே துளசீராமாயணம் முழுமையும் அமைந்திருக்கிறது.

வருகையில் இருந்து கேட்போரும் தம் நினைவை இழப்பர். எனக்கு அப்பொழுது பதின்மூன்று வயதிருக்கும். ஆனால் அவரது இராமாயணப் பிரசங்கத்தைக் கேட்டு நான் சொக்கிப் போனது எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. எனக்கு இராமாயணத்தில் ஆழ்ந்த ஈடுபாடு இப்பொழுது ஏற்பட்டிருப்பதற்கு அதுவே அடிப்படையாகும். பக்தி நூல்கள் அனைத்திலும் துளசிதாசருடைய இராமாயணமே தலைசிறந்தது என்பது என் அபிப்பிராயம்.

—'சத்திய சோதனை' என்ற சுயசரிதையிலிருந்து.

2. வாழ்வின் ஊன்றுகோல்

என் தீய எண்ணங்கள் தீய்க்கப்பட்டனவே தவிர அழிக்கப்படவில்லை. என் எண்ணங்களின் மீது எனக்குப் பூரண ஆதிக்கம் ஏற்பட்டிருக்குமாயின் நான் கடந்த பத்து வருஷங்களில் நுரையீரல் அழற்சி, சீதபேதி, குடல் வால் அழற்சி ஆகிய வியாதிகளினால் வருந்தியிருக்கவேண்டியதே இல்லை.* ஆன்மாவில் பாவமில்லை யென்றால் அது

---

*நான் பூரணத்துவத்தைக் கோரிப் பணிவுடன் முயன்று வருவோன். எனக்கு அங்கே போய்ச் சேருவதற்குள்ள வழி தெரியும். ஆனால் வழி தெரிந்திருப்பதே விரும்பும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்ததாகாது. நான் பூரணத்துவத்தை எய்தியிருந்தால், என் புலன்களை யெல்லாம் அடக்கியாள முடிந்திருந்தால், மனத்தில்கூட தீய விழைவுகள் தோன்ற விடாதிருக்க முயன்றால், என் உடல் பூரண ஆரோக்கியத்துடன் விளங்கவேண்டும். பிரதி தினமும் என் எண்ணங்களை அடக்கி ஆள்வதற்கே ஏராளமாக மனோ சக்தியைச் செலவிட வேண்டியிருக்கிறதென்று நான் ஒப்புக் கொண்டு விடுகிறேன். நான் எந்தக் காலத்திலேனும் இதில் வெற்றி பெற்றேனாயின், அப்பொழுது சேவை செய்வதற்கு எவ்வளவு சக்தி என்னிடம் பொதிந்து கிடக்குமென்பதை எண்ணிப் பாருங்கள்! குடல்வால் அழற்சி தோன்றியதற்குக் காரணம் என் உள்ளமோ, கருத்தோ நோயுற்றிருந்ததேயாகுமென்று நான் எண்ணுவதைப்போலவே சஸ்திர சிகிச்சைக்கு நான் உடன்

குடி புகுந்து வாழும் உடலும் ஆரோக்கியமாகவே இருக்க வேண்டு மென்பது என் நம்பிக்கை. அதாவது ஆன்மா பாவத்திலிருந்து விடுபட்டுப் புண்ணியப் பாதையில் முன்னேறவேற உடலும் நோய்களினின்றும் விடுபட்டு விடும். ஆனல் இங்கே ஆரோக்கியமான உடல் என்பதற்கு வலுவுள்ள உடலென்பது பொருளல்ல.

ஆற்றல் மிக்க ஆன்மா மெலிந்த உடலில்தானிருக்கும். ஆன்மாவின் பலம் பெருகப்பெருக உடல் நையும். பூரண ஆரோக்கியமுள்ள உடல் மிகவும் மெலிந்திருத்தல் சாத்தியமே. வலுவுள்ள உடல் அநேகமாய் நோயுற்றே இருக்கும். ஏற்கெனவே நோய் இல்லாதிருப்பினும் அது விரைவில் நோய்வாய்ப்பட, பூரண ஆரோக்கியமுள்ள உடலையோ நோய் எதுவும் அணுகாது. சுத்த இரத்தத்திற்கு நோய்க்கிருமிகளை விரட்டியடிக்கும் திறனுண்டு.

பிரமசரியம் என்பதற்குச் சாதாரணமாய்க் கொள்ளப் படும் பொருள் கருத்திலும், சொல்லிலும், செயலிலும் போக ஆசை இன்மை என்பது. நாவடக்கம் அதே அளவுக்கு வற்புறுத்தப்படவில்லை யாகையால், புலன்களின் போக்கை அடக்குவது சிரம சாத்தியம், ஏன், அசாத்தியமே ஆகியிருக்கிறது.

என் அனுபவமோ, நாவைக் கட்ட முடியாதவனல் போக ஆசையையும் அடக்கமுடியாது என்பது.

பட்டதையும் மனேநோயின் மற்றொரு விளைவென ஒப்புக் கொள்ளுகிறேன். 'நான்' என்ற எண்ணம் எனக்கு லவலேசமும் இல்லாதிருக்குமாயின் நடப்பது நடக்கட்டு மென்று வாளா இருந்திருப்பேன். ஆனல் இந்த உடலிலேயே உயிர்வாழ வேண்டு மென்று எனக்கு ஆசை. பற்றனைத்தையும் அறவே துறத்தல் யந்திரம்போல் செய்யக்கூடிய காரியமல்ல. சலியா உழைப்பினு லும் பிரார்த்தனையினுலுமே ஒருவர் அந்நிலையை எய்த வேண்டும்.

—யங் இந்தியா, 3-4-1924

நார்வடக்கம் சுலபமல்ல. ஆனால் போக விழைவை அடக்கு வதை நாவு ருசியைக் கட்டுவதிலிருந்து பிரிக்க முடியாது. நாவை அடக்குவதற்குள்ள ஒரு உபாயம் உப்பு புளி காரங்களையும், மசாலைகளையும் கூடியவரையில் கொள்ளாதிருப்பதே. மற்றொரு நல்ல பயனுள்ள உபாயம், இந்த உடலை நிலைக்கச் செய்வதற்காக நாம் சாப்பிடுகிறோமே தவிர நாவின் திருப்திக்காக வல்ல என்பதை நினைவில் இருத்திக் கொண்டிருத்தல். நாம் காற்றை சுவாசிப்பது அதன் உருசிக்காகவல்ல, நம் உயிரைப் பாதுகாக்கவே. தாகத்தைத் தணிப்பதற்காக நீர் அருந்துவதைப் போல, பசியைத் தீர்த்துக் கொள் வதற்கென்றே உணவருந்த வேண்டும். 'துரதிருஷ்ட' வசமாக சிறு பிராயம் முதலே பெற்றோர் இதற்கு நேர் மாறான பழக்கத்தை நமக்கு உண்டாக்கி விடுகின்றனர். நமது போஷணைக்காகவன்றி நம்மிடம் அவர்களுக்குள்ள தவறான பாசத்தினால் நமக்குப் பலவகைப் பணியாரங்களைக் கொடுத்து நம்மைக் கெடுத்து விடுகிறார்கள். இந்த் விபரீதமான வீட்டுச் சூழ்நிலையை நாம் எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. ஆனால் போக ஆசைமீது வெற்றி கொள்வதற்கு நமக்குப் பெரிதும் உதவக்கூடியது ரா்ம நாமமோ அல்லது அதைப்போன்ற வேறு மந்திரமோ தான். துவாதசாக்ஷர (பன்னிரண்டு எழுத்து) மந்திரமும்* இதே வகையில் பயன்படும். அவரவர் தமக்கு விருப்பமான மந்திரத்தை செபிக்கலாம். சிறுவயது முதலே எனக்குப் பழக்கமாகியிருப்பதாலும், என்னுடைய வாழ்க்கைப் போர் களிலெல்லாம் இடையறாது உதவி வந்திருப்பதாலும் நான் ராமநாமத்தைக் குறிப்பிட்டிருக்கிறேன். எந்த மந்தி ரத்தை ஒருவர் ஏற்றுக்கொண்டாலும் அதில் அவர் முழுமை யும் ஆழ்ந்துவிடவேண்டும். செபம் செய்யும்பொழுது பிற எண்ணங்கள் வந்து மனத்துட்புகுவதைப் பொருட்படுத்த

*ஓம் நமோ பக்வதே வாஸுதேவாய - ஓம் வாசுதேவ பகவா னுக்கு வணக்கம்.

வேண்டாம். பூரண நம்பிக்கையுடன் செபித்துக்கொண்டே போகிறவர் இறுதியில் வெற்றிபெறுவார். மந்திரமே வாழ்வின் ஊன்றுகோலாகி அதை செபிப்போருக்கு எல்லா ஆபத்துக்களேயும் கடக்க அது உதவும்.* இத்தகைய தெய்வ மந்திரங்களினுல் இகலோக நன்மைகளேப் பெற ஆசைப்படக்கூடாது. உடலின் தூய்மையைப் பழுதுரு து காப்பதே இம்மந்திரங்களில் உள்ள தனிச் சிறப்பு என்பதை உண்மைச் சாதகர் எவரும் விரைவில் உணர்வார். ஆனுல் மந்திரத்தைக் கிளிப்பாடமாய் ஒப்பித்துக் கொண்டிருக்கக் கூடா தென்பதை நினைவி

* பிரமசரியத்தை சாதிப்பதற்கு உதவக்கூடிய சாதனங்களைக் குறிப்பிட்டு காந்திஜி ஒரு பிரமசாரிக்குப் பின்வருமாறு எழுதினுர் :

" இறுதியிற் கூறினும் முக்கியமானது பிரார்த்தனையாகும். அவர் ஒவ்வொரு நாளும் முறையாகவும், மனப்பூர்வமாகவும் ராம நாமத்தை செபித்துக் கடவுளின் அருளை வேண்டுவாராக."

—யங் இந்தியா, 19-4-'26

அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு ஆன்மாவுக்கு காந்திஜி பின்வருமாறு எழுதினுர் :—

" இராமனுடைய உதவியினுல் நம்முள் உள்ள புலன்களென்ற பத்துத் தலை இராவணனை நாம் வெல்லவேண்டும். நமக்கு இராமனிடம் நம்பிக்கையிருந்து, அவனுடைய அருளிடம் அடைக்கலம் புகுந்து விடுவோமானுல் வெற்றி உறுதி. எல்லாவற்றிற்கும் மேலாக, தன்னம்பிக்கையை இழத்தல் கூடாது. நாக்கு ருசியைத் திருப்தி செய்வதிலும் முனைந்துவிடலாகாது."

—யங் இந்தியா, 20-12-'28

" போக ஆசைகள் உம்மீது வெற்றி கொண்டு விடுமென்று உமக்கு அச்சம் தோன்றும்பொழுது கடவுளிடம் சரண்புகுந்து கதறுக. ராம நாமம் ஒன்றே என்னிடமுள்ள வீண்போகாத மருந்து. புற உதவியாக இடை ஸ்நானம் செய்க."
—Self-Restraint *v.* Self-Indulgence (புலனடக்கமும் சுகபோகமும்) என்ற நூலின் 2-வது பதிப்பின் (1928) முன்னுரையிலிருந்து.

லிருத்தவேண்டும். நமது ஆன்மா முழுவதையும் அந்த மந்திரத்துள் புகுத்திவிட வேண்டும். கிளி இம்மந்திரங்களை யந்திரம்போல் ஒப்பித்துக்கொண்டிருக்க நாம் புத்தி பூர்வமாய், விரும்பத்தகாத எண்ணங்களை வெளியேற்ற வேண்டி, அவ்வாறு வெளியேற்ற நமக்கு உதவும் பொருட்டு செபிக்கவேண்டும்.

—நவஜீவன், 5–6–1924

3. நம் ஒரே புகல்

'இராமன், அல்லா, God (காட்) என்பவை எனக்கு ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்களே. கள்ளமில்லா மக்கள் சிலர் நான் அவர்களுடைய ஆபத்துக் காலத்தில் அவர்கள்முன் தோன்றுவதாய்த் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்களென்று அறிந்தேன். இந்தக் குருட்டு நம்பிக்கையைப் போக்க விரும்பினேன். நான் எவர் முன்பும் தோன்றியதில்லையென்றும் அறிவேன். சதமில்லா மனிதனை நம்பிக்கொண்டிருத்தல் அவர்களது கலப்பில்லா அறியாமையையே குறிக்கிறது. ஆகவே சுளுவானதும், என்றுமே தவறாததும், அனுபவத்தில் வந்ததுமான ஒரு சூத்திரத்தை நான் அவர்களுக்கு எடுத்து உதவினேன். அதாவது, ஒவ்வொரு நாளும் காலையில் சூரியோதயத்திற்கும், இரவில் படுக்கப் போவதற்கும் முன்பு தம் விரதங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உதவியைக் கடவுளிடம் கோரிப் பெறவேண்டுமென்பது. கோடிக்கணக்கான இந்துக்கள் அவனை இராமனென்ற பெயரால் அழைக்கிறார்கள். என் சிறு பிராயத்தில் அச்சம் தோன்றியபொழுதெல்லாம் இராமனைக் கூவி அழையென்று நான் போதிக்கப்பட்டேன். என் நண்பர்களில் பலருக்கு ராம நாமம் ஆபத்துக் காலங்களில் பேருதவி அளித்து வந்திருப்பது எனக்குத் தெரியும். 'தரலாக்களு'*க்கும் 'தீண்டாதாரு'க்கும் நான் இதைக்

* ஒரு மலை சாதியினர்.

கூறியதுண்டு. அதிகப் படிப்பினல் மழுங்காத அறிவும், மங்காத நம்பிக்கையுமுள்ள வாசகர்களுக்கும் நான் இதையே கூறுகிறேன். படிப்பு வாழ்க்கையின் பல கட்டங்களைக் கடக்க நமக்கு உதவியபோதிலும், ஆபத்துக் காலங்களிலும் ஆசை நம்மைத் தன் வலையில் சிக்கவைக்க வரும்பொழுதும் அது நமக்குச் சிறிதும் பயன்படுவதில்லை. அப்பொழுது கடவுள் நம்பிக்கையொன்றே நம்மைக் காக்கிறது. மனம் போனவாறெல்லாம் நடந்துகொண்டே கடவுள் நம்மைக் காக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறவர்களுக்கு அல்ல ராம நாமம்; ஆண்டவனுக்கு அஞ்சி வாழ்ந்து புலன்களை அடக்க எவ்வளவோ முயன்றும் முடியாது துன்புறுவோருக்கே அஃது ஏற்பட்டது.

—யங் இந்தியா, 22–1–1925.

4. ராமநாமமும் தேச சேவையும்

கேள்வி :—ஒரு ஆணோ, பெண்ணோ நாட்டுப் பணி எதுவும் புரியாது ராம நாமத்தை செபித்துக் கொண்டிருப்பதிலேயே வீடுபேறு பெறமுடியுமா? நான் இந்தக் கேள்வி கேட்பதற்குக் காரணம், என் சகோதரிகளுட் சிலர் தம் குடும்பக் காரியங்களைமட்டும் கவனித்துக் கொண்டு சில சமயங்களில் ஏழைகளிடம் சிறிது அன்பு செலுத்தி வந்தாலே போதும், வேறெதுவும் செய்ய வேண்டாமென்று சொல்வதே.

பதில் :—இந்தக் கேள்வி பெண்களைமட்டும் அன்றி பல ஆண்களையும் திகைக்க வைத்திருப்பதோடு என்னையும் எவ்வளவோ வாட்டியிருக்கிறது. செயல் எதுவும் புரிய வேண்டாம், காரியங்களினல் பயனில்லை என போதிக்கும் தத்துவ சாஸ்திரம் ஒன்றும் இருக்கிறதென்று எனக்குத் தெரியும். அவர்கள் கூறுவதற்கு என் சொந்த வியாக்கியானமொன்றைச் செய்து கொண்டு, பேச்சளவில்

ஒத்துப்போவதற்கு மேலாக அந்தப் போதனையை என்னால் ஆதரிக்க முடிந்ததில்லை. என் பணிவான அபிப்பிராயம், ஒருவர் வளர்ச்சியுறுவதற்கு செயல் இன்றியமையாதது என்பது. அது பயன் கருதாததாய் இருக்க வேண்டும். ராம நாமமோ அதைப்போன்ற வேறொரு மந்திரமோ வெறும் செபத்திற்காக மட்டுமென்றால் பயன் இல்லை; நம்மைச் சுத்தப்படுத்துவதற்கும் செயல் புரிய உதவுவதற்கும் ஆண்டவனிடமிருந்து நேர்முகமாய் உதவி பெறுவதற்குமே அது தேவை. ஆகவே செயலை நிறுத்திவிட்டு அதைச் செய்வதிற் பயனில்லை; செயலைத் தீவிரமாக்கிச் சரியான பாதையில் செலுத்துவதற்காக அது ஏற்பட்டது. செயல் எல்லாமே வீண் என்றால், குடும்பக் கவலைதான் எதற்கோ? ஏழைகளுக்குத்தான் எப்பொழுதேனும் உதவுவானேன்? இந்தச் செயலிலேயே தேச சேவையின் கருப்பொருள் அடங்கியிருக்கிறது. தேச சேவையே மனித சேவையுமாகும் என்பது என் அபிப்பிராயம். பற்றில்லாது குடும்பத்திற்குச் செய்யப்படும் சேவையும் அப்படிப்பட்டதே. பற்றில்லாது குடும்பத்திற்குச் செய்யும் சேவை நிச்சயமாய் தேச சேவையில் கொண்டுபோய்விடும். ராம நாமம் பற்றின்மையையும் பதறாமையையும் தந்து ஆபத்துக் காலங்களில் நிதானம் இழவாதிருக்க உதவுகிறது. பரம ஏழைகளுக்கு உதவாமலும் அவர்களும் நாமும் ஒன்று என்று உணராமலும் இருக்கும்வரை வீடுபேறு சாத்தியமன்று என்பது என் நம்பிக்கை.

யங் இந்தியா, 21–10–1926

5. அவன் உதவியை நாடுக!

இந்தியா முழுவதிலும் உள்ள எத்தனையோ மாணவர்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்திவந்ததிலிருந்து வண்டி வண்டியான புஸ்தகங்களில் உள்ள விஷயங்களைத் தங்கள் மூளையில் திணித்துக்கொண்டதனால் அவர்கள் எவ்வளவு தூரம் பாழாய்விட்டார்கள் என்பது எனக்குத் தெரி

யும். சிலருக்கு புத்தி நிதானம் போய்விட, சிலர் பைத்தியங்களாயும், இன்னும் சிலர் வேறு புகலின்றி தீய வாழ்க்கை நடத்திக் கொண்டும் இருக்கிறார்கள். எவ்வளவு தான் முயன்றாலும் தீமையை வெல்ல முடியவில்லையாகையால் நாங்கள் இந்நிலையில் இருக்கிறோமென்று அவர்கள் சொல்லக் கேட்கும்பொழுது எனக்கு அவர்களிடம் இரக்கமே பிறக்கிறது. "எங்களைப் பற்றிக்கொண்டு விட்ட சைத்தானை, தீமையை எப்படி அகற்றுவதென்று எடுத்துச் சொல்லுங்கள்" என அவர்கள் பரிதாபமாய்க் கேட்கிறார்கள். நான் அவர்களுக்கு, "ராம நாமத்தைச் சொல்லுங்கள், கடவுளை வணங்கி அவருடைய உதவியைக் கோருங்கள்" என்று சொல்லும்பொழுது அவர்கள் என்னிடம் வந்து, "கடவுள் எங்கே இருக்கிறாரென்றே எங்களுக்குத் தெரியாதே. பிரார்த்தனை யென்பது என்னவென்றே நாங்கள் அறியோமே" என்கிறார்கள். இந்த இழிந்த நிலைக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள்......

ஒரு தமிழ்ப் பழமொழி எப்பொழுதுமே என் நினைவில் இருந்து வந்திருக்கிறது. "திக்கற்றவருக்கு தெய்வமே துணை" என்பதே அது. நீ அவனிடம் உதவி கோருவதென்றால், உன் உண்மை உருவில் கள்ளங் கபடமின்றி 'என்னைப் போன்ற இழிந்தவனுக்கு அவன் எப்படி உதவுவான்?' என்ற ஐயம் சிறிதுமின்றி அவனை அணுக வேண்டும். தன்னை அணுகிய கோடிக் கணக்கானவருக்கு அபயமளித்து ஆதரித்தவன் உன்னைக் கைவிடுவானா? அவன் பாரபக்ஷமெதுவும் காட்டுவதில்லையாகையால் உன்னுடைய வேண்டுகோள் யாவற்றையும் அவன் நிறைவேற்றுவதைக் காண்பாய். கடையருள் கடையனது பிரார்த்தனைக்கும் பயன் கிட்டும்.*

---

* ஆனால் பிரார்த்தனை யென்பது வெறும் சொற்களை அடுக்குவதோ, காதுக்குப்பயிற்சியோ, சூத்திரங்களை திரும்பத் திரும்பச் சொல்வதோ அல்ல. அது உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்காவிடில் ராம நாமத்தை எவ்வளவு சொன்னாலும் பயனில்லை.

நான் இதை என் சொந்த அனுபவத்திலிருந்தே சொல்லு கிறேன். சாதாரணமா, நரகவேதனையை அனுபவித்திருப் பவன் நான்! கடவுளின் அருளை முதலில் கோருவாயானால் மற்றவை யெல்லாம் தாமே வந்து கூடிக்கொள்ளும்.

—யங் இந்தியா, 4-8-1929

6. செபத்தின் சிறப்பு

"ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண் டிருப்பது என் காதை உறுத்துகிறது. இது கணிதத்தில் பற்றும் அறிவு வாதத்தில் ஈடுபாடும் கொண்ட என் மனோ பாவத்திலுள்ள குறையினால் இருக்கலாம். ஆனால் எந்தக் காரணத்தினாலோ எனக்கு செபமென்றாலே பிடிப்பதில்லை. உதாரணமாக, பாக்கி*னுடைய அற்புதமான இசையும், 'தந்தையே அவர்களை மன்னியுங்கள். அவர்கள் தாம் செய்வது என்னவென்று அறியார்' என்ற வரி திரும்பத் திரும்பப் பாடப்படுகையில் எனக்குப் பிடிப்பதில்லை."

"ஆனால் கணிதத்திலும் மடங்கு தசமம் உண்டே!" என்று காந்திஜி சிரித்துக்கொண்டே சொன்னார்.

"ஆனால் ஒவ்வொரு எண்ணும் ஒரு புதிய பொருளைக்

வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு உள்ள உருக்க மில்லாதிருப் பதைவிட, உருகிய உள்ளத்துடன் செய்யப்படும் மௌனப் பிரார்த்தனை மேல். பிரார்த்தனையை வேண்டித் தவிக்கும் ஆன்மா வுக்காகவே அதைச் செய்யவேண்டும். பசியுள்ளவன் நல்ல உணவை ரசித்து உண்பதைப் போலவே, பசித்த இதயம் உள்ள முருக்கும் பிரார்த்தனையைப் பெரிதும் விரும்பும். பிரார்த்தனைக் குள்ள அற்புதமான சக்தியை உணர்ந்தவன், வேண்டுமானால் நாட்கணக்காக உணவின்றி இருப்பானே தவிர, ஒரு கணமேனும் பிரார்த்தனையின்றி இரான் என்று என் சொந்த அனுபவத்தி லிருந்தும், என் நண்பர்களின் அனுபவத்திலிருந்தும் சொல்லு கிறேன். ஏனெனில், பிரார்த்தனை இல்லாதபொழுது மன்வமைதி இருப்பதேயில்லை.

—யங் இந்தியா, 23-1-1930

* ஒரு ஜெர்மானிய இசைக்கலை மேதை.

குறிப்பதாக அல்லவா இருக்கிறது?'' என்றுர் கணித பண்டிதர்.

"அவ்வாறே ஒவ்வொரு தடவையும் திரும்பச் சொல்லுதல் அல்லது செபித்தலுக்குப் புதிய புதிய பொருளுண்டு. ஒவ்வொரு தடவை திரும்பச் சொல்லும்பொழுதும் நாம் கடவுளை ஒவ்வொரு அடியாக அணுகிக் கொண்டிருக்கிறோம். இது ஒரு நிதர்சனமான விஷயம். நீங்கள் இங்கே பேச்சளவோடு நிற்கும் ஒருவனுடன் பேசிக்கொண்டிருக்கவில்லை; தான் சொல்வதைத் தன் வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் அனுபவித்து வந்திருப்பவன் ஒருவனுடனேயே நீங்கள் உரையாடிக் கொண்டிருக்கிறீர்களென்று உங்களுக்குச் சொல்லிவைக்கிறேன். ஆகவே என் நாடி அல்லது உயிர் ஓய்ந்துவிட்டாலும் ஓய்ந்துவிடுமே தவிர இந்த இடையருத செபம் மட்டும் நில்லாது. அது ஆன்மாவுக்கு மிகவும் தேவையான ஒன்று.''

"எனக்கு இது நன்றுய்ப் புரிகிறது. ஆனல் சாதாரண சராசரி மனிதனுக்கு இது பொருளற்ற வெறும் சூத்திரம்தானே.''

"ஒப்புகிறேன். ஆனல் மிகச் சிறந்த வஸ்துவும் தவருக உபயோகிக்கப்படலாம்; மோசடி செய்வதற்கு மிகுந்த இடம் இருக்கத்தான் செய்கிறது. ஆனல் அந்த மோசடியும் நற்குணத்தின் பெருமைக்கே அத்தாட்சி. பத்தாயிரம் மோசக்காரர்கள் இருக்கிருர்களென்ருல் கோடிக் கணக்கான கள்ளங்கபடமற்ற ஆன்மாக்கள் இதிலிருந்து மனவமைதி பெறுகிருர்களென்பதைக் காண்பீர்கள். கட்டடம் அமைப்பதற்கு சாரத்தைப்போல இது மிகவும் இன்றியமையாதது.''

பியரி ஸெரிஸோல் மேலும் சொன்னதாவது: "ஆனல் உங்கள் உவமையையே மேலும் தொடர்ந்து கொண்டு செல்லுவோமானல் கட்டடம் கட்டியான பிறகு சாரத்தை அகற்றிவிடவேண்டும்' என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள் அல்லவா?''

"ஆம், இந்த உடல் அகற்றப்படும்பொழுது அதுவும் அகற்றப்படும்."

"ஏன்?"

தர்க்கத்தை மிகவும் ஊன்றிக் கவனித்துவந்த வில்கின்லன், "ஏனெனில், நாம் சதாசர்வகாலமும் கட்டடம் எழுப்பிக்கொண்டே யிருப்பதினுலேயே" என்ருர்.

"ஏனெனில், நாம் சதாசர்வகாலமும் பூரணத்துவத்தைக்க்ருதிப் பாடுபட்டுவருகிருேம். கடவுள் ஒருவரே பரிபூரணர்; மனிதன் என்றும் அபூரணனே" என்ருர் காந்திஜி.

—ஹரிஜன், 25–5–1935

7. யோகப் பயிற்சிகள்

யோகப் பயிற்சிகள்போன்ற எதையேனும் அவர் செய்துவருகிருராவென்று பாதிரி நண்பர் ஒருவர் கேட்டதற்கு காந்திஜி கூறிய பதிலாவது:

"யோகப் பயிற்சிகளெதுவுமே எனக்குத் தெரியாது. நான் பயிலுவது என் சிறு பிராயத்தில் என் செவிலித் தாயினிடம் கற்றுக்கொண்டதொன்றையே. எனக்குப் பேய் பிசாசுகளென்ருல் பயம். அவள் எனக்கு, 'பேய் பிசாசுகளே கிடையாது. ஆனுல், உனக்கு பயமாயிருந்தால் ராம நாமத்தை செபம் செய்' என்று சொல்லிவந்தாள். நான் சிறுவயதில் கற்றது என் மனத்தில் பேருருவம் பெற்றுவிட்டது. என் வாழ்க்கையின் இருள்சூழ்ந்த சந்தர்ப்பங்களில் சூரிய ஒளியைப்போல் அது உதவியிருக்கிறது. ஏசுநாதரின் பெயரை செபித்துவருவதால் ஒரு கிறிஸ்தவனும் அல்லாவின் பெயரை ஓதுவதால் ஒரு முஸ்லிமும் அதே மனவமைதியைப் பெறலாம்.*

---

* இஸ்லாமின் அல்லாவும் கிறிஸ்தவர்களின் God (காட்) உம் இந்துக்களின் ஈசுவரனும் ஒன்றே. இந்து மதத்தில் கடவுளுக்குக் கணக்கற்ற பெயர்கள் இருப்பதைப்போல இஸ்லாம் மதத்திலும்

"இவையெல்லாம் ஒரே பொருளுள்ளவையாகையால் ஒரே வகை சந்தர்ப்பங்களில் ஒரே வகைப் பயனைத் தரும். ஆனால் உதட்டினால் மட்டும் சொல்வதாய் இராது செபம் உன் வாழ்வின் ஒரு பகுதியாய்விடவேண்டும்."

—ஹரிஜன், 5–12–1936

8. உறுதியான உதவி

ராம நாமம் ஒரு உறுதியான உதவி என்பதில் சந்தேகமில்லை. மனவொருமையோடு செபிக்கப்படுமானால் அது எல்லாத் தீய எண்ணங்களையும் விரட்டிவிடுகிறது. தீய எண்ணங்கள் போய்விட்ட பிறகு தீய செயலுக் கிடமில்லை. உள்ளத்தில் உறுதியில்லாதபொழுது வெளி உதவிகளினாற் பயனில்லை; உள்ளம் தூய்மையாயிருந்தாலோ அவை தேவையில்லாமற் போகின்றன. இதிலிருந்து மனத் தூய்மையுள்ளவன் தனக்குத் தோன்றியதைச் செய்து கொண்டிருந்தாலும் பாவத்திலிருந்து தப்ப முடியுமென்று எண்ணிக்கொண்டு விடக்கூடாது. அத்தகைய மனிதன் தோன்றியதைச் செய்யவேமாட்டான். அவனுடைய வாழ்க்கை முழுவதும் அவனது உள்ளத் தூய்மைக்குப் பழுதுபடாத அத்தாட்சியாகவே இருந்துவரும். மனமே ஒரு மனிதனை உருவாக்கவோ கெடுக்கவோ செய்கிறதென்று கீதை கூறுவது உண்மை. மில்டன், *"மனம் மகா சக்தி வாய்ந்தது; அதனால் சொர்க்கத்தை நரகமாக்கவும், நரகத்தைச் சொர்க்கமாக்கவும் முடியும்" என்று கூறும்

உண்டு. பெயர்கள் தனித்தனி ஆட்களையல்ல, ஒரே கடவுளின் பல சிறப்பியல்புகளைக் குறிப்பனவே. எளிய மனிதன் தனக்குரிய சாதாரண முறையில் வர்ணனைகளுக்கும் அளவைக்கும் புகழுக்கும் எட்டாத ஆண்டவனுடைய மகிமையை வர்ணிக்க முயன்றிருக்கிறான்.

—ஹரிஜன், 12–8–1938

* பிரபல ஆங்கில கவி.

பொழுது இதே கருத்தைத்தான் வேறு வகையில் சொல்லுகிறான்.

—ஹரிஜன், 12–5–1946

9. ராமநாமத்தைக் கேலிசெய்தல்

கே:—பஞரிஸில் உள்ள ராமநாம பாங்கும், ராம நாமம் வரைந்த ஆடையை அணிதலும் என் அபிப்பிராயத்தில் ராமநாமத்தைக் கேலி செய்தலும், அவமானத்திற்குள்ளாக்குதலுமாகும். இந்நிலையில் நீங்கள் ஜனங்களிடம் எல்லா நோய்களுக்கும் ராம நாமமே சிறந்த் மருந்தென்று சொல்லி வருதல் அவர்களின் அறியாமையையும், மோசக் கருத்தையும் ஊக்கிவிடுமென்று நினைக்கவில்லையா? மன வொருமையுடன் ராமநாமத்தை செபித்தல் சிறந்த மருந்தாய் உதவக் கூடுமாயினும் சரியான மத போதனையின் விளைவாகவே அந்நிலை தோன்றுமென்று நினைக்கிறேன்.

ப:—நீங்கள் சொல்வது சரியே. எங்கு பார்த்தாலும் குருட்டு நம்பிக்கையும், வெளி வேஷமுமாகவே இருப்பதைக் காணும்பொழுது நல்ல காரியத்தைச் செய்வதற்கே பயமாய்த்தானிருக்கிறது. ஆனால் பயத்துக்கு இடங் கொடுப்பதென்றால் உண்மையையும் மறைக்க வேண்டிவரும். ஒருவர் சரியென்று எதை நம்புகிறாரோ அதன்படி அச்சமின்றி செய்து வருவதொன்றே தலை சிறந்த முறை. மோசடியும் பொய்யும் உலகத்தில் இருந்து கொண்டுதான் இருக்கும். நாம் சரியான காரியத்தைச் செய்து வருவதனால் அவை வரவரக் குறையுமே தவிர, அதிகமாகா. நம்மை நாற்புறமும் பொய் சூழ்ந்து கொண்டிருக்கும் பொழுது நாமும் அதிற் சிக்கி நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு விடக்கூடும் என்பதே அதிலுள்ள அபாயம். சோம்பேறித்தனத்தினாலும் அறியாமையினாலும் குற்றம் செய்யாது ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

எல்லா நிலைமைகளிலும் இடையருத விழிப்புடன் இருத்தல் அவசியம். சத்தியத்தை வழிபடுவோன் வேறு வகையில் நடந்துகொள்வதற்கே இல்லை. சர்வ சக்தி வாய்ந்த ராம நாமம் போன்ற மருந்தும், விழிப்பும் கவனமுமில்லாத பொழுது பயனில்லாமற் போய் வழக்கிலுள்ள எத்தனையோ குருட்டு அனுஷ்டானங்களுடன் அதுவும் ஒன்ருகிவிடலாம்.

—ஹரிஜன், 2–6–1946

10. ராம நாமமும் மந்திரங்களும்

நான் கூறும் ராம நாமத்திற்கும் யந்திர மந்திரங்களுக்கும் சம்பந்தமில்லை. மனவொருமையுடன் ராமநாமத்தை செபிப்பதென்பது ஒப்புவமையற்ற ஒரு சக்தியினிடமிருந்து உதவி பெறுவதாகுமென்று நான் சொல்லி இருக்கிறேன். இதனுடன் ஒப்பிடும்பொழுது அணு குண்டின் சக்தி ஒரு சக்தியே அல்ல. இதற்கு எல்லா நோய்களேயும் போக்கும் திறனுண்டு. ராம நாமத்தை மனவொருமையொடு செபிக்க வேண்டுமென்று சொல்வது சுலபமே தவிர உண்மையாக அவ்வாறு செய்தல் மிகவும் கடினமென்பதை ஒத்துக்கொண்டாக வேண்டும். ஆயினும் மனிதனுக்கு உடமையாகக் கூடியவை அனைத்திலும் பெரியது அதுவே.

—ஹரிஜன், 13–10–1946

11. என் இராமன்

இந்து அல்லாதவர் இராம செபத்தில் எப்படிக் கலந்து கொள்ளலாமென்று கேட்டதற்கு காந்திஜி கூறிய பதிலாவது :

“ இராமனும், ராமநாம செபமும் ஹிந்துக்களுக்கே உரியவாகையால் முஸ்லிம்கள் அதில் எப்படிக் கலந்து

கொள்ளலாமென்று ஒருவர் ஆட்சேபிக்கப் புகுங்கால் நான் என்னுள்ளேயே சிரித்துக்கொள்ளுகிறேன். முஸ்லிம்களுக்கு ஒரு தனிக் கடவுளும், இந்துக்களுக்கும், பார்ஸிகளுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் வெவ்வேறு கடவுளுமா இருக்கிருர் ? இல்லை. ஸர்வசக்திமானும் ஸர்வ வியாபியுமான ஒரே கடவுள் தான் உண்டு. அவர் எத்தனையோ பெயர்களால் அழைக்கப்பட்டுவர நாம் நமக்கு மிகவும் பழக்கமான பெயரைச் சொல்லி அவரை நினைக்கிறோம்.

என் இராமன், நான் பிரார்த்தனையில் வழிபடும் இராமன், அயோத்தியின் அரசனை தசரதனுடைய மகனென்ன சரித்திரத்தில் வரும் இராமனல்ல. அவன் என்றும் உள்ளவன், பிறவியற்றவன், ஒப்புவ்மையற்றவன். நான் வணங்குவது அவனையே; நான் உதவி கோருவது அவனிடமே; நீங்கள் செய்யவேண்டியதும் இதுவே. அவன் எல்லோருக்கும் ஒரே வகையில் உரியவன். ஆகவே ஒரு முஸ்லிமோ, வேறு எவனோ அவன் பெயரைச் சொல்வதை ஆட்சேபிப்பதற்குக் காரணமெதுவும் எனக்குத் தெரியவில்லை. ஆனல் கடவுளை இராமனென்ற வகையில் தான் அவன் ஏற்ருக வேண்டும் என்பதல்ல. அவன் தனக்குள்ளேயே அல்லாவென்றோ குதாவென்றோ செபத்தின் சுருதி கெடாத வகையில் சொல்லிக் கொண்டு வரலாம்.

—ஹரிஜன், 28–4–1946

12. இராமன் யார்?

கே:—இராமனென்று சொல்லும்பொழுது தசரத குமாரனான இராமனை அல்ல, அகில உலகையும் ஆளும் ஆண்டவனையே குறிக்கிறேனென்று நீங்கள் பல முறை சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் உங்கள் நாமாவளியில் 'சீதாராம்' என்றும் 'ராஜாராம்' என்றும் சொல்லப் படுவதோடு 'சீதாபதியான இராமன் வெல்க!' என்று அது முடிகிறது. இந்த இராமன் தசரத சக்கரவர்த்தியின் பிள்ளை யன்றி வேறு யார்?

ப:—நாமாவளியில் 'ராஜாராம்', 'சீதாராம்' என் பவை ஓதப்படுகின்றன என்பது உண்மையே. ஆனால் இராமனைவிட அதிக சக்தி வாய்ந்தது நாமம். இந்து மதம் என்பது எல்லையற்ற கடலைப் போன்றது. அதில் மதிப்பிட முடியாத எத்தனையோ இரத்தினங்கள் பொதிந்து கிடக் கின்றன. நீங்கள் அதில் ஆழ்ந்து பார்க்குந்தோறும் புதிய இரத்தினங்களைப் பெறுவீர்கள். இந்து மதத்தில் கடவுள் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். ஆயிரக்கணக்கான வர்கள் இராமனையும் கிருஷ்ணனையும் ஒரு காலத்தில் உயிர் வாழ்ந்திருந்த சரித்திர புருஷர்கள் என்று எண்ணுவதோடு கடவுள் தசரதபுத்திரனான இராமனாகவே உலகத்தில் அவ தரித்தாரென்றும், அவரை வழிபடுவதால் மோக்ஷம் பெறலா மென்றும் உண்மையாகவே நம்புகிறார்களென்பதில் சந்தேக மில்லை. கிருஷ்ணன் விஷயத்திலும் இதுவே பொருந்தும். சரித்திரமும், கவி-கற்பனையும், உண்மையும் தனித் தனியே பிரிக்கமுடியாதபடி கலந்து போயிருக்கின்றன; அவற்றைப் பகுத்தல் இயலாதென்றே சொல்லி விடலாம். கடவுளைக் குறிப்பதற்குச் சொல்லப்படும் எல்லா நாமங் களையும், எல்லா ரூபங்களையுமே அரூபியும், ஸர்வவியாபியு மான இராமனை அறிவிக்கும் இடுகுறிகளென்று நான் கொண்டிருக்கிறேன். ஆகவே என்னைப்பற்றிய வரையில்

சீதாபதியென்றும், தாசரதியென்றும் எவர் வர்ணிக்கப்படுகிருரோ அவரே, ஸர்வ சக்தி வாய்ந்த சாரமாவர்; அதன் பெயர் உள்ளத்தில் பொறிக்கப்படுவதால் எல்லா மன நோய்களும் நடத்தைத் தவறுகளும் உடல் உபாதைகளும் அறவே அகற்றப்படும்.

—ஹரிஜன், 2-6-1946

13. தசரதகுமாரனும் இராமன்

ஒரு ஆரிய சமாஜி எழுதுவதாவது:

"எந்த இராமனை நீங்கள் என்றுமிருப்பவனென்று நம்புகிறீர்களோ அவன் தாசரதியும், சீதாபதியுமான இராமனுய் எப்படி யிருக்க முடியும்? இந்த சந்தேகத்துடனேயே நான் அடிக்கடி உங்கள் பிரார்த்தனைகளில் கலந்துகொள்வதால் நாமாவளியை என்னுல் சேர்ந்து சொல்ல முடிவதில்லை. எல்லோரும் அதைச் சேர்ந்து சொல்ல வேண்டுமென்று நீங்கள் சொல்வது சரியாகையால் எனக்கு இது வருத்தமளிக்கிறது. அனைவரும் கலந்து கொண்டு சொல்லக்கூடிய முறையில் நீங்கள் நாமாவளியை அமைக்க முடியாதா?"

'எல்லோரு'மென்று நான் சொல்வதன் பொருளென்னவென்பதை நான் ஏற்கெனவே விளக்கிவிட்டேன். அது மனவொருமையுடன் கலந்துகொண்டு, அபஸ்வர மின்றி சொல்லக்கூடியவர்களையே குறிக்கிறது. மற்றவரெல்லாம் மௌனமாயிருக்க வேண்டும். ஆனுல் இது ஒரு சிறிய விஷயமே. முக்கியமான விஷயமோ, தசரத புத்திரனுன இராமனை என்றுமிருப்பவனென்று எப்படிக் கருதலாமென்பது. இந்தக் கேள்வியை மகான் துளசிதாசரே எழுப்பி தாமே அதற்கு பதிலும் சொல்லியிருக்கிருர். உண்மையில் பதிலை தர்க்க ரீதியாக ஆராய்ந்து பார்ப்பதற்

கில்லே. அதனால் புத்திக்கு சமாதானம் அளித்துவிட முடியாது. அது ஒரு உள்ளம் மற்றொரு உள்ளத்துடன் பேசும் விஷயம். நான் ஆரம்பத்தில் இராமனை சீதாபதி யென்றே வணங்கி வந்தேன். ஆனால் அவனைப்பற்றிய என் அறிவும், அனுபவமும் வளர வளர என் இராமன் என்றுமிருப்பவன், ஸர்வ வியாபி ஆய்விட்டான். இதிலிருந்தும் இராமன் சீதாபதியாய் இருந்தது போய் விட்டது என்று கொள்ளக்கூடாது. இராமனுடைய தன்மை பெருகப் பெருக சீதாபதியென்ற கருத்தும் விரிந்துகொண்டே வந்திருக்கிறது. உலகம் வளருவது இப்படியே. அவனை தாசரதியென்று மட்டும் கருது கிறவனுக்கு இராமன் ஸர்வவியாபியாக முடியாது. ஆனால் இராமனையே கடவுளென்று நம்புகிறவனுக்கோ, ஸர்வ் வியாபியான இராமனுடைய தந்தையும் ஸர்வவியாபி யாகி விட, தந்தையும் மகனும் ஒருவராகி விடுகிறார்கள். இதெல்லாம் கற்பனையைப்பற்றிய விஷயமென்று சொல்லப் படலாம். அவரவர் "மனம்போல் மாங்கல்யம்" என்று மட்டுமே நான் சொல்லக்கூடும். எல்லா மதங்களுமே அடிப்படையில் ஒன்றேயானால் நாம் அவைகளை இணைக்க வேண்டும். இன்று அவையெல்லாம் வெவ்வேறென்று கருதப்படுவதாலேயே நாம் ஒருவரையொருவர் மாய்த்து வருகிறோம். நமக்கு மதத்தில் சலிப்புண்டாகி விடும் பொழுது நாம் நாஸ்திகர்களாக மாறிவிட, 'நான்' என்ற சிறியதொன்று இருக்கிறதே, அதைத் தவிர்த்து வேறு எதுவும், கடவுளுங்கூட இல்லாது போகிறது. உண்மை யறிவைப் பெற்றவுடன் ஆணவம் அழிந்துபோக, எல்லாம் கடவுள் மயமாகி விடுகிறது. அப்பொழுது இராமன் தசரத புத்திரனாகவும், சீதாபதியாகவும், பரத இலட்சுமணர் களின் சகோதரனாகவும் இல்லாது பிறப்பு இறப்பற்ற கடவுளாகி விடுகிறான். ஆகவே இராமனை தசரத புத்திர னென்று நம்பாமலிருந்தும் பொதுப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்ளுகிறவர்கள் மதிப்பிற்குரியவர்களே.

இராமனைப்பற்றிய இந்த விஷயம் யுக்தி வாதங்களை மீறியது. அதற்குரிய மதிப்பு இருக்கட்டுமே என்ற கருத்தினுல் நான் கொண்டுள்ள நம்பிக்கையை வாசகரிடம் தெரிவிக்கவே முயன்றிருக்கிறேன்.

—ஹரிஜன், 22–9–1946

14. கடவுள் யார், எங்கே இருக்கிருர் ?

கடவுளென்பது ஒரு நபரல்ல. அவர் அடிக்கடி மண்ணில் மனித உருவில் அவதாரமெடுப்பதாகச் சொல்வதில் அரை உண்மையே அடங்கியிருக்கிறது; அது அம்மனிதர் கடவுளின் அண்மையில் வாழ்கிருர் என்பதையே குறிக்கிறது. கடவுள் ஸர்வவியாபியாகையால் அவர் ஒவ்வொரு மனிதன் உள்ளத்திலும் இருக்கவே செய்கிருர். எனவே எல்லோரையுமே கடவுளின் அவதாரங்களென்று சொல்லலாம். ஆனுல் இதனுல் நமக்குப் பயனெதுவுமில்லை. இராமன், கிருஷ்ணன் முதலியவர்கள் கடவுளின் அவதாரங்களென்று அழைக்கப்படுவதற்குக் காரணம் நாம் அவர்களிடம் தெய்வீக சக்திகள் இருந்ததாய்க் கருதி வருவதே. உண்மையில் அவர்கள் மனிதனது கற்பனை சிருஷ்டிகளே. அவர்கள் உண்மையாக இருந்தவர்களா, இல்லையா என்பது மனிதர் உள்ளங்களில் அவர்கள் பெற்றுள்ள இடத்தை பாதிக்கவில்லை. சரித்திரத்தில் வரும் இராமனும் கிருஷ்ணனும் எவ்வளவோ சிக்கல்களைக் கிளப்பிவிட, பலவிதமான யுக்தி வாதங்களைக் கொண்டு நாம் அவைகளுக்குச் சமாதானம் காணவேண்டியிருக்கிறது.

கடவுள் சக்தி என்பதே உண்மை. வாழ்க்கையின் சாரமே அவர். அவர் தூய களங்கமற்ற அறிவே உருவானவர். அவர் என்றுமிருப்பவர். ஆயினும்

விநோதமென்னவென்றால், எல்லோருக்குமே ஸர்வவியாபி யான அவரது சாந்நித்யத்தின் பயனையோ, அவரிடம் அடைக்கலமோ பெறமுடிவதில்லை.

மின்சாரமென்பது ஒரு ஆற்றல்வாய்ந்த சக்தி. அதனிடமிருந்து எல்லோருமே பயன்பெறமுடிவதில்லை. குறிப்பிட்ட சில விதிகளை அனுசரித்தால்தான் அதைத் தோற்றுவிக்கமுடிகிறது. அது ஒரு உயிரற்ற சக்தி. அதுபற்றிய விதிகளைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு மனிதன் போதிய அளவு உழைப்பானாயின் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நாம் கடவுளென்று அழைக்கும் ஜீவசக்தியையும், அதைக் காண்பதற்கு உதவும் சட்டங்களை அறிந்து அனுசரித்துவருவோமானால் நம்முள்ளேயே கண்டுகொள்ளலாம். ஆனால் கடவுளின் சட்டங்களை அறிவதற்கு அதிகக் கடுமையான உழைப்பு தேவையென்பது தெளிவே. அந்தச் சட்டத்தை பிரம சரியம் என்ற ஒரே சொல்லால் குறிப்பிடலாம். பிரமசரி யத்தை அனுஷ்டிப்பதற்குரிய நேர் வழி ராம நாமமே என்று நான் அனுபவத்திலிருந்து சொல்லக்கூடும். துளசி தாசரைப்போன்ற பக்தர்களும், தவசிகளும் நமக்கு இந்த ராஜபாட்டையைக் காட்டியிருக்கிறார்கள். என் அனுபவத் திற்கு எவரும் அனாவசியமான முக்கியத்துவம் அளிக்க வேண்டியதில்லை. *உருளி காஞ்சனில் ராம நாமத்தின் சக்தியை நான் தெளிவாக உணரமுடிந்ததென்று சொன்னால் அநேகமாய் சரியாயிருக்கும். அங்கேதான் நமது நோய் நொடிகள் அனைத்திற்கும் கைகண்ட மருந்து ராம நாமமேயென்று நான் உறுதியாய்க் கூறினேன். அதைப் பூரணமாய் உபயோகிக்கக்கூடியவர்கள் வெளி உதவி அதிகமில்லாமலே சிறந்த பயன்களை விளைவிக்கலாம். இவ்வகையில் சிந்திக்கையில் ஒருவருடைய உள்ளமே

---

* இயற்கை வைத்தியம் செய்யும் ஸ்தாபனம் உள்ள ஒரு இடம்; பம்பாய்க்கு அருகில் உள்ளது.

ராம நாமத்திற்கு அர்ப்பணமாகி விடும்பொழுது அது பிரமசரியத்திற்கு எந்த அளவு உதவுமோ அதற்கும் சம்பிரதாயமாக வழங்கும் பிரமசரியத்தின் சாதனங்களுக்கும் ஒப்புவமையே இல்லையென்று நான் என் அனுபவத்திலிருந்து உதித்த உறுதியோடு கூறமுடியும். அப்பொழுதுதான் அதன் தெய்வீக வனப்பும் வல்லமையும் நமக்குப் புலனுகும்.

—ஹரிஜன், 22–6–1947

15. ராமநாமமும் இயற்கைச் சிகிச்சையும்

இயற்கைச் சிகிச்சைபற்றிய என் கருத்து மற்ற எல்லாவற்றையும் போலவே காலப்போக்கில் வளர்ந்து மாறிக்கொண்டே வந்திருக்கிறது. ஒரு மனிதன் கடவுளின் சாந்நித்யத்தை சம்பூர்ணமாய் உணர்ந்ததன் பயனுய் விருப்பு வெறுப்பற்ற நிலையை எய்திவிடுவானுயின் தீர்க்காயுளுக்குத் தடையான முட்டுக்கட்டைகளையெல்லாம் கடந்துவிடலாமென்று எத்தனையோ வருஷங்களாக நான் நம்பி வந்திருக்கிறேன். ஒரு மனிதன் புலன்களுக் கெட்டாத அந்த சக்தியைப் பூரணமாய் நம்புவதோடு புலன்களின் பிடிப்பிலிருந்து முற்றிலும் விடுபட்டிருப்பானுயின் அவனுடைய உடல் உள்ளுக்குள்ளேயே மாறுகிறதென்ற முடிவுக்கு–நிதர்சனமாய்ப் பார்த்தும் சாஸ்திரங்களைப் படித்ததன் விளைவாகவும்–வந்திருக்கிறேன். இது வெறும் விருப்பத்தினுலேயே விளைவதல்ல. இதற்கு இடையரு விழிப்பும் பயிற்சியும் தேவை. இவை இரண்டுமிருந்தும் கடவுளின் அருள் இல்லையேல் மனித முயற்சிகளினுல் பயனில்லை.

—பத்திரிகைச் செய்தி, 12–6–1945

16. இயற்கைச் சிகிச்சை

இயற்கைச் சிகிச்சையென்பதற்கு மனிதனுக்குப் பொருத்தமான வைத்தியமென்பது பொருள். மனிதனென்பது மனிதப்பிராணியைக் குறிப்பதோடமையாது எவன் தன் உடலோடுகூட மனமும் ஆன்மாவும் பெற்றிருக்கிருனே அவனையே குறிக்கும். அத்தகைய ஜீவனுக்கு ராம நாமமே மிகவும் உண்மையான இயற்கைச் சிகிச்சையாகும். அது என்றும் பழுது படாத மருந்து. ராம பாணம் அல்லது பிழைபடாத மருந்து என்ற சொற்றொடர் தோன்றியது இதிலிருந்தே. மனிதனுக்கு இதுவே தகுந்த மருந்து என்பதை இயற்கையும் சுட்டிக் காட்டுகிறது. ஒரு மனிதன் எவ்வகை நோயினல் வருந்திக் கொண்டிருந்த போதிலும் சரி, மனவொருமையுடன் ராம நாமத்தை செபித்து வருவாஞயின் குணமடைவது உறுதி. கடவுளுக்கு எத்தனையோ பெயர்களுண்டு. ஒவ்வொருவரும் தமக்கு மிகவும் உகந்த பெயரொன்றைப் பொறுக்கிக்கொள்ளலாம். ஈசுவரன், அல்லா, குதா, 'காட்' என்ற எல்லாம் ஒன்றையே குறிக்கின்றன. ஆனல் செய்யும் செபம் கிளிப்பாடமாய் இருத்தலாகாது. செயலினல் ஓரளவு நிரூபிக்கப்படக்கூடிய நம்பிக்கையினின்றும் செபம் தோன்றவேண்டும். செயல் எப்படி இருக்கவேண்டும்? மண், நீர், ஆகாயம், சூரிய ஒளி, காற்று என்ற எந்தப் பஞ்சபூதங்களினல் உடல் அமைக்கப்பெற்றிருக்கிறதோ, அவைகளைத் தவிர்த்து வேறெதையுங்கொண்டு சிகிச்சைக்குப் பாடுபடாதிருப்பதே செயல் எனப்படுவது. இவற்றுடன் ராம நாமம் இசையில் சுருதியைப்போல் எப்பொழுதும் இணைந்திருக்க வேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. இவை எல்லாவற்றையும் செய்த பிறகும் மரணம் வந்தே தீருமானல் நாம் அதைப் பொருட்படுத்தலாகாது; ஏன், அதை வரவேற்கவேண்டும். உடலை அழியாமல் என்றும் இருக்கச்செய்வதற்கு உதவக்

கூடிய உபாயம் எதையும் விஞ்ஞானம் இதுவரையில் கண்டுபிடிக்கவில்லை. அழிவின்மையென்பது ஆன்மாவின் ஒரு இலட்சணம். அது என்றும் இருக்கக்கூடியதே என்பதில் சந்தேகமில்லை. ஆனல் அதன் தூய்மையை வெளியிட முயலுதல் மனிதனுடைய கடமையாகும்.

மேலே கண்ட வாதத்தை ஒப்புகிறேமென்ருல், அது இயற்கை வைத்தியத்தின்படி சிகிச்சைக்கு நாம் கையாளக்கூடிய சாதனங்களை ஒரு வரம்புக்கு உட்படுத்தி விடுகிறது. அதன் மூலமாய் பெரிய ஆஸ்பத்திரிகள், பிரபல டாக்டர்கள் என்பவை போன்ற ஏராளமான சாமக்கிரிகளினின்றும் மனிதன் பாதுகாக்கப்படுவான். உலகத்திலுள்ள மக்களில் பெரும்பாலோருக்கு இவை என்றுமே கட்டிவரக்கூடியவையல்ல. ஆகவே பெரும்பாலோர் எதைப் பெறுவது சாத்தியமில்லையோ, அதற்கு ஒரு சிலர் மட்டும் ஏன் ஆசைப்படவேண்டும்?

—ஹரிஜன், 3–3–1946

17. ராமநாமம்–பழுதுரு மருந்து

3–3–1946 தேதி 'ஹரிஜனி'ல் இயற்கை வைத்தியத்தைப்பற்றி நான் எழுதியிருந்த கட்டுரையைப் படித்த ஸ்ரீகணேச சாஸ்திரி ஜோஷி என்ற வைத்தியர், ராம நாமத்தை ஸகல ரோக நிவாரணி என்று கருதுவதற்கு ஆயுர்வேதத்திலும் ஏராளமான ஆதாரமிருப்பதாக என்க்குத் தெரிவிக்கிருர். இயற்கை வைத்தியம் மதிப்பிற்குரிய ஸ்தானத்தைப் பெற்றிருக்க ராம நாமமோ அதில் மிகவும் முக்கியமானதாகும். சரகர், வாக்படர் முதலிய வைத்தியத்தைக் கரைகண்ட மஹாபுருஷர்கள் பண்டைக்காலத்தில் சாத்திரம் எழுதிய பொழுது எல்லோரும் கடவுளை விஷ்ணு என்று அழைத்துவந்தார்களே தவிர இராமன் என்று அல்ல. நான் சிறுவயது முதலே துளசிதாசரிடம் பக்தி கொண்டு வந்திருப்பதால் கடவுளை இராமனென்றே எப்

பொழுதும் வழிபட்டு வந்திருக்கிறேன். ஆனால் எல்லா நாடுகளிலுமுள்ள எல்லா பாஷைகளிலும் கடவுளின் பெயரைக் குறிப்பதற்கு ஓங்காரத்திலிருந்து தொடங்கி என்னென்ன பெயர்கள் வழங்குகின்றனவோ, அவற்றைச் சொல்லிவந்தாலும் பயன் ஒன்றேயென்று நான் அறிவேன். அவனும் அவனுடைய நியதி அல்லது சட்டமும் வெவ்வேறல்ல. ஆகவே அவனுடைய நியதிக்கு ஒத்து நடப்பதே அவனுக்குச் செய்யும் சிறந்த வழிபாடாகும். அவனுடைய நியதியில் வேறுபாடின்றி ஒன்றிவிடும் ஒருவன் அவன் பெயரை வாயினால் செபித்துக்கொண்டிருக்கத் தேவையில்லை. அதாவது கடவுளை தியானித்தல் என்பது மூச்சுவிடுவதைப்போல் இயற்கையாகி விடுகிறவனுக்கு கடவுளறிவும் கடவுளின் நியதியின்படி வாழ்வதுமே இயற்கைபோன்ருகி விடுகின்றன. அத்தகையவனுக்கு வேறு சிகிச்சையெதுவுமே தேவையில்லை.

சிகிச்சைகள் அனைத்திற்கும் அரசனைப்போன்ற இது கையிலேயே இருந்து வந்தும் நமக்கு இதைப்பற்றி அதிகம் தெரியாதிருப்பதற்கும், தெரிந்தவர்களும் அவனை நினையாதிருப்பதற்கும், நினைப்பவர்களும் உதட்டினல் ஏதோ முணுமுணுப்பதைத் தவிர மனவொருமையொடு செபியாதிருப்பதற்கும் காரணமென்னவென்ற கேள்வி எழுகிறது. கிளிப்பாடமாய்க் கடவுளின் பெயரைச் சொல்லிவருதல் அவனை ஸகல ரோக நிவாரணியாகக் கருதத் தவறியதையே காட்டுகிறது.

அவர்கள் எப்படிக் கருதுவார்கள்? இந்தச் சிறந்த மருந்தை டாக்டர்களோ, வைத்தியர்களோ, ஹக்கீம்களோ வேறு வைத்தியத் தொழில் செய்பவர்களோ கொடுப்பதில்லை. இவர்களுக்கெல்லாம் இதில் நம்பிக்கையே கிடையாது. ஒவ்வொரு வீட்டிலுமே கங்கையின் ஊற்றைக் காணலாமென்பதை இவர்கள் ஒப்புவார்களாயின் இவர்களுடைய தொழில் அல்லது ஜீவனுேபாயத்திற்கே ஆபத்து வந்துவிடுமே! ஆகவே இவர்கள் தம்மிடமுள்ள சூர்ணங்

களையும், திராவகங்களையுமே பழுதுரு மருந்துக ளென்று நம்பவேண்டிய நிர்ப்பந்தத்தில் சிக்கியிருக்கிறார் கள். இவை டாக்டருக்குச் சோறு போடுவதோடுகூட நோயாளியும் இவற்றினால் உடனே குணமுறுவதாய் உணருகிறானென்று தோன்றுகிறது. ஒரு வைத்தியத் தொழில் புரிபவன் ஒரு சிலரைக்கொண்டு இன்னார் எமக்குக் கொடுத்த சூர்ணத்தினால் எம் நோய் குணமாகிவிட்ட தென்று கூறச் செய்வானாயின் அவன் தொழில் ஸ்திரமாகி விடுகிறது. டாக்டர்களுக்கே கடவுளின் நாமத்தின் அபார சக்தி தெரியாதிருக்கும் வரையில் அவர்கள் தம்மிடம் வரும் நோயாளிகளுக்கு அதை மருந்தாகக் கருதி செபிக்கும்படி சொல்லி வருவதனால் உண்மையில் பயனெதுவும் விளையாது என்பதை மனதிலிருத்தத் தவறக்கூடாது. ராமநாம மென்பது சிறுவர் புத்தகத்தில் காணப்படும் வெறும் நீதி வாக்கியமல்ல. அது அனுபவத்தின் மூலமாய் உணரப்பட வேண்டியதொன்று. சொந்த அனுபவத்தில் அதன் சக்தி களை உணர்ந்திருப்பவரே அன்றி வேறு எவரும் பிறருக்கு அதை எடுத்துச் சொல்லக்கூடாது.

மேலே கூறிய வைத்தியராஜர் எனக்காக நான்கு சுலோகங்களைக் குறித்து அனுப்பியிருக்கிறார். இவற்றில் சரகருடைய சுலோகமே மிகவும் சுளுவாயும் பொருத்தமாயு மிருக்கிறது. இதன் கருத்து விஷ்ணுவின் ஆயிரம் நாமங் களுள் ஏதேனும் ஒன்றை ஒருவன் நன்கு செபித்து வந்தா லும் அவனுடைய நோய்களெல்லாம் நீங்கிவிடும் என்பது:

विष्णु सहस्रमूर्धानं चराचरपतिं विभुम् ।
स्तुवन् नामसहस्रेण ज्वरान् सर्वान् व्यपोहति ॥

—ஹரிஜன், 24–3–1946

18. இயற்கை வைத்தியத்தில் ராமநாமத்தின் இடம்

இயற்கை வைத்தியுரிடமுள்ள மருந்துகள் எல்லாவற்றிலும் ராம நாமமே தலைசிறந்த மருந்து. இதைக் குறித்து எவரும் வியப்புறத் தேவையில்லை. ஒரு பிரபல ஆயுர்வேத பண்டிதர் அன்று என்னிடம், "நான் என் ஆயுள் முழுவதும் நோயாளிகளுக்கு என்னென்னவோ மருந்துகள் கொடுத்துவந்திருக்கிறேன். ஆனால் உடல் நோய்களுக்கு ராம நாமத்தைப் பரிகாரமென்று நீங்கள் கூறியபிறகு நீங்கள் சொல்வதற்கு வாக்படர், சரகர் ஆகிய எங்கள் ஆசாரியர்களின் நூல்களிலேயே ஆதாரமிருப்பது நினைவுக்கு வந்தது" என்றார். உலகம் தோன்றிய காலந்தொட்டே ஆன்மிக நோய்களுக்கு ராம நாமம் மருந்தாக உபயோகப்பட்டு வந்திருக்கிறது. பெரியதைக் கூறிவிட்டால் அதில் அடங்கிய சிறியதைத் தனியாய்ச் சொல்லத் தேவையில்லை. ராம நாம செபம் நமது உடற்கோளாறுகள் அனைத்திற்கும் தலைசிறந்த மருந்தாக உதவுமென்று நான் சொல்லுகிறேன். இயற்கை வைத்தியன், தன் நோயாளியினிடம் "என்னைக் கூப்பிடுங்கள், உங்கள் நோயைப் போக்கிவிடுகிறேன்" என்று கூறமாட்டான். அவன் எல்லா உயிர்களிலும் இருந்து வரும் ஸகலரோக நிவாரண தத்துவத்தைக் குறிப்பிட்டு அதன் உதவியை நாடி அதைத் தம் வாழ்க்கையில் இயங்கும் சக்தியாகச் செய்து கொள்வதனால் எப்படித் தாமே தம் நோய்களைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதையே தெரிவிப்பான். இந்தத் தத்துவத்தின் சக்தியை இந்தியா உணரக்கூடுமானால் நாம் சுதந்திரர்களாய் இருந்து வருவதோடு நம் நாடு இன்று நோய்களுக்கும் அசௌக்கியங்களுக்கும் உறைவிடமாய் இருப்பது போய் ஆரோக்கியமானவர்கள் வாழும் நாடாய்விடும்.

ஆனால் ராம நாமம் பயனளிப்பதற்கு சில நிபந்தனை

களும், நிர்ப்பந்தங்களுமுண்டு. ராமநாமம் என்பது செப்பிடு வித்தையைப் போன்றதல்ல. ஒருவன் வயிறு புடைக்கத் தின்றுவிட்டு, மீண்டும் தின்பதற்காக வயிற்று வலியெதுவும் வராமல் செய்து கொள்ளவேண்டி மருந்து சாப்பிட விரும்பினுனையின் அவனுக்கு ராம நாமம் பயன் படாது. ராம நாமத்தை நல்ல காரியத்திற்கு உபயோகிக்க லாமே தவிர கெட்ட நோக்கத்துடன் அதை என்றும் கையாளவே கூடாது. அவ்வாறில்லாவிடில் திருடர்களும், கொள்ளை அடிப்போருமே பெரிய பக்தர்களாய் விளங்கு வார்கள். ராம நாமம் தூய உள்ளமுள்ளவர்க்கும் தூய்மையைப் பெறவும் தூயோராகவும் விரும்புகிறவர்க் குமே உரியது. போகக்கருவியாய் அது என்றும் பயன் படாது. அளவுக்கு மிஞ்சிய உணவுக்கு மருந்து பட்டினி கிடப்பதேயன்றி பிரார்த்தனை செய்வதல்ல. பட்டினி யிருந்தான பிறகே பிரார்த்தனைக்கு உரிய சமயம் வரும்; அது பட்டினியைச் சுலபமாய்ச் சமாளிக்க உதவும். இவ்வாறே நீங்கள் உடலில் மருந்துக்குமேல் மருந்தாக வைத்துத் திணித்துக்கொண்டே ராம நாமத்தைச் சொல்லிக் கொண்டிருத்தல் அர்த்தமில்லாத கேலிக்கூத்தாகுமே தவிர வேறல்ல. தன் திறமையை நோயாளியின் துர்ப்பழக்கங்களைப் போஷிக்கப் பயன்படுத்தும் ஒரு டாக்டர் தன்னை இழிவுபடுத்திக் கொள்வதோடு தன் நோயாளியையும் தாழ்வுறச் செய்கிறுன். *மனிதன் தன் உடலை தன்னைச் சிருஷ்டித்த கடவுளை வழிபடுவதற்கு உதவும் கருவியாகக் கருதுவதை விடுத்து அதையே வழி

* நமக்கு ஆன்மாவின் நோய்களைப் போக்கும் வைத்தியர் களேயன்றி உடற் கோளாறுகளுக்கு மருந்தளிப்போர் தேவை யில்லை. ஆஸ்பத்திரிகளும், டாக்டர்களும் ஏராளமாகப் பெருகி வருதல் நமது நாகரிகத்திற்கு அறிகுறியல்ல. நாமும் பிறரும் உடல் உபசரிப்புக்களைக் குறைக்கக் குறைக்க நமக்கும் உலகத்திற்கும் நன்மையுண்டு.

—யங் இந்தியா, 29–9–1927

படுவதையும், அதை எவ்வகையிலேனும் பத்திரமாய்ப் பாதுகாக்கும் பொருட்டு பணத்தைப் பணமாய்க் கருதாது வாரி இறைப்பதையும் விட அதிகப் பரிதாப நிலை யொன்றை எய்த முடியுமா? இதற்கு மாருக ராம நாமம் நம் நோய்களைப் போக்கும்பொழுதே நம்மைத் தூயோரா யும் செய்துவிடுவதால் நம்மைக் கைதூக்கி விடுகிறது. அதில்தான் அதன் உபயோகமும், அதன் வரம்பும் அடங்கி யுள்ளன.

—ஹரிஜன், 7—4—1946

19. தலைசிறந்த மருந்து

"நீங்கள் பின்வருமாறு சொல்லியிருக்கிறீர்கள்:

"'ஒருவன் எத்தகைய நோயினல் பீடிக்கப்பட்டிருந்த போதிலும் மனவொருமையுடன் ராம நாமத்தை செபிப்பதே அதற்குக் கைகண்ட மருந்து.' —ஹரிஜன், 3–3–1946

"'மண், நீர், ஆகாயம், சூரிய ஒளி, காற்று என்ற எந்த பஞ்ச பூதங்களினுல் உடல் அமைந்திருக்கிறதோ அவற்றைக் கொண்டே சிகிச்சைக்கான உபாயங்களைக் கண்டு செய்வதோடு மனிதன் திருப்தியுறவேண்டும்.' —ஹரிஜன், 3–3–1946

"'நம் உடற்கோளாறுகளுக்கும் ராம நாம செபமே தலை சிறந்த மருந்தென்பது என் அபிப்பிராயம்.'

—ஹரிஜன், 7–4–1946

"முதலில் இயற்கை வைத்தியத்தில் இந்தப் புதிய முறையை நீங்கள் புகுத்தியபொழுது நம்பிக்கையின் அடிப் படையில் செய்யப்பட்டுவரும் 'கிறிஸ்தவ விஞ்ஞான சிகிச்சை' அல்லது 'மனே சிகிச்சை'யையே வேறுவகையில் இவ்வாறு குறிக்கிறீர்களென்று எண்ணினேன். எல்லாவகை வைத்தியங் களிலும் இவற்றிற்கும் தமக்குரிய இடமுண்டு. மேலே குறித் துள்ள முதல் மேற்கோளுக்கு நான் இதே வகையில் பொருள் கொண்டேன். மேலே குறிக்கப்பட்டுள்ள இரண்டாவது வாக்கியத்தையோ புரிந்து கொள்வதே கஷ்டமாயிருக்கிறது. பார்க்கப்போனல் நீங்கள் எந்தப் பஞ்சபூதங்களைக் குறிப்பிடு கிறீர்களோ, எவற்றைத் தவிர வேறு எதையும் மருந்தாக

உபயோகிக்கக் கூடாதென்று சொல்லுகிறீர்களோ அவைகளைத் தவிர வேறு எவைகளைக்கொண்டும் மருந்துகளைத் தயாரிப்பதே சாத்தியமில்லையென்பது தெரிந்த விஷயமே.

"நம்பிக்கை வேண்டும் என்பதையே நீங்கள் வற்புறுத்துகிறீர்களென்றால் எனக்கும், உங்களுக்கும் வாக்குவாதமே இல்லை. நோயாளியும் நம்பிக்கையின் மூலமாய் குணம் பெறுவதில் வைத்தியருடன் ஒத்துழைக்க வேண்டும். ஆனால் நமது உடற்கோளாறுகளையும் நம்பிக்கை ஒன்றைக் கொண்டே குணப்படுத்திவிடலாமென்பதை நம்புவது சிரமமாகும். இரண்டு வருஷங்களுக்குமுன் என் சிறு பெண்ணுக்கு இளம்பிள்ளை வாதம் வந்தது. அந்தக் குழந்தையை ஆயுள் முழுமையும் அங்கஹீனமாய் இருக்கவிடாது காப்பாற்ற உதவியது மிகவும் நவீனமான சிகிச்சைமுறையே. தனக்கு வந்துள்ள இளம்பிள்ளை வாதத்தைப் போக்கிக் கொள்வதற்காக இரண்டரை வயதுள்ள குழந்தையை ராமநாம செபம் செய்யும்படி சொல்வதிற் பயனில்லையென்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். தன் குழந்தையின் சார்பில் தானே செபத்தைமட்டும் செய்து கொண்டு வைத்தியமெதுவும் செய்யாமலிருந்து விடுவதற்கு எந்தத் தாயையும் உங்களால் உடன்படச் செய்யமுடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

"நீங்கள் சரகருடைய நூலிலிருந்து மார்ச்சு 24-ம் தேதி பத்திரிகையில் எடுத்துத் தந்துள்ள மேற்கோள் எனக்குச் சமாதானம் அளிக்கக்கூடியதாயில்லை. எவ்வளவுதான் புராதனமானதாயிருந்த போதிலும், எவ்வளவு அதிகாரத்துடன் சொல்லப் படுவதாயினும் நமது உள்ளத்திற்கு உகந்ததாயில்லாத வரையில் எதையும் ஏற்கத் தேவையில்லையென்று எனக்கு நீங்களே தான் போதித்திருக்கிறீர்கள்."

என்று வாலிபர்களின் ஆசிரியர் ஒருவர் எழுதுகிறார்.

ராமநாமம், நம்பிக்கை சிகிச்சையையும் கிறிஸ்தவ விஞ்ஞான சிகிச்சையையும் போல் தோன்றக்கூடும்*

---

* கடைசி தினத்தன்று லார்ட் லோதியன் கிறிஸ்தவ விஞ்ஞானத்தைக் குறிப்பிட்டு அதைப்பற்றி காந்திஜியின் அபிப்பிராயமென்னவென்று கேட்டார். "மனிதன் கடவுளிடம்

ஆயினும் இது அவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தாகும். ராம செபமென்பது உண்மைத் தத்துவமொன்றைக் குறித்து நிற்கும் இடுகுறியே. ஒருவர் கடவுளின் சாந்நித்

பிரிக்கமுடியாத உறவு கொண்டிருப்பதால் அவன் தனக்கும், கடவுளுக்கும் உள்ள அகற்றமுடியாத உறவை எந்த அளவுக்கு உணருகிருனே அதே அளவுக்கு அவன் பாவங்கள், நோய்கள் ஆகியவற்றிலிருந்து விடுபடுவான். நம்பிக்கை சிகிச்சை முறை இதுவே. கடவுள் சத்தியமும், ஆரோக்கியமும், அன்பு மாவார்." என்ருர்.

காந்திஜி சொன்னதாவது: "அவரே வைத்தியருமாவார். எனக்கும் கிறிஸ்தவ விஞ்ஞானத்திற்கும் கருத்து வேற்றுமை யெதுவுமில்லை. நான் இந்தத் தத்துவத்தை அப்படியே ஏற்றுக் கொண்ட போதிலும் எனக்கு இந்தக் கிறிஸ்தவ விஞ்ஞானிகள் பலரிடம் நம்பிக்கை கிடையாது. புத்திபூர்வமாய் ஒன்றை நம்புவது என்பது வேறு, முழுமனதுடன் ஒரு உண்மையை ஏற்பதென்பது வேறு. எல்லா நோய்களுமே பாவமாகு மென்பதையும், ஒரு மனிதனுக்கு இருமல் வருவது அவனுடைய பாவத்திஞலேயே என்பதையும் நான் அப்படியே ஒப்புக் கொள்ளக்கூடும். என் ரத்தஅமுக்கம் ஓய்வில்லாமல் நான் செய்துவரும் அதிக வேலையின் விளேவே. ஆனுல் நான் எதற் காக அளவுக்கதிகமாய் வேலை செய்திருக்க வேண்டும்? எல்லா அதிக வேலைகளும் அவசரங்களும் பாவமே. டாக்டர்களின் உதவி அனைத்தையும் தவிர்ப்பது முற்றிலும் சாத்தியம் என்பதை நான் நன்கு அறிவேன். ஆனுல் கிறிஸ்தவ விஞ்ஞானிகள் உடல் நோயையும் ஆரோக்கியத்தையும் பிரமாதப் படுத்துவதையே நான் புரிந்துகொள்ள முடியவில்லை."

லார்ட் லோதியன் சொன்னதாவது: "ஒருவர் நோயே பாவமென்று உணர்ந்துகொள்ளும் வரையில் அது சரியே. கீதையும் ஐம்புலன்களின் விளைவுகளை மாயையென்று கூறி அவற்றை விலக்க வேண்டுமென்று போதிக்கிறது. கடவுள் உயிரும், அன்பும், ஆரோக்கியமுமாவார்."

"நான் அதை ஒரு சிறிது மாற்றிச் சொல்லியிருக்கிறேன். கடவுளே சத்தியம் என்பதும், கடவுளே உயிரென்பதும் ஒன்றே.

யத்தை ஸம்பூர்ணமாய்த் தம் அகத்துள் உணரும் கணத்திலேயே அவருடைய உடற்கோளாறுகளும் மனோவியாகூலங்களும் நடைத்தவறுகளும் மறைந்து போகின்றன. நாம் இம்மாதிரி இருப்பவர் எவரையும் காணாமையினாலேயே இவ்வாறு இருக்கக்கூடும் என்பது பொய்யாகிவிடாது. கடவுளிடம் நம்பிக்கையில்லாதவர்களுக்கு என்னுடைய வாதங்கள் பயன்படாவென்பது தெளிவு. ராம நாமத்தில் அடங்கியுள்ள உண்மையை ஓரளவுக்கு கிறிஸ்தவ விஞ்ஞானிகளும் நம்பிக்கை மருத்துவரும், மனோவைத்தியர்களும் நிரூபிக்கிறார்கள். என்றால் வாசகர்களை தர்க்க ரீதியாகவே முற்றிலும் சமாதானப்படுத்திவிட முடியாது. சர்க்கரையைத் தின்று பார்த்திராத ஒருவரை அதைச் சாப்பிட்டுப்பார்க்கச் சொல்லாமலே சர்க்கரை தித்திக்குமென்று எப்படி ஒப்பச் செய்வது?

தெய்வீக மந்திரத்தை முழு மனதுடன் செபிப்பதற்கு உரிய நிபந்தனைகளையெல்லாம் நான் இங்கே திரும்பக் கூறப்போவதில்லை.

ராம நாமத்தில் சிறிதேனும் நம்பிக்கையுள்ளவர்களுக்கே சரகருடைய மேற்கோள் பயன்படும். மற்றவர்கள் அதை கவனியாது ஒதுக்கிவிடலாம்.

குழந்தைகள் பொறுப்பில்லாதவர்கள். ராம நாமம் அவர்களுக்காக ஏற்பட்டதல்ல என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் தம் பெற்றோரின் அன்பை நம்பி இருந்து வருகிறவர்கள். பெற்றோர்க்கு அவர்களிடத்திலும், சமூகத்தினிடத்திலும் எவ்வளவு பெரிய பொறுப்பு உண்டு என்பதையே அவர்கள் காட்டுகிறார்கள். தங்கள் குழந்தைகளின் நோய்க்குத் தம் ராம செபத்தையே பரிகாரமென நம்பியிருக்

பிறகு சத்தியமும் அன்பும் ஒரே நாணயத்தின் இரு முகங்களென்றும், நமது இலட்சியமான சத்தியத்தை எய்துவதற்கு அன்பு உபாயமாகுமென்றும் சொல்லியிருக்கிறேன்'' என்றார் காந்திஜி.

—ஹரிஜன், 29–1–1938.

கும் அளவுக்குத் தம் குழந்தைகளின் நோய்களை அசட்டை செய்துவந்த பெற்றோர்களை நான் அறிவேன்.

இறுதியாக, எல்லாமே மருந்துகளும்கூட, பஞ்ச மகா பூதங்களிலிருந்து தோன்றியவைதாமே என்ற வாதம் அவசரத்தினின்று விளைந்த கருத்துக் குழப்பத்தைக் காட்டுகிறது. அதை நான் குறிப்பிடுவதே அதைப் போக்குவதற்குப் போதுமானது.

—ஹரிஜன், 28-4-1946

20. ஆயுர்வேதமும் இயற்கைச் சிகிச்சையும்

ராம நாமப் பிரசாரமும் தூய வாழ்க்கையும் நோய் வாராது தடுக்க உதவும் சிறந்த செலவில்லா உபாயங்கள் என்ற விஷயத்தில் எனக்குச் சந்தேகமில்லை. டாக்டர்களும், ஹக்கீம்களும், வைத்தியர்களும் ராம நாமத்தை மருந்துகளுளெல்லாம் தலைசிறந்ததெனக் கருதி உபயோகியாதிருப்பதே வருத்தம் தருகிறது. மக்களைக் குருட்டு நம்பிக்கை யென்னும் பாழ்ங்கிணற்றில் மேலும் அழுத்துவதற்கு உதவும் மாந்திரீகர்களின் கருவியாயன்றி இப்பொழுது வழங்கும் ஆயுர்வேத முறைகளில் அதற்கு வேறு இடமெதுவும் அளிக்கப்படவில்லை. உண்மையில் ராம நாமத்திற்கும், குருட்டு நம்பிக்கைக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. அது இயற்கையின் விதிகளுள்ளே உயர்ந்த விதி. அதை அனுசரிப்பவன் நோய்களிலிருந்து விடுபட, அதை மறந்திருப்பவன் நோய்களில் சிக்குகிறான். நோய் வாராது பாதுகாக்கும் விதியே நோய் வந்துவிட்டபொழுது அதைப் போக்கவும் உதவுகிறது. ராம நாமத்தை செபித்துக் கொண்டே தூய வாழ்க்கை நடத்துவோனுக்கு நோயே ஏன் வரவேண்டும் என்று கேட்பது சரியே. இயற்கையிலேயே மனிதன் குறைபாடு உள்ளவன்.

அறிவுள்ள மனிதன் பூர்ணத்துவத்தை எய்தப் பாடு படுகிறான்; ஆனால் அதை ஒருபொழுதும் எய்துவதில்லை. தனக்குத் தெரியாமலே அவன் வழியில் இடறி விழுகிறான். கடவுளின் விதிகள் அனைத்தும் தூய வாழ்க்கையில் அடங்கி யிருக்கின்றன. முதலில் நாம் நமது சக்தியின் வரம்பை உணரவேண்டும். வரம்பை மீறியவுடனே நோய்வாய்ப் படுகிறோம் என்பது நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். இவ்வாறு தேவையை யொட்டி ஏற்றக் குறைவின்றி உணவு கொள்ளப் படும்பொழுது நமக்கு நோயே வருவதில்லை. ஆனால் நமக்கு எது பொருத்தமான உணவு என்பதை நாம் எப்படி உணர்வது? இம் மாதிரியான எத்தனையோ சிக்கல்கள் ஏற்படலாம். இதில் சாரமென்னவென்றால், ஒவ்வொருவரும் தம்தம் டாக்டரா யிருந்துகொண்டு தம்தமக்குரிய வரம்பைக் கண்டுபிடிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் மனிதன் 125 வயது வரையில் உயிர் வாழ்வான் என்பதில் சந்தேகமில்லை.

தாம் விதிகளை ஆராய்ந்து அவற்றிற்கு ஒத்தபடி நடப்பதற்கு அதிகமாய் வேறு எதுவும் செய்வதில்லையாகையால் தாமே சிறந்த இயற்கை வைத்தியரென்று டாக்டர் நண்பர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள். எதை வேண்டுமானாலும் இந்த வகையில் நாம் வியாக்கியானம் செய்து தப்பி விடலாம். ராம நாமத்திற்கு அதிகமாகச் செய்யப்படும் எதுவும் உண்மையான இயற்கைச் சிகிச்சைக்கு முரணானதென்று நான் கூற விரும்புகிறேன். இந்த மூலதத்துவத்திலிருந்து நாம் விலக விலக, இயற்கைச் சிகிச்சையிலிருந்தும் விலகுவோர் ஆவோம். இத்தகைய கருத்தினால் பஞ்ச பூதங்களைப் பிரயோகிப்பதோடு நான் இயற்கைச் சிகிச்சை முறையைக் கட்டுப்படுத்த விரும்புகிறேன். ஆனால் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் அல்லாமல் ஏழைகளுக்கு உதவும் ஒரே கருத்துடன் தம் அருகாமையில் பயிராவதோ அல்லது தாமே பயிர்செய்வதோவான வேர் – பச்சிலைகளை

உபயோகிக்கும் வைத்தியனும் தான் இயற்கை வைத்தியனேயென்று உரிமை கொண்டாடலாம். ஆனால் அத்தகைய வைத்தியர்கள் நமக்கு எங்கே கிடைக்கிறார்கள்? இந்தக்காலத்தில் அவர்களில் பெரும்பாலோர் பணம் பண்ணுவதிலேயே முனைந்திருக்கிறார்கள். அவர்கள் ஆராய்ச்சி எதுவும் செய்யாததோடு அவர்களின் பேராசையினாலும் அவர்கள் அறிவு வளர்ச்சி விஷயத்தில் காட்டும் சோம்பேறித்தனத்தினாலுமே ஆயுர்வேத சாஸ்திரம் இப்பொழுது அதோகதியை அடைந்திருக்கிறது.

—ஹரிஜன், 19-5-1946

21. உருளி காஞ்சனில்

உருளி காஞ்சனில் கூடியிருந்த கிராம மக்களை நோக்கி ராம நாமம் உடற் கோளாறுகளனைத்தையும் போக்கக்கூடிய முதல்தரமான இயற்கை ஔடதமென்று காந்திஜி அறிவித்தார்: "நாம் சிறிதுமுன் பாடிய பாடலில் பக்தர், 'ஏ ஹரி, நீயே மக்களின் துன்பங்களைப் போக்குவோன்' என்று கூறியிருக்கிறார். இதில் அளிக்கப்பட்டுள்ள அபயம் உலகம் அனைத்திற்கும் உரியது. இது குறிப்பிட்ட ஒரு உடற் கோளாறுக்கே உபயோகமானதென்று இதில் வரையறை செய்யப்படவில்லை" என்று கூறி வெற்றி எய்துவதற்குள்ள நிபந்தனைகளைத் தெரிவித்தார்: "ராம நாமம் நல்ல பயன் தருகிறதா இல்லையாவென்பது அதற்குப் பக்கபலமாயுள்ள உயிருள்ள நம்பிக்கையைப் பொறுத்திருக்கிறது. நீ கோபத்திற்கு பலியாகி உடலைப் பாதுகாப்பதற்காகவன்றி வெறும் சுகத்திற்காகவே தின்பதும் தூங்குவதுமாய் இருப்பாயாகில் உனக்கு ராம நாமத்தின் பொருள் தெரியாதென்றே ஏற்படும்; நீ அதை செபிப்பது வெறும் உதட்டால் உச்சரிப்பதாவே முடியும். ராம நாமம் பயன் தருவதாயிருக்கவேண்டுமென்றால் அதை செபிக்கும்பொழுது அது உன்னை முற்றிலும் ஆட்

கொண்டுவிடவேண்டுவதோடு உன் வாழ்க்கையிலும் அது பூரணமாய்ப் பிரதிபலிக்கவேண்டும்.''

முதல் நோயாளிகள் :—மறுநாள் காலையிலிருந்து நோயாளிகள் வரத்தொடங்கினர். சுமார் முப்பது பேர் இருக்கும். காந்திஜி அவர்களுள் 5–6 பேரைப் பரிசோதித்து அவர்கள் எல்லோருக்குமே அவரவர் நோயை அனுசரித்து ஒரு சிறிது மாற்றத்துடன் ராம நாம செபம், வெயில் குளியல், தேய்ப்பு, இடைமுழுக்கு, வயிற்றிலுள்ள கழிவுகளைப் போக்க உதவக்கூடிய ஆகாரங்களான பால், மோர், பழம், பழச்சத்து, ஏராளமான சுத்தஜலம் முதலிய ஒரேவகைப் பரிகாரத்தைச் சொன்னார். அன்று மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் சொன்னதாவது :

"எல்லா மனோவியாதிகளும், உடற்கோளாறுகளும் ஒரே பொதுக்காரணத்தினால் தோன்றுபவையென்று சொல்லப்பட்டிருப்பது உண்மையே. ஆகவே, அவைகள் அனைத்திற்கும் பொதுவான ஒரே பரிகாரம் இருப்பதும் இயற்கையே. நோயிற்போலவே சிகிச்சையிலும் ஒரு ஒற்றுமையுண்டு. சாத்திரங்கள் அப்படித்தான் சொல்லுகின்றன. ஆகையால் இன்று காலையில் எல்லா நோயாளிகளுக்குமே ராம நாமத்தையும் ஏறக்குறைய ஒரேவகைச் சிகிச்சையையுமே சொன்னேன். ஆனால் நமது சௌகரியத்திற்கு ஒத்து வராதபொழுது நம் மனம்போல் சாத்திரங்களுக்கு வியாக்கியானம் செய்யும் சாமர்த்தியம் ஒன்று நமக்குண்டு. சாத்திரங்கள் மறுலோகத்தில் நமது ஆன்மாவுக்கு நன்மை பயப்பதற்காகவே அமைந்திருக்கின்றன வென்ற தவறான நம்பிக்கையினால் நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருப்பதோடு தருமத்தின் நோக்கம் பரலோக சாம்ராஜ்யத்தைப் பெறுவதேயென்றும் எண்ணி வந்திருக்கிறோம். நான் இந்தக் கருத்தை ஒப்புகிறவனல்ல. இவ்வுலக அன்றாட வாழ்க்கையில் எனக்குப் பயன்படாத தருமம் மறு உலகத்திலும் உபயோகமாயிருக்கப்போவது இல்லை.

"இந்த உலகத்தில் உடலிலோ மனத்திலோ எவ்வகை நோயுமின்றி பூரண ஆரோக்கியத்துடன் இருக்கும் மனிதனைக் காண்பதரிது. இந்நோய்களுள் சிலவற்றிற்கு நாம் செய்யக்கூடிய பரிகாரம் எதுவுமேயில்லை. உதாரணமாக, ஒருவருக்கு ஒரு கை ஒடிந்து விழுந்துவிட்டதென்றால் ராம நாமத்தினால் அந்தக் கையைத் திரும்பச் சம்பாதித்துத் தரமுடியாது. ஆனால் இத்தகைய நஷ்டத்திலும் இதை விடப் பெரிய அற்புதம் எனத்தக்க கலங்காத மன அமைதியைப்* பெறும்படி உயிர் வாழும் காலத்தில் செய்யமுடிவதோடு, இறுதிக் காலத்தில் சாவிலுள்ள துன்பத்தையும் மயானத்தின் வெற்றியையும் அவற்றினிடமிருந்து பறித்துக்கொண்டுவிடவும் அதனால் முடியும். ஒவ்வொருவருக்கும் விரைவிலோ காலந்தாழ்த்தியோ கிட்ட வேண்டிய சாவைக் குறித்து நாம் எதற்காக மனத்தை அலட்டிக்கொள்ள வேண்டும்?"

இதன்பிறகு அவர் இயற்கைச் சிகிச்சையின் தத்துவங்களை விளக்கித் தம் முதல் சொற்பொழிவை ஆற்றினார். அதன் சாரம் பின்வருமாறு:

"மனிதனுடைய உடல் காற்று, நீர், மண், தீ அல்லது ஒளி (சக்தி தத்துவம்) ஆகாயம் (வெளி) என்ற பஞ்ச பூதங்களினால் ஆனது. ஆன்மா அதை இயக்குகிறது.

"இவற்றுள் முக்கியமானது காற்று. மனிதன் உணவின்றி பல வாரங்களுக்கும் நீர் இன்றிச் சிறிது காலத்திற்கும் வாழக் கூடுமாயினும் காற்றில்லாத பொழுது அவன் சில நிமிஷங்கூட இருக்க முடியவில்லை. ஆகையால் கடவுள் காற்றை எங்கும் கிடைக்கக்கூடியதாய்ச் செய்திருக்கிறார். சில சமயங்களில் உணவும் தண்ணீரும் போதிய அளவு கிட்டாமலிருக்கலாம். ஆனால் காற்றிற்கோ பஞ்சமே ஏற்படுவதில்லை. ஆயினும்

---

* கடவுளின் திருநாமத்தைவிட உயர்ந்த அமைதியை அளிக்கும் மந்திரம் எதுவுமில்லை—பத்திரிகைச் செய்தி, 10-1-1946

நாம் அறையின் கதவுகளையும் ஜன்னல்களையும் அழுத்தி மூடிக்கொண்டு உள்ளே படுத்துறங்கி, கடவுள் அளித்துள்ள புதிய தூய காற்றைப் பெற்றுக்கொள்ளாமலிருந்து விடுகிறோம். இரவில் திருடர் பயத்தினால் கதவுகளையும் சன்னல்களையும் மூடிக்கொள்ளலாம். ஆனால் காற்றே வராமல் நம்மைச் சுற்றிலும் எதற்காக அடைத்துக் கொள்ள வேண்டும்?

"புதிய காற்று வேண்டுமானால் நாம் திறந்தவெளியில் படுத்துறங்கவேண்டும். ஆனால் தூசியையும், தூசு நிறைந்த காற்றையும் சுவாசித்துக்கொண்டு வெளியே படுத்துறங்குவதில் பயனில்லை. நாம் உறங்குமிடத்தில் இவையிரண்டும் இருக்கக்கூடாது. சிலர் தூசும் கரியும் வந்துவிழாதிருப்பதற்காக தங்கள் முகத்தை மூடிக் கொள்ளுகிறார்கள். இது நோயைவிட அதிகத்தீமை பயக்கும் பரிகாரமாகும். இதுவன்றி வாயினால் சுவாசம்விடும் பழக்கம் சிலருக்கு இருக்கிறது. வாய் உணவை உட்கொள்வதற்கு அமைந்த உறுப்பேயன்றி சுவாசிப்பதற்கு அமைந்ததல்ல. நாசித்துவாரத்தின் மூலமாய்ப் போகும் பொழுது காற்று வடிக்கட்டிச் சுத்தமாக்கப்படுவதோடு சுவாசப்பைக்குள் புகுமுன் அதில் சூடும் ஏற்றப் படுகிறது.

"கண்ட இடங்களில் கவனமின்றி எச்சில் துப்பிக் காற்றை அசுத்தப் படுத்துகிறவனும், குப்பைகூளத்தை எறிந்தும் வேறுவகையிலும் பூமியை ஆபாசமாக்குகிறவனும் மனிதனுக்கும் இயற்கைக்கும் தீங்கு விளைவித்த பாவத்தைச் செய்கிறான். மனிதன் உடல் கடவுளின் திருக்கோயிலாகும். அந்தக் கோயிலில் புகுவதற்கென அமைந்துள்ள காற்றைப் பாழாக்குவோன் அபசாரம் செய்தவனாகிறான். அவன் ராம நாமத்தை செபித்தல் வீணே."

—ஹரிஜன், 7–4–1946

22. காஞ்சன் கிராமத்தில் இயற்கைச் சிகிச்சை

இயற்கைச் சிகிச்சையில் இரு பகுதிகளுண்டு. ஒன்று, கடவுளின் பெயரை அல்லது ராமநாமத்தை செபித்து நோய்களைப் போக்கிக்கொள்ளுதல்; இரண்டாவது, ஆரோக்கிய விதிப்படி முறையாக வாழ்ந்து நோய்களை வராமல் தடுத்துக் கொள்ளுதல். கிராமத்திலிருந்து வந்துள்ள அறிக்கை, கிராமவாசிகள் கிராமத்தைத் துப்புரவாய் வைத்துக்கொள் வதில் தம்முடன் ஒத்துழைப்பதாகத் தெரிவிக்கிறது. சொந்த விஷயத்திலும் வீட்டிலும் பொதுவிடங்களிலும் துப்புரவு சம்பந்தமான விதிகளைச் சரிவர அனுசரித்து, உணவை முறைப்படி அருந்தி, தேகப்பயிற்சியிலும் தேவையான கவனம் செலுத்தப்படுமானல் தேக அசௌக்கியமோ, நோயோ வருவதற்குச் சிறிதும் இடமிராதென்பது என் கருத்து. அகத்தும் புறத்தும் பூரணத்தூய்மை நிலவுமிடத்தில் நோய் புகுவதற்கே இடமில்லை. கிராம மக்கள் இதைப் புரிந்துகொள்வார்களாயின் அவர்களுக்கு டாக்டர்கள், ஹக்கீம்கள், வைத்தியர்கள் ஆகிய எவர் உதவியும் தேவையில்லை.

காஞ்சன் கிராமத்தில் பசுக்களே இல்லை. இது துரதிர்ஷ்டமான விஷயமே. சில எருமைகள்மட்டும் உள்ளன. ஆனல் எனக்கு இதுவரையில் கிடைத்துள்ள ஆதாரங்களிலிருந்து ஆரோக்கியமளிக்கும் விஷயத்தில் பசும்பாலின் முன் எருமைப்பாலினல் நிற்கவே முடியாதென்று தெரிகிறது. வைத்தியர்கள் நோயாளிகளை பசும்பால்தான் அருந்தச்சொல்லுகிருர்கள். ஆரோக்கியத்திற்குப் பால் இன்றியமையாததாகும்.

இயற்கைச் சிகிச்சை என்பதிலேயே சிறந்தமுறையில் அமைந்துள்ள வாழ்க்கையும் அடங்கிவிட்டது. வாழ்க்கை அவ்வாறு அமைவதற்கு கிராமங்களும் நகரங்களும்

அதற்கு ஏற்ற வகையில் இருந்துவரவேண்டும். கடவுளின் திருநாமம் என்ற அச்சில் சுழலும் சக்கரமே இயற்கைச் சிகிச்சை முறை என்று சொல்லத்தேவையில்லை.

—ஹரிஜன், 26–5–1946

23. எளியோருக்கு இயற்கைச் சிகிச்சை

இயற்கைச் சிகிச்சையென்பதற்கு வாழ்க்கையைப் பற்றிய நம் கருத்தையே சிறந்தவகையில் மாற்றிக்கொள்வதென்பது பொருள். வாழ்க்கையை ஆரோக்கிய விதிகளின்படி ஒழுங்குபெற நடத்திவருவதென்பது அதற்குப் பொருள். ஆஸ்பத்திரிகளிலிருந்து இலவசமாகவோ கடையில் கிரயத்திற்கோ மருந்து வாங்கிச் சாப்பிடுவதோடு அது முடிந்துவிடுவதில்லை. ஆஸ்பத்திரியில் இலவசமாய்ச் சிகிச்சை பெறுவோன் பிறர் அளிக்கும் தானத்தை வாங்குவோனே. இயற்கைச் சிகிச்சை பெறுபவன் எவரிடத்திலும் இரப்பவனல்ல. தன் கையே தனக்குதவியென்று இருப்பதனால் சுயமரியாதை வளர்கிறது. அவ்வாறு செய்வோன் இப்பொழுது தன் உடலில் புகுந்துள்ள விஷத்தை வெளியேற்றிக்கொள்வதோடு, இனிமேல் நோய் வாராமலும் தன்னைக் காத்துக் கொள்கிறான்.

இயற்கைச் சிகிச்சையில் கேந்திரமாயுள்ள அம்சம் ராம நாமமே. ஆனால் நம் நோய்கள் அனைத்திற்கும் பரிகாரமாயிருக்கவேண்டுமானால் அது நம் உள்ளத்தின் அடித்தலத்திலிருந்து எழவேண்டும்.

உணவு சரியாயும், சத்துக்கள் கணக்காய் அமைந்ததாயும் இருக்க வேண்டும். இன்று நாம் வரண்டிருப்பது போல் நமது கிராமங்களும் இருக்கின்றன. இயற்கைச் சிகிச்சைத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் கிராமங்களிலேயே போதுமான காய்கறிகளும், பழங்களும், பாலும் உற்பத்தி செய்வதாகும். இதில் செலவாகும் நேரத்தை

வீண்விரயமென்று எண்ணக்கூடாது. அது கிராம மக்கள் அனைவருக்கும், இறுதியில் இந்தியா முழுமைக்கும் நன்மை பயந்தே தீரும்.

ஹரிஜன், 2-6-1946

24. இயற்கைச் சிகிச்சையும் நவீன வைத்தியமும்

எனது இயற்கைச் சிகிச்சை முறை கிராமத்தாருக்கும் கிராமங்களுக்குமென்றே உருவானது. ஆகவே அதில் 'மைக்ராஸ்கோப்' 'எக்ஸ்ரே' முதலிய சாதனங்களுக்கு இடமில்லை. க்யுனைன், எமெடின், பென்சிலின் ஆகிய மருந்துகளுக்கும் அதில் இடம் கிடையாது. அதில் தூய ஆரோக்கியமான வாழ்க்கையே முக்கியமானது. இது இருந்தாலே போதும். ஒவ்வொருவரும் இதில் தேர்ச்சிபெற்று விட்டார்களாயின் நோய்க்கே இடமிராது. நோய்களைத் தவிர்க்கும் பொருட்டு இயற்கையின் விதிகள் அனைத்தையும் அனுசரித்து நடந்து வரும்பொழுதே நோய்கள் வருமானால் அதற்குரிய சிறந்த மருந்து ராம நாமமே. ஆனால் நினைத்த மாத்திரத்தில் இந்த ராம நாம மருந்தை உலகெங்கும் பரவச் செய்ய முடியாது. நோயாளிக்கு இதில் நம்பிக்கை தோன்றச் செய்வதற்கு முதலில் வைத்தியர் ராம நாம மகிமையே உருவான வராய் விளங்கவேண்டும். இதற்கிடையில் இயற்கையின் பஞ்ச பூதங்களிலிருந்து பெறக்கூடியவற்றைப் பெறவும் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும். அவை மண், நீர், ஆகாயம், தீ, காற்று என்பவை. என் கருத்தின்படி இதுவே இயற்கைச் சிகிச்சையின் வரம்பாகும். ஆகவே உருளி காஞ்சனில் நான் செய்துவரும் சோதனை கிராமவாசி களுக்கு சுத்தமாயும் ஆரோக்கியமாயும் வாழக் கற்றுக் கொடுப்பதும், பஞ்சபூதங்களைத் தகுந்த முறையில் பயன்

ப்டுத்தி நோயாளிகளின் நோயைத் தீர்க்க முயலுவதுமே யாகும். தேவையானால் ஸ்தலத்திலேயே பயிராகும் வேர் பச்சிலைகளை உபயோகித்துக் கொள்ளலாம். சாஸ்திரீய முறையில் அமைந்த புஷ்டியுள்ள உணவு இயற்கைச் சிகிச்சையின் இன்றியமையாத பகுதியாகும்.

—ஹரிஜன், 11-8-1946

25. ஐரோப்பாவின் போதனை

நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் முன்னேற்ற மெய்துவதற்கு மேல் நாட்டாரைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தடுக்கவேண்டும். இயற்கைச் சிகிச்சையை நாம் மேல் நாடுகளிடமிருந்து கற்பதென்றால் அப்படி நாம் கற்பது இந்தியாவுக்கு அதிகமாய்ப் பயன்படாது. இயற்கைச் சிகிச்சை ஒவ்வொருவரும் தம் வீட்டிலேயே செய்து பார்க்கக் கூடியது. சதா சர்வ காலமும் இயற்கைச் சிகிச்சை நிபுணர்களின் ஆலோசனை அவசியமாயிருக்கக் கூடாது. மிகவும் சுளுவானதாகையால் எவரும் அதைக் கற்றுக்கொண்டுவிடலாம். ராம நாம செபம் செய்வதைக் கற்றுக்கொள்ள நாம் ஐரோப்பாவுக்குப் போக வேண்டுமென்றால் அதற்கு அர்த்தமே இல்லை. நான் இயற்கைச் சிகிச்சையென்று கருதுவதன் அடிப்படை ராம நாமமே. மண், நீர், ஆகாயம், சூரிய ஒளி, காற்று ஆகியவற்றைப் பயன்படுத்துவது எப்படி யென்பதைத் தெரிந்துகொள்வதற்கும் கடலைக்கடந்து செல்லத் தேவையில்லை. இது நமக்குத் தெரிந்ததே. இதைத் தவிர, இன்னும் இவ்வகையில் தெரியவேண்டியவைகளை நாம் நமது கிராமங்களிலேயே தெரிந்துகொள்ளலாம். உதாரணமாக, வேர் - பச்சிலைகளை உபயோகிக்க வேண்டுமென்றால் அவை கிராமங்களில் கிடைக்கக்கூடியவையே. ஆயுர்வேத வைத்தியர்களுக்கு அவற்றைப்பற்றியவை யெல்லாம் தெரியும். சில

ஆயுர்வேத வைத்தியர்கள் அயோக்கியர்களாய் இருக்கிறார்களே யென்றால், மேல் நாடுகளுக்குப்போய் வருவதால் அவர்கள் நல்லவர்களாய், மக்களுக்குத் தொண்டு செய்யக் கூடியவர்களாய் மாறிவிட மாட்டார்கள். மேல் நாட்டிலிருந்து உடற்கூறு அல்லது தேக அமைப்பு பற்றிய அறிவை நாம் பெற்றிருக்கிறோம். அது எல்லா வைத்தியர்களுக்கும் உபயோகமானது, தேவையானது. ஆனால் அதைக் கற்றுக்கொள்ள நம் நாட்டிலேயே ஏராள வசதிகள் இருக்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து, அறிவு வளர்ச்சிக்கு மேல் நாடுகள் உதவியுள்ள வசதிகள் எங்கும் பரவியிருப்பதால் அவற்றை நாம் எங்கு வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம். இயற்கைச் சிகிச்சை முறையைக் கற்பதற்கு உடற்கூறு பற்றிய அறிவு இன்றியமையாததல்லவென்று நான் இங்கே சொல்லிவைக்கிறேன்.

கூன் (Kuhne) ஜஸ்ட் (Just) பாதர் நீப் (Father Kneip) ஆகியோரின் நூல்கள் எல்லோருக்கும் புரியக் கூடியவை, எளியவை, பயனுள்ளவை. அவற்றைப் படித்தல் நம் கடமையாகும். இயற்கைச் சிகிச்சை வைத்தியன் ஒவ்வொருவனுக்கும் அவற்றைப்பற்றிச் சிறிதேனும் தெரியும். இதுவரை இயற்கைச் சிகிச்சை கிராமங்களில் பரப்பப்படவில்லை. நாம் ஆழ்ந்து சிந்தித்ததுமில்லை, எவரும் கோடிக்கணக்கானவருக்கு அதைப் பயன்படச் செய்ய வேண்டுமென்று எண்ணியதுமில்லை. இப்பொழுதுதான் அது ஆரம்பமாகிறது; இறுதியில் நாம் எங்கிருப்போமென்று எவராலும் சொல்ல முடியாது. எல்லாப் பெரிய நல்ல காரியங்களிலும் போன்று, இதை வெற்றிபெறச் செய்வதற்கு தியாக புத்தியும் சேவையுணர்ச்சியும் தேவை. மேல் நாடுகளை நோக்கிக் கொண்டிருப்பதற்கு பதிலாக நாம் நம் அகத்தே நோக்கைத் திருப்பவேண்டும்.

—ஹரிஜன், 2–6–1946

26. இயற்கையின் விதிகள்

கே :—உங்கள் ஆலோசனையின்படி ராமநாம செபம் செய்து வந்ததில் எனக்கு இப்பொழுது குணமாகி வருகிறது. க்ஷயரோகத்திற்கான வைத்தியமும் செய்யப்பட்டு வருகிறதென்பதை இங்கே நான் தெரிவித்தாக வேண்டும். சரியான உணவைக் குறைத்து உண்பதனால் மனிதன் ஆரோக்கியமாய் நீண்ட ஆயுளுடன் வாழ்வானென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நான் கடந்த இருபத்தைந்து வருஷங்களாக உணவைச் சிறிது குறைவாய்ச் சாப்பிடுதல் என்ற விதியை அனுசரித்து வருகிறேன். அப்படியிருக்கையில் எனக்கிந்த க்ஷயம் ஏன் வந்தது? இந்த துரதிர்ஷ்டத்திற்கு இந்த சென்மத்திலோ, பூர்வ சென்மத்திலோ நான் செய்துள்ள பாவமே காரணமென்று சொல்லுவீர்களா ?

மனிதன் 125 வயது வரை உயிர் வாழலாமென்று சொல்லுகிறீர்கள். அப்படியானால் உங்களுக்கு எவ்வளவோ உதவியாயிருந்த மஹாதேவ்பாயை (தேசாய்) கடவுள் ஏன் அழைத்துப்போயிருக்க வேண்டும்? அவர் மிதமாய், பொருத்தமான உணவைக் கொள்ளுதலென்ற விதியை அனுசரித்து வந்ததோடு உங்களையே தம் கடவுளெனக் கொண்டு சேவை செய்து வந்தார். அவர் கொடிய இரத்த அமுக்கத்திற்கு ஏன் பலியானர்? கடவுளின் அவதாரமென்று மதிக்கப்பட்ட இராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு க்ஷயத்தைப் போன்றே கொடிய புற்று நோய் ஏன் வந்திருக்க வேண்டும்? அவரால் ஏன் அதன்மீது வெற்றி காண இயலவில்லை?

ப :—எனக்குத் தெரிந்த முறையில் ஆரோக்கியத்தைக் காப்பதற்குதவும் விதிகளை நான் விளக்கி வந்திருக்கிறேன். குறைவான, பொருத்தமான உணவென்பது எல்லோருக்குமே ஒரே வகையாய் இருப்பதற்கில்லை. அது ஒவ்வொருவரும் தகுந்த நூல்களைப் படித்து, சிந்தனை செய்து

தம் தமக்கு உகந்த முறையில் ஒழுங்கு செய்துகொள்ள வேண்டுவது. ஆனால் இதன் பொருள் மனிதனால் பிழை யெதுவுமே நேராதென்பதோ, அவனுக்கு எல்லாம் தெரிந்து விட முடியுமென்பதோ அல்ல. இதனாலேயே வாழ்க்கை ஒரு சோதனைச் சாலையென்று அழைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் பிறருடைய அனுபவத்தைக் கொண்டு முன்னேற வேண்டியதோடு வெற்றி கிட்டவில்லை யென்றால் அதற்காகப் பிறரையோ தம்மையோ குறை கூறுவதிற் பயனின்று. விதியொன்று இருக்குமேல் அதை அவசரப் பட்டுக் குறை கூறலாகாது; ஆனால் நீண்ட ஆலோசனை யின் பயனாய் குறிப்பிட்ட ஒரு விதி தவறென்ற முடிவுக்கு வரவேண்டியிருக்குமாயின், சரியானதை அனைவரும் அறியுமாறு வெளியிட வேண்டும்.

உங்களுடைய விஷயத்தைப் பற்றியவரையில் உங்கள் நோய்க்குப் பல காரணங்கள் இருக்கலாம். தம்மைப்பற்றிய வரையில் நீங்கள் பஞ்ச தத்துவங்களையும்* சரியான வகை யில் உபயோகித்தீர்களென்று யார் சொல்ல முடியும்? எனக் குத் தெரிந்த இயற்கை விதிகளில் நான் நம்பிக்கை கொண் டிருக்கும் வரையில் நீங்கள் எங்கோ பிழை செய்திருக்க வேண்டுமென்றே சொல்ல வேண்டியிருக்கும். மஹாதேவ், இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஆகியோரின் விஷயத்திலோ என்றால், அவர்களாலும் எப்படியோ பிழை நேர்ந் திருக்க வேண்டும் என்று உணருவதே விதிகள் தவறானவை என்று கூறுவதைவிட அதிகப் பொருத்தமானது. இந்த விதிகள் என் சிருஷ்டியல்ல. அனுபவமுள்ளவர் கள் இவற்றை இயற்கையின் விதிகளென்று கூறு கிறார்கள். நான் அவற்றை நம்புவதோடு, என் நம்பிக் கைக்கு ஒத்த வகையில் நடக்க முயலுகின்றேன். என்ன இருந்த போதிலும் மனிதன் குறைபாடுகள் உள்ள ஒரு பிராணியே. அவனால் பூரண உண்மையை எப்படி

---

* மண், நீர், ஆகாயம், தீ, காற்று.

அறிந்து கொள்ள முடியும்? மேல் நாட்டு முறையில் பயின்ற டாக்டர்கள் அவைகளை நம்பவில்லை யென்பதும் நம்பினாலும் விபரீதமான வகையிலேயே என்பதும் என்னை என்னவோ கவரவில்லை. நான் சொல்லியுள்ளவை பிரஸ்தாபிக்கப்பட்ட மனிதர்களின் பெருமையைச் சிறிதும் குறைப்பதற்காகவல்ல; குறைக்கவும் கூடாது.

—ஹரிஜன், 4-8-1946

27. 'நம்பிக்கை வைத்திய'மும் ராம நாமமும்

ஒரு நண்பரிடமிருந்து பின்வரும் கேலிக்கடிதம் வந்திருக்கிறது:

"இயற்கைச் சிகிச்சைக்கும், 'நம்பிக்கைவைத்திய'மென்று அழைக்கப்படுகிறதே அதற்கும் நெருங்கிய தொடர்பு ஏதேனும் உண்டா? சிகிச்சையில் நம்பிக்கை இருக்க வேண்டியதே என்பதில் சந்தேகமில்லை. ஆனால் 'நம்பிக்கை வைத்திய'த்தினாலேயே சில நோய்கள் நீக்கப்படுவதைக் காண்கிறோம். உதாரணமாக வைசூரி, வயிற்றுவலி முதலியவைகளைச் சொல்லலாம். வைசூரிக்கு, அதிலும் முக்கியமாகத் தென்னாட்டில் சிகிச்சை எதுவும் செய்யப்படுவதில்லை; அது தெய்வத்தின் விளையாட்டெனக் கருதப்படுகிறது என்று உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். நாங்கள் மாரியம்மனுக்கு பூசை போடுவதனால் அநேகமாய் வியக்கத்தக்க முறையில் வைசூரி போட்டியவர் எல்லாருமே குணமடைந்து விடுவதைக் காண்கிறோம். வயிற்றுவலிக்கோ, தீராத வயிற்றுவலிக்கும்கூட திருப்பதி வேங்கடாசலபதிக்கு வேண்டிக்கொண்டு நோய் தீர்ந்ததும் வேண்டுதலைச் செலுத்தி வருகிறார்கள். சரியான உதாரணமொன்று: என் தாய்க்கு ஏற்கெனவே இருந்துவந்த வயிற்றுவலி அவள் திருப்பதிக்குப் போய் வந்த பிறகு தீர்ந்துவிட்டது.

"நீங்கள் தயவுசெய்து இதை விளக்குவதுடன், சாஸர்* கூறியுள்ளதைப் போல் அபாதிகரி†யுடன் கூடி நோயாளியை

* ஒரு ஆங்கில கவி. † Apothecary-மருந்து வியாபாரி.

நோயாளியாகவே வைத்திருக்கச் சூழ்ச்சி செய்துவரும் டாக்டர்களுக்கு ஓயாது அழுவதை விடுத்து இயற்கை அமைப்பின் ஒரு பகுதியே ஆன இயற்கைச் சிகிச்சையிலும் மக்கள் ஏன் அத்தகைய நம்பிக்கை கொள்ளக்கூடாதென்று விளக்கிக் கூறுவீர்களா ?''

மேலே குறிக்கப்பட்டுள்ள உதாரணங்கள் இயற்கைச் சிகிச்சையைச் சேர்ந்தவையுமல்ல, அதிலேயே அடங்கியுள்ளதாக நான் கருதும் ராம நாம வகையைச் சேர்ந்ததுமல்ல. ஆனால் சிகிச்சை யெதுவுமில்லாமல் இயற்கையே எவ்வாறு பல நோய்களைப் போக்கிவிடுகிற தென்பதையே அவை காட்டுகின்றன. அவை இந்திய வாழ்க்கையில் குருட்டு நம்பிக்கை பெற்றுள்ள இடத்தைக் காட்டுகின்றன வென்பதில் சந்தேகமில்லை. இயற்கைச் சிகிச்சையின் கேந்திர ஸ்தானத்திலுள்ள ராம நாமம் குருட்டு நம்பிக்கையின் சத்துருவாகும். அயோக்கியர்கள் வேறு எந்தப் பொருளையும் முறையையும் தவருக உபயோகிப்பதைப் போல ராம நாமத்தையும் உபயோகிக்கவே செய்வார்கள். வெறும் நாக்கு நுனியினல் இராமசெபம் செய்வதற்கும் சிகிச்சைக்கும் சம்பந்தமில்லை. நான் தெரிந்துகொண்டிருப்பது சரியானல், நண்பர் விவரித்துள்ளபடி 'நம்பிக்கை வைத்திய'மென்பது ஒரு குருட்டு வைத்தியமே. அது நித்தியமான கடவுளின் நித்தியமான திருநாமத்தைக் கேலி செய்வதாகவே இருக்கிறது. கடவுளென்பது எவரும் தாமாகக் கற்பனை செய்துகொள்ளும் ஒரு வஸ்துவல்ல. அது இதய பூர்வமாய் உணரப்படுவதொன்று. கடவுளிடம் ஒருவர் பரிபூரண நம்பிக்கை கொண்டும் அவருடைய சட்டங்களை நன்கு உணர்ந்து மிருப்பாரானல் அவர் பிற உதவியெதுவுமின்றி நோயை முற்றிலும் குணப்படுத்திக் கொள்வது சாத்தியமே. தூய மனமே பூரண ஆரோக்கியத்திற்குக் காரணமாவது என்பதே அச் சட்டம். மனம் மிகவும் தூயதாவதற்கு இதயத்தில் கோளாறு எதுவும் இருக்கக்கூடாது. இங்கே இதயமென்றது கடவுளின் இருக்கையையேயன்றி

டாக்டர்கள் இரத்த ஓட்டத்தைக் கணக்கிடுவதற்காக 'ஸ்டெதாஸ்கோப்'பை வைத்துப் பார்க்கிறார்களே அந்த இதயத்தையல்ல. இதய பூர்வமாய்க் கடவுளை உணருவோமானால் அசுத்தமான, காரணமில்லாத எண்ணம் எதுவும் மனத்தில் உதிக்கவே செய்யாதென்று சொல்லப்படுகிறது. கருத்துத் தூய்மை உள்ளவிடத்தில் நோய்க்கே இடமில்லை. அந் நிலையை எய்துதல் சிரமசாத்தியமாயிருக்கலாம். ஆனால் ஆரோக்கியம் பெறுதற்கு எடுத்து வைக்கப்படும் முதல் அடியில் இதை ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அதற் கொத்த முறையில் செய்யப்பெறும் முயற்சி அடுத்த இரண்டாவது அடியாகும். ஒருவர் தம் வாழ்க்கையை இவ்வாறு மாற்றி அமைக்கும்பொழுது இயற்கையாகவே இதுவரையில் மனிதனால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள இயற்கையின் பிற விதிகள் அனைத்தையும் அனுஷ்டித்தே தீரவேண்டும். அவற்றை அசட்டை செய்துவிட்டு தாம் தூய உள்ளம் பெற்றிருப்பதாய்ச் சொல்லிக்கொள்ள முடியாது. ராம நாமத்தின் உதவியைப் பெறாவிட்டாலும், தூய உள்ளம் மட்டும் ஒருவருக்கு இருக்குமாயின் போதுமென்று சொல்வதில் தவறொன்றுமில்லை. தூய்மையுறுவதற்கு எனக்கு வேறு வழி தெரியாதென்றே நான் சொல்லுவேன். உலகெங்கும் மகான்கள் சென்றவழி இதுவே. அவர்கள் எல்லோரும் ஆண்டவனின் நண்பர்களேயன்றி குருட்டு நம்பிக்கையுள்ளவர்களோ, மந்திரவாதிகளோ அல்ல.

இதுவே கிறிஸ்தவ விஞ்ஞானமுமாயின் எனக்கு அதோடு சண்டையெதுவுமில்லை. ராம நாம முறையை நான் கண்டுபிடித்து விடவில்லை. அது அநேகமாய் கிறிஸ்தவ சகாப்தத்திற்கும் முற்பட்டது என்றே சொல்லலாம்.

ஒரு நிருபர், ராம நாமத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் சஸ்திர சிகிச்சை தேவையென்று நிச்சயமாகத் தோன்றும்பொழுதும் அதைத் தவிர்க்கவேண்டுமா என்று கேட்கிறார். வேண்டாமென்பதில் சந்தேகமில்லை. எதிர்

பாராத சம்பவமொன்றில் ஒருவனுடைய கால் வெட்டுண்டு போகுமானல் அதை அதனல் (ராமநாமத்தினல்) திரும்பத் தரமுடியாது. எத்தனையோ சந்தர்ப்பங்களில் சஸ்திர சிகிச்சை அனுவசியமே; தேவையானபொழுதோ அதைச் செய்தே தீரவேண்டும். ஆனல் கடவுளையே நம்பி வாழ்வோன் தன் காலொன்று போய்விட்டதைக் குறித்து வருந்தமாட்டான். இராம செபமென்பது போலி வைத்திய முறையோ தாற்காலிக சிகிச்சையோ அல்ல.

—ஹரிஜன், 9–6–1946

28. ராமநாமம் பற்றிய குழப்பம்

"ஒரு நண்பர் எழுதுவதாவது :—

"மலேரியா சுரத்திற்கு இராம செபத்தை மருந்தாகக் கருதலாமென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே, என் உடற் கோளாறுகளுக்கு ஆன்மீக சக்தியைப் பரிகாரமென்று எப்படி நம்பியிருப்பதென்று எனக்குப்புரியவில்லை. நோயிலிருந்து விடுபடுவதற்கு நான் முதலில் தகுதியுள்ளவன என்பதே எனக்கு சந்தேகம். அதோடு என் நாட்டுமக்கள் இவ்வளவு கஷ்டப்படும் பொழுது நான் கடைத்தேறும் பொருட்டு கடவுளை வேண்டிக்கொள்வது சரியாவென்றும் தெரியவில்லை. ராம நாமத்தின் மகிமை எனக்குப் புரியும்பொழுது அவர்கள் கடைத் தேற வேண்டுமென்றே நான் பிரார்த்திப்பேன்; இல்லையேல் இன்று உள்ளதைவிட அதிக சுயநலமியென்றே நான் என்னைக் கருதுவேன்."

மனவொருமையுடன் உண்மையைத்தேடும் ஒருவர் இதை எழுதியிருப்பதாகவே கருதுகிறேன். நான் இதைப் பற்றி எல்லாருமறிய விவாதிப்பதற்குக் காரணம் இவரைப் போன்ற இன்னும் பலருக்கு இதே சந்தேகம் தோன்றி யிருக்கலாம் என்பதே.

ஆன்மீக சக்தியென்பது மனிதனுக்குப் பயன்படக் கூடிய எத்தனையோ சக்திகளைப் போன்றதொன்றே. அது

எத்தனையோ யுகங்களாக உடற் கோளாறுகளைப்போக்க ஏற்றத் தாழ்வான வெற்றியுடன் உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது என்பது ஒருபுறமிருக்க, அதை உடலின் நோய்களைப் போக்குவதற்குப் பயன்தரும் வகையில் உபயோகிக்கலாமென்று இருக்கும் பொழுது அவ்வாறு செய்யாதிருப்பது பெருந் தவறாகும். ஏனெனில், மனிதன் உடலும் ஆன்மாவும் ஒன்றை ஒன்று ஆக்கிரமித்துக் கொண்டும், மாற்றிக்கொண்டும் இருக்கும் நிலையில் அமைந்தவன். கொயினா மருந்து கிட்டாமையினால் கோடிக் கணக்கானவர்கள் அதைச் சாப்பிடாமலிருக்கையில் நீங்கள் மட்டும் அதைச்சாப்பிட்டு மலேரியா சுரத்தைப் போக்கிக்கொள்ளும்பொழுது உங்கள் அகத்திலேயே உள்ள ஒரு மருந்தை, அது இருப்பது தெரியாமையினால் கோடிக் கணக்கானவர்கள் பயன்படுத்தவில்லை என்ற காரணத்திற்காக நீங்கள் ஏன் உபயோகிக்க மறுக்க வேண்டும்? கோடிக் கணக்கான மக்கள் அறியாமையினாலோ, ஏன், அசட்டுப் பிடிவாதத்தினாலோ துப்புரவாகவும் நன்றாகவும் வாழவில்லை யென்பதற்காக நீங்களும் வாழாமலிருப்பீர்களா? தவறான பரோபகார சிந்தையினால் நீங்கள் துப்புரவாய் வாழாதிருப்பீர்களாயின் அசுத்த வாழ்க்கை நடத்தியதின் மூலமாய் அதே கோடிகோடி மக்களுக்கு உதவுதல் என்ற கடமையில் தவறியவர் ஆவீர்கள். உடலைத் துப்புரவாகவும் நன்றாகவும் வைத்துக்கொள்ள மறுப்பதைவிட ஆன்மீக நலனையும், துப்புரவையும் பெற மறுப்பது மோசமானது.

முக்தி யென்பது எல்லாவகையிலும் நன்றாய் இருப்பது என்பதேயன்றி வேறல்ல. நல்லமுறையில் வாழ்வதனால் பிறருக்கு வழிகாட்டியாயிருப்பதோடு தமது தகுதியின் மூலமாய் பிறருக்கு நிதர்சனமான உதவியாகவும் இருக்க முடியும்பொழுது நீங்கள் தமக்கு அது வேண்டாமென்பது ஏன்? பிறருக்கு அது கிட்டாதென்று உங்களுக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கையில் உடம்பு குணமாக வேண்டு

51760 ஆர்G(Q224) 3154

மென்பதற்காக நீங்கள் பென்சிலினை உட்கொள்வதில் உங்களுடைய கலப்பில்லாத சுயநலமே வெளியாகிறது.

நிருபருடைய வாதத்தில் காணப்படும் குழப்பம் தெளிவானதே.

ஆனல் ராம நாமத்தின் மகிமையைப் புரிந்து கொள்வதைவிட கொயினு மாத்திரை ஒன்றையோ பலவற்றையோ சாப்பிடுதல் சுலபமானது என்பது உண்மையே. மாத்திரை வாங்குவதற்குச் சிறிது பணமே தேவையாயிருக்க அதற்கோ பெருமுயற்சி தேவை. எந்தக் கோடிக் கணக்கான மக்களுக்காகவென்று ராம நாமத்தையே தம் உள்ளக்கோயிலிருந்து இந்த நிருபர் அகற்ற விரும்புகிறரோ, அவர்களின் நன்மைக்காகவே இந்தப் பெரு முயற்சியைச் செய்வதில் தவறென்றுமில்லை.

—ஹரிஜன், 1–9–1946

29. ஒரு சங்கடமான நடவடிக்கை

புத்தி ஸ்வாதீனத்தை இழந்து ஹிம்சைச் செயல்களும் புரியத்தொடங்கி விட்டதனுல் சிறையில் அடைக்கப்பட வேண்டிவந்த ஒரு ஆசிரம ஊழியரைக் குறிப்பிட்டு காந்திஜி கூறியதாவது:

"அவர் ஒரு சிறந்த ஊழியர். சென்ற வருஷம் அவருக்கு உடம்பு குணமானபிறகு அவர் தோட்டத்தைக் கவனித்துவந்ததோடு ஆஸ்பத்திரிக் கணக்குகளையும் எழுதி வந்தார். அவர் சிரத்தையாக வேலை செய்து வந்தார்; வேலையிலேயே மகிழ்ச்சியும் பெற்று வந்தார். பிறகு அவருக்குக் குளிர் காய்ச்சல் வரவே கொயினு மருந்தை ஊசி போட்டால் விரைவில் குணந்தருமென்ற கருத்தினுல் அவ்வாறு செய்யப்பட்டது. ஊசிபோட்ட அந்த மருந்து தம் மூளையைப் போய்த் தாக்கிவிட்டதென்றும், அதனுல் தான் தம் புத்தி பேதப்பட்டு விட்டதென்றும் அவர்

சொல்லுகிருர். இன்று காலையில் நான் என் அறையில் வேலை பார்த்துக் கொண்டிருக்கையில் அவர் வெளியே இங்குமங்கும் அலைந்து கொண்டும், கூப்பாடு போட்டுக் கொண்டும் அங்க சேஷ்டைகள் செய்து கொண்டும் இருந்ததைக் கண்டேன். நான் அவரை அணுகி அவருடன் கூடவே நடந்தேன். அவர் சாந்தமாகி விட்டார்; ஆனல் நான் அவரை விட்டு இந்தப் பக்கம் வந்தவுடனே மீண்டும் கட்டிலடங்காமல் நடக்கலானுர்; வெறிபிடித்தனமாய் நடந்து கொண்டதோடு எவர் சொல்வதையும் கேட்கவில்லை. ஆகவே அவரைச் சிறைக்கு அனுப்ப வேண்டியதாயிற்று.

"நமது ஊழியர்களுள் ஒருவரைச் சிறைக்கு அனுப்ப வேண்டிவந்தது என் மனத்தை இயற்கையிலேயே புண் படுத்திற்று. 'நீர் ஸர்வரோக நிவாரணி என்று சொல்லிக் கொள்ளும் அந்த உமது ராம நாமம் என்னவாயிற்று?' என்று நான் கேட்கப் படலாம். இதில் படுதோல்வி ஏற்பட்டிருந்தபோதிலும் எனக்கு அதிலுள்ள நம்பிக்கை சிறிதும் தளரவில்லை யென்று நான் இங்கே வற்புறுத்தியாக வேண்டும். ராம நாமம் தோல்வியுறவே முடியாது. விளைந்துள்ள தோல்வி நம்மிடமுள்ள குறைபாட்டையே குறிப்பிடுகிறது. தோல்விக்கான காரணத்தை நாம் நம் உள்ளேயே தேடவேண்டும்."

ஹரிஜன், 1–9–1946

30. முக்தியை நோக்கி

இராமனைத் தம் உள்ளமாம் அரியாசனத்தில் அமர்த்தியுள்ளவரின் இலட்சணம் என்ன? இதை நாம் அறியாவிட்டால் ராம நாமத்திற்குத் தவருகப் பொருள் கொள்ளப் படுவதற்கு இடமேற்பட்டுவிடும். இதற்கு முன்னமேயே அதைக் குறித்து சில தவருன அபிப்பிராயங்கள் வழங்கி வருகின்றன. எத்தனையோ பேர் கையில் செபமாலையும்,

நெற்றியில் நாமமும் கொண்டு அவனுடைய பெயரை பொட்டைப் பாடமாய்ச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்து வரும் இந்த மோசடி நான் இப்பொழுது ராம நாமத்தைத் தொடர்ந்து வற்புறுத்தி வருவதனால் இன்னும் அதிகமாகி விடாதாவென்று என்னிடம் கேட்கப்படுவது சரியே. ஆனால் இம்மாதிரியெல்லாம் நடக்கும் என்பதற்காக நான் அஞ்சக்கூடாது. இவ்வகையில் ஏற்கப்படும் மௌனம் தீமையையே விளைவிக்கும். மௌனத்தின் ஜீவனுள்ள வாக்குக்கு நீண்டகால இதய பூர்வமான அனுஷ்டானம் பின் பலமாய் இருத்தல் அவசியம். அத்தகைய இயற்கையான மௌனம் இல்லாத பொழுது தம் இதயத்தில் இராமனைக் கொண்டுள்ளவர்களின் இலட்சணங்களை அறிய நாம் முயல வேண்டியதே. கீதையில் எவர் 'நிலைத்த மதியுடையோர்' அல்லது 'ஸ்திதப்ரக்ஞ'ரென்று அழைக்கப்படுகிறாரோ அவரே ராம பக்த ரென்று சொல்லலாம். நாம் இன்னும் சிறிது ஆழ்ந்து கவனிப்போமானால் கடவுளின் உண்மையான பக்தன் இயற்கையின் பஞ்ச மூல தத்துவங்களுக்கும் பிழையாது படிந்து நடக்கிறானென்பது தெரியவரும். அவன் அவ்வாறு பணிந்து வருவானாயின் அவனுக்கு நோயே வராது. ஒருக்கால் நோயுற்றாலும் அந்தப் பஞ்சதத்துவங்களின் உதவி கொண்டே அவன் தன்னைக் குணப்படுத்திக் கொண்டு விடுவான். உடலுக்குள் வதிவோன் எவ்வகையிலேனும் உடலை சொஸ்தப் படுத்திக்கொள்ளக் கட்டுப்பட்டவனல்ல. ஆனால் உடலையன்றி தான் வேறல்லன் என்று நம்புவோன் என்ன பாடுபட்டேனும் உடலுக்கு வந்துள்ள நோயைத் தீர்த்துக் கொள்ளவே முயல்வான். ஆனால் ஆன்மாவென்பது உடலினுள் இருந்தபோதிலும் அது உடலினின்றும் வேறுபட்டதென்றும், உடல் அழியும் தன்மையதாயிருக்க ஆன்மாவுக்கு அழிவேயில்லை யென்றும் உணருவோன் பஞ்சபூதங்கள் பயனளியாதபொழுது மனம் கலங்கவோ வருந்தவோ மாட்டான். அதற்கு மாறாகச்சாவை

ஒரு நண்பனென வரவேற்பான். வைத்தியர்களைத் தேடி அலைவதற்கு பதிலாக அவன் தனக்குத் தானே வைத்திய னுவான். அவன் உள்ளே ஆன்மா இருப்பதை உணரு வதனுல் அது ஒன்றையே பூரணமாய்க் கருத்தில் கொண் டிருப்பான்.

இத்தகைய மனிதன் தான் இழுக்கும் ஒவ்வொரு மூச்சிலும் கடவுளின் பெயரையே செபித்துக் கொண்டிருப் பான். உறங்கும் சமயத்திலும் அவனுடைய இராமன் விழித்தே இருப்பான். அவன் செய்யும் எந்தக் காரியத்தி லும் இராமனும் அவனிடமிருந்து வருவான். இத்தகைய பக்தனுக்கு இந்தப் புனிதத் தொடர்பு இறுவதே உண்மைச் சாவெனத் தோன்றும்.

தன் இராமனைத் தன்னைவிட்டுப் பிரியாமல் இருக்கச் செய்வதற்கு உதவவேண்டி பஞ்சபூதங்களும் அவனுக்குக் கொடுக்கக் கூடியவைகளை அவன் ஏற்றுக் கொள்வான். அதாவது மண், காற்று, நீர், சூரிய ஒளி, ஆகாயம் ஆகிய வற்றிலிருந்து பெறக்கூடிய எல்லா நலன்களையும் பெறுவதற்கு மிகவும் சுலுவானதும் எளியதுமான உபாயங்களையே அவன் கையாளுவான். இந்த உதவி ராம நாமத்திலுள்ள குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற் காக அமைந்ததல்ல; அதைப் பெறுவதற்கு உதவக்கூடிய ஒரு உபாயமே இது. உண்மையில் ராம நாமத்திற்குப் பிற உதவி எதுவும் தேவையில்லை. ஆனுல் ராம நாமத்திலும் நம்பிக்கைகொண்டு டாக்டர்களையும் தேடி அலைதல் ஒன்றுக்கொன்று பொருத்தமானதல்ல.

மத நூல்களைப் படித்தறிந்துள்ள நண்பரொருவர் சிறிது காலத்திற்கு முன் நான் ராம நாமத்தைக் குறித்து எழுதியிருந்தவைகளைப் படித்துவிட்டு ராம நாமத்திற்கு நம் உடலையே மாற்றி அமைத்து விடக்கூடிய ரசவாத குண முண்டு என்று எனக்கு எழுதியிருந்தார். வீரியத்தை விரயம் செய்யாமல் சேமித்து வைத்தல் பொருளைச் சேர்த்து வைப்பதை ஒக்குமென்று கூறப்பட்டிருக்கிறது. ஆனுல்

அதை இடையருது மேன்மேலும் அதிக ஆன்மீக பலத்துடன் ஓடிக் கொண்டிருக்கும் அருவியாக்கி என்றும் வீழ்ச்சியுருமற்செய்வதற்கு ராம நாமம் ஒன்றிற்குத்தான் சக்தியுண்டு.

இரத்தமின்றி உடலினுல் நிலைக்க முடியாததைப்போல் ஆன்மாவுக்கு நம்பிக்கையின் விளைவான ஒப்பற்ற தூய பலம் தேவை. இந்த பலம் மனிதனுடைய உடலின் எல்லா அங்கங்களின் எல்லாக் குறைபாடுகளையும் போக்கக் கூடியது. இதனுலேயே ராம நாமம் இதய பீடத்தில் எழுந்தருளியிருக்கும் பொழுது மனிதன் புனர்ஜன்மம் எய்தியவனுகிருன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விதி சிறியோர் பெரியோர் ஆண் பெண் அனைவருக்கும் பொருந்தும்.

இந்த நம்பிக்கை மேல்நாடுகளிலும் காணப்படுவதொன்றே. 'கிறிஸ்தவ விஞ்ஞானங்களி'ல் நாம் இதை ஓரளவு பார்க்கிருேம். ஆனுல் மிகப் புராதன காலந்தொட்டே நம் மூதாதையரிடமிருந்து நமக்குக் கிடைத்துள்ள இந்த நம்பிக்கையை மேலும் உறுதிப் படுத்திக் கொள்வதற்கு நமக்கு வெளி உதவி எதுவும் தேவையில்லை.

—ஹரித்வாரம், 21–6–'47. ஹரிஜன், 29–6–1947

31. பிரார்த்தனைப் பிரசங்கங்களிலிருந்து :

ராமநாமம்—அதன் விதிகளும் ஒழுங்கு முறையும்

காந்திஜி கூறியதாவது : "ராம நாமம் உடல் நலமில்லாதவனுக்கு உதவக்கூடும். ஆனுல் அதற்கு விதிகளும் ஒழுங்குமுறையுமுண்டு. ஒருவர் வயிறு புடைக்கத் தின்றுவிட்டு ராமராம வென்று சொல்லியும் வயிற்றுவலி வருமானுல் என்னைக் குறை கூறுவதில் பயனில்லை. ராம நாமத்தைத்தகுதியுள்ள காரியங்களுக்கே பயன்படுத்தலாம்.

கொள்ளையடித்துவிட்டு ராம நாமத்தைச் சொன்னால் மோக்ஷம் கிடைக்குமென்று எதிர்பார்ப்பதில் பயனில்லை. தம்மைத் தூய்மைப் படுத்திக்கொள்வதற்காகத் தேவையான ஒழுங்கு முறைகளை அனுசரித்து நடக்கச் சித்தமாயிருப்பவர்களுக்கே அது பயன்படும்.''

—பம்பாய்: 15–3–'46

பயன்தரும் மருந்து

உருளிகாஞ்சனில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசியதாவது : "ராம நாம செபம் உடற் கோளாறுகளுக்கும் மனநோய்களுக்கும் தலைசிறந்த ஔடதமாயிருக்க, எந்த டாக்டராலும் வைத்தியராலும் தாம் கொடுக்கும் மருந்துகளைக் கொண்டே நோயைப் போக்கிவிட முடியுமென்று உறுதி கூறமுடியாது. நீங்கள் ஆண்டவனைக் குறித்துப் பிரார்த்தனை செய்வீர்களானால் அவன் உங்கள் நோய்களையும் கவலைகளையும் போக்கி விடுவானென்பதில் ஐயமில்லை. ஆனால் பிரார்த்தனை பயனுள்ளதாவதற்கு பிரார்த்தனை செய்வோர் மன வொருமையுடன் நாமாவளியைச் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் மன அமைதியும் சந்தோஷமும் ஏற்படும்.

"நாம் நிறைவேற்றவேண்டிய பிற நிபந்தனைகளும் உண்டு. நாம் தகுந்த உணவை உட்கொண்டு தேவையான அளவு உறங்கவேண்டும்; கோபமென்பதே கொள்ளக் கூடாது. இவை எல்லாவற்றையும் காட்டிலும் முக்கிய விஷயம், நாம் இயற்கையுடன் பொருந்த வாழ்ந்து அதன் விதிகளைப் பின்பற்றிவரவேண்டும்.''

—பூனா: 22–3–'46

பயிற்சி தேவை

பிரார்த்தனையை அடுத்துப் பேசுகையில் காந்திஜி கூறியதாவது : "உண்மையுள்ள பல சகோதர சகோதரிகள்

தாம் எவ்வளவோ முயன்றும் மனவொருமையுடன் ராமநாமத்தை செபிப்பதாகச் சொல்ல முடியவில்லை யென்று என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்குக் கூறும் பதில், அவர்கள் எல்லையில்லாத பொறுமையுடன் செபத்தைச் செய்துகொண்டே போக வேண்டும் என்பது. ஒரு பையன் டாக்டராக வேண்டு மென்றால் குறைந்தது 16 வருஷம் மிகவும் சிரமப்பட்டுப் படிக்கவேண்டி யிருக்கிறதே, ராமநாமத்தை உள்ளத்தில் பதிய வைத்துக்கொள்வதற்கு இன்னும் எவ்வளவு அதிக காலம் தேவையாயிருக்க வேண்டும்!''

—புது டில்லி: 20–4–'46

அகத்தூய்மையும் புறத்தூய்மையும்

ராமநாம செபத்தின் மூலமாய் தம் உள்ளத்தைச் சுத்தப் படுத்திக்கொள்ளும் ஒருவன் வெளியே காணப்படும் அசுத்தத்தைச் சகித்துக்கொண்டிருக்கமாட்டான். கோடிக் கணக்கான மனிதர்கள் உண்மை சிரத்தையுடன் ராமநாம செபம் செய்யத் தொடங்குவார்களாயின் சமூக நோயான கலகங்கள் நேரா; எவரும் நோயுறவே மாட்டார்கள். அப்பொழுது இம்மண்ணிலேயே விண்ணின் ஆட்சி தோன்றும்.

—புது டில்லி: 21–4–'46

ராமநாமத்தின் துஷ்பிரயோகம்

பிரார்த்தனை முடிந்ததும் பேசுகையில் காந்திஜி மீண்டும் இயற்கைச் சிகிச்சை அல்லது ஆன்மீகக் குறைபாடுகளையும் மனோநோய்களையும் உடற்கோளாறுகளையும் முக்கியமாக ராம நாமத்தைக்கொண்டே சொஸ்தப்படுத்தும் விஷயத்தைக் குறிப்பிட்டார். அவருக்கு எழுதியுள்ள ஒரு நிருபர், சிலர் குருட்டு நம்பிக்கையினால் தம் உள்ளத்தை அடுத்தாற்போல் இருக்க வேண்டுமென்பதற்காக தம் ஆடைகளில் ராம நாமத்தை எழுதிக்கொள்வதைப்

பிரஸ்தாபித்திருந்தார். வேறு சிலர் இலட்சக்கணக்கான முறை ராமநாமத்தை காகிதத்தில் எழுதி, பின் அதைச் சுக்கு நூருய்க் கிழித்துத் தின்றுவிட்டு ராம நாமம் உடலில் பிரவேசித்துவிட்டதாய்ச் சொல்லுகிருர்கள். குருட்டு நம்பிக்கைகள் மலிந்த இந்த நாட்டில் ஏற்கெனவே இருந்தவை போதாவென்று நான் இன்னுமொன்றைப் புகுத்துவதன் மூலமாய் என்னை நானே ஏமாற்றிக் கொள்வதோடு பிறரையும் ஏமாற்றி வருகிறேனென்று எண்ணுகிருர்கள் வேறு சிலர். இந்தப் புகார்களுக்கெல்லாம் என்னிடம் பதிலெதுவுமில்லை. நான் என்னையே சமாதானப் படுத்திக் கொள்வதற்குச் செய்வது, சத்தியம் தவருன முறையில் பயன் படுத்தப்படுவதாலும், அதன் பெயரால் பிறர் மோசடிகளைச் செய்து வருவதாலும் அதற்கு என்ன தீங்கு வந்து விடும் என்று என்னையே கேட்டுக் கொள்வதே. என் உண்மையின் விஷயத்தில் எனக்குச் சந்தேகம் இல்லாதிருக்கும் வரையில் அதைப் பிறர் தவருகப் புரிந்து கொள்வார்களோ, தவருன வழியில் உபயோகிப்பார்களோ என்ற அச்சத்தினுல் உலகமறிய அதைப் பிரகடனம் செய்யாதிருக்க முடியாது. இந்த உலகத்தில் பூரண சத்தியம் கைவரப் பெற்றவர் எவருமே இல்லை. கடவுள் ஒருவருக்கே இந்தத் தகுதியுண்டு. நாம் அறிந்தவையெல்லாம் அரைகுறையான உண்மையே. ஆகவே நாம் உணரும் வகையிலேயே நம்மால் சத்தியத்தைப் பின்பற்ற முடியும். அவ்வாறு சத்தியத்தைப் பற்றி நடப்போர் வழிதவறிப் போவதற்கே இடமில்லை.

—புது டில்லி : 24–5–'46

ராம செபம் செய்யும் முறை

இன்று காந்திஜி பேசுகையில் எந்த வகையில் ராம நாமத்தைச் செபிப்பதனுல் அது தகுந்த பரிகாரமாக உதவுமென்பதை விளக்கினுர் : முதல் நிபந்தனை, அது உள்ளத்தின் உள்ளிருந்து எழவேண்டுமென்பது. அப்படி

யென்றால் என்ன ? நாம் நமது மனநோய்களையும் ஆன் மீகக் குறைபாடுகளையும்போல் முக்கியமில்லாத உடலின் கோளாறுகளைப் போக்கிக் கொள்வதற்காக அலையாத இடங் களிலெல்லாம் அலைந்து படாதபாடுகளெல்லாம் படுவதற்குச் சித்தமாயிருக்கிறோம். "மனிதனுடைய இந்தப் பூதவுடல் ஒரு நாள் அழிய வேண்டியதே. அது இயற்கையாகவே சாகாவரம் பெற்றதல்ல. ஆனால் மனிதர்கள் அதை ஏதோ பிரமாதப்படுத்திக் கொண்டு உள்ளே அழியாவரம் பெற்று அமர்ந்துள்ள ஆன்மாவை அசட்டை செய்கிறார் கள்." ராம நாமத்தில் உறுதியுள்ளவன் உடலைப் பிரமாதப் ப்டுத்துவதை விடுத்து அதைக் கடவுளுக்குப் பணி செய்ய உதவும் ஒரு கருவியென்றே கருதுவான். அந்தப் பணிக்கு அதைத் தகுதிபெறச் செய்வதற்கு ராம நாமமே தலைசிறந்த வழியாகும்.

ராம நாமத்தை இருதய பீடத்தில் ஸ்தாபித்துக் கொள் வதற்கு எல்லையற்ற பொறுமை தேவை. அதற்குள் யுகங்கள் பல கழியினும் கழியலாம். ஆனால் அதற்கான முயற்சியைச் செய்ய வேண்டியதே. அப்பொழுதும் வெற்றி கிட்டுவது கடவுள் அருள் ஒன்றையே பொறுத் திருக்கிறது.

நாம் சத்தியம், நாணயம், அகப் புறத் தூய்மை என்ற நற்குணங்களில் பழகியிருந்தாலல்லது ராம நாமம் நமது உள்ளத்தின் உள்ளினின்று வெளிவராது. ஒவ்வொரு நாளும் மாலைப் பிரார்த்தனையில் நாம் ஸ்திதப்ரக்ஞன் அல்லது நிலைத்த மதியுடையோனுடைய இலட்சணங்களை விவரிக்கும் சுலோகங்களை ஓதிவருகிறோம். நாம் நமது புலன்களை அடக்கி ஆண்டு உணவையும் இன்பத்தை யும் சேவையின் பொருட்டு உயிரைக் காத்து வருவதற் கென்றே ஏற்றுவருவோமாயின் நம்மில் ஒவ்வொருவரும் நிலைத்த மதியுடையோராவது சாத்தியமே. நம்மால் நமது மனத்தில் எழும் எண்ணங்களை அடக்கமுடியாமல், குகைபோன்ற ஒரு சிறு அறையில் எல்லா ஜன்னல்களையும்

கதவுகளையும் மூடிவிட்டுப் படுத்து உறங்கியும் அசுத்தமான காற்றை சுவாசித்து அழுக்குத் தண்ணீரைக் குடித்தும் வருவோமானால் நாம் செய்யும் இராம செபமெல்லாம் பாழே.

ஆனால் தேவையான தூய்மை இல்லையென்பதற்காக இராம செபம் செய்வதையே விட்டுவிடவேண்டு மென்பது இதன் பொருளல்ல. ஏனெனில், இராம செபமே தூய்மை பெறுவதற்கு உதவும் ஒரு வழியுமாகும். மனவொருமை யுடன் இராமசெபம் செய்கிறவனுக்கு புலனடக்கமும் ஒழுங்கு முறையும் சுலபமாய்க் கைவரும். ஆரோக்கியத்திற் கும், சுகாதாரத்திற்கும் உதவும் விதிகளை அவன் இயற்கையா கவே பின்பற்றி வருவான். அவனுடைய வாழ்க்கை சமதரை யில் ஓடும் ஆற்றைப்போல் அமைதியாய் இருந்துவரும். அவன் எவனையும் இம்சிக்கமாட்டான். பிறர் துன்பங்களைப் போக்கவேண்டி சிரமங்களுக்கு உள்ளாதல் அவனுடைய இயற்கையாயிருக்க, அதனால் அவன் மட்டற்ற மகிழ்ச்சி யெய்துவான். ஆகவே நீங்கள் விடாமுயற்சியுடன், விழித் திருக்கும் நேரம் முழுவதிலும் ஓயாமல் இராம செபம் செய்து கொண்டிருங்கள். இறுதியில் உங்களுடைய தூக்கத் திலும் அது உங்களை விட்டகலாதிருந்துவர, ஆண்டவன் அருளினால் உங்கள் உடல், மனம், ஆன்மா ஆகிய எல்லாம் பூரண ஆரோக்கியம் பெற்று விளங்கும்.

—புது டில்லி : 25–5–'46

மோன சிந்தனையின் சக்தி

இன்றைய பிரார்த்தனைக்குப் பிறகு காந்திஜி சொன்ன தாவது: "நீங்கள் ஒவ்வொரு நாளும் பிரார்த்தனைக் கூட்டத் திற்கு என்னுடன் சேர்ந்து ராம பஜனை செய்வதற்கோ, அதை எப்படிச் செய்வதென்று கற்றுக் கொள்ளவோ வருகிறீர்கள். ஆனால் ராம நாமத்தை வாயினால் போதித்து விடமுடியாது. வாயினால் ராம நாமத்தை உச்சரிப்பதைக் காட்டிலும் மனத்தினால் அதைச் சிந்திப்பதற்கு அதிக மகிமையுண்டு. ஒரே ஒரு நல்ல சிந்தனை உலகத்தையே ஆட் கொண்டுவிடும்; அது ஒரு பொழுதும் வீணாகாது.

ஒரு கருத்தை வார்த்தையில் வெளியிடவும் காரியத்தில் செய்யவும் செய்யப்படும் முயற்சியே அதைக் கட்டுப்படுத்தி விடுகிறது. இந்த உலகத்தில் எந்த மனிதனுலும் ஒரு கருத்தைச் சொற்களின் மூலமாகவோ, செயலைக் கொண்டோ பூரணமாய் வெளியிடுதல் கூடாது.

"ஆனல் இதற்காக நாம் எப்பொழுதுமே மௌனமாய் இருந்துவரவேண்டுமென்பதல்ல. தத்துவரீதியாக அது சாத்தியமே. ஆனல் மோன சிந்தனையினுல் பயன் விளை வதற்குத் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் மிகவும் சிரமமாகும். என்னைப் பற்றிய வரையில் என் கருத்துக்கள் போதிய வேகம் பெற்று விட்டன வென்றோ அவற்றை என்னல் போதிய அளவு அடக்கி ஆள முடியு மென்றோ சொல்ல முடியவில்லை. உபயோகமில்லாத எண்ணங்களையும் பொருத்தமில்லாத கருத்துக்களையும் என் மனத்திலிருந்து இன்னும் அகற்ற முடியவில்லை. அந்த நிலை எய்துதற்கு எல்லையிலாப் பொறுமையும் தவமும் தேவை.

"நான் நேற்று ராம நாமத்திற்குள்ள சக்திக்கு ஓர் அளவே இல்லை யென்று சொன்னது வெறும் அலங் காரப் பேச்சல்ல; அத்தனையும் உண்மை. ஆனல் அதை உணரவேண்டுமானுல் ராம நாமம் மாசுமருவற்ற உள்ளத்தின் உள்ளிருந்து வரவேண்டும். அந்த நிலையை எய்துதற்கே நான் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். அந்நிலையை நான் ஒருவாறு என் மனத்தில் உருவாக்கிக் கொண்டிருந்தபோதிலும் அனுபவத்தில் இன்னும் அதைப் பூரணமாய் எய்தினேனில்லை. அந்த நிலையை எய்திவிடும் பொழுது இராம நாம செபமும் தேவையில்லாது போய் விடும்.*

---

* ராம நாமமே தடையாய் இருக்கக்கூடிய நிலையொன்று வரு மென்று நான் எதிர்பார்க்கிறேன். இராமன் வாக்குக்கு அப்பாற் பட்டவனென்பதை நான் உணரும்பொழுது நாமத்தை செபிக்க வேண்டிய தேவையே எனக்கு இராது. —யங் இந்தியா, 14–8–'24

"நான் இங்கிருந்து சென்ற பிறகும் நீங்கள் தங்கள் வீடுகளில் தனித்தும் பலர் ஒன்று சேர்ந்தும் ராம பஜனையைத் தொடர்ந்து செய்துவருவீர்களென்று எதிர் பார்க்கிறேன். சமூகப்பிரார்த்தனையிலுள்ள இரகசியம் என்ன வென்றால், கூடியுள்ள பலரிடத்திலிருந்தும் கிளம்பும் மோன சக்தி கூட்டத்திலுள்ள அத்தனை பேருக்கும் இலட்சியத்தை எய்த உதவும்."

—புது டில்லி: 26–5–'46

ராமநாமத்தை யொத்த மந்திரமில்லை

இன்றைய பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசும் பொழுது காந்திஜி ராமநாமத்தின் அமைதி தரும் செய்தியை விளக்கத் தொடங்கிக் கூறியதாவது: "ராம நாமம் சிலருக்கே உரிய தல்ல. அது எல்லாருக்கும் சொந்தம். அதை செபிப்பவன் என்றும் வற்றாத, விலைமதிக்க வொண்ணாத பொக்கிஷத் தைத் தனக்கெனச் சேமித்துக் கொள்கிறான். நாம் அதிலிருந்து எடுக்கவெடுக்க அது மேன்மேலும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. அதற்கொரு முடிவே இல்லை. உபநிடதம் கூறுவதைப் போல முடிவில்லா வஸ்துவை முடிவில்லாததிலிருந்து எடுத்த பிறகும் முடிவில்லா வஸ்துவே எஞ்சி நிற்கிறது. எல்லா நோய்களுக்கும் கைகண்ட மருந்தாம் அது.

"ஆனால் உள்ளத்தினுள்ளிருந்து அது வரவேண்டு மென்ற நிபந்தனையொன்றுண்டு. தீய எண்ணங்கள் உன்னைப் பற்றிக் கொண்டிருக்கின்றனவா? காமமோ, பேராசையோ உன்னைப் பீடிக்கின்றதா? அப்பொழுது அவற்றை விரட்டுவதற்கு ராமநாமத்தைப் போன்ற மந்திரம் வேறெதுவுமில்லை. சுளுவான, நேர்மையற்ற முறையில் பெருத்த செல்வம் சேர்க்கவேண்டுமென்ற ஆசை உங்களுக்கு உண்டாயிருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். ராம நாமத்தில் உங்களுக்கு நம்பிக்கை யிருக்குமென்றால் நீங்கள் தம்மிடமே பின்வருமாறு

சொல்லுவீர்கள்: 'என் பெண்டு பிள்ளைகளுக்காக, அவர்கள் வீணில் செலவழித்துத் தீர்க்கும்பொருட்டு நான் எதற்காகச் செல்வத்தைச் சேர்த்துவைக்கவேண்டும்? அவர்களுக்கு நல்ல நடத்தை ஏற்படச்செய்து சிறந்த கல்வியும் பயிற்சியு மளித்தால் அவர்கள் உண்மையுடன் உழைத்து உடலைக் கொண்டு வேலை செய்து தம் ஜீவனத்திற்கு வேண்டியதை சம்பாதித்துக்கொள்ள மாட்டார்களா?' இடையருது ராம நாமத்தை செபித்துவருவதனுல் உங்களுடைய அறியாமை யும் வீண் பாசமும் நீங்க, சந்ததிகளுக்காகப் பெருத்த பணத்தில் ஆசைகொண்டு திரிந்தது பெரிய முட்டாள்தன மென்றும் எல்லாக் கட்டுகளிலிருந்தும் அஞ்ஞானத்தி லிருந்தும் விடுவிக்கக்கூடிய ஆண்டவன் பெயரென்ற விலைமதிக்கவொண்ணுச் செல்வத்தையே அவர்களுக்கு அளிக்கவேண்டுமென்றும் உணர்வீர்கள். இத்தகைய உணர்ச்சியிலிருந்து பிறக்கும் மகிழ்ச்சிகொண்டவர் தம் மனைவி மக்களைப் பார்த்து, 'நான் உங்களுக்காகத் தேடிச் சென்ற செல்வத்தைக் கொண்டுவந்தேனில்லை. ஆனுல் நான் கொண்டு வந்திருப்பது அதைவிட எவ்வளவோ அதிக மதிப்பு வாய்ந்தது' என்று சொல்லுவார். அவர்கள் அவர் சொல்வதை நம்பமுடியாதவர்களாய், 'எங்கே? எங்கே காட்டுங்கள்!' என்பார்கள். அதற்கு அவர், 'அது செல்வங்களிலெல்லாம் தலைசிறந்த கடவுளின் திருநாமமே. எனெனில் அது மற்ற எல்லாச் செல்வங்களின் ஆசையை யும் போக்கிவிடுகிறது. அது என் உள்ளத்தில் நன்கு பதிந்துள்ளது' என்று பதில் அளிப்பார்."

—மஸ்ஸுரி: 2–6–'46

பிரார்த்தனைகள் அனைத்தின் சாரம்

மாலைப்பிரார்த்தனைக்குப் பிறகு பேசுகையில் காந்திஜி, "நீங்கள் அனைவரும் தம்தம் வீடுகளில் காலை மாலை இரு நேரங்களிலும் தவருமல் பிரார்த்தனை செய்து வருவீர்க ளென்று எதிர்பார்க்கிறேன். நீங்கள் ஸம்ஸ்கிருத சுலோகங்

களை விரும்பாவிட்டால் கற்கவேண்டுவதில்லை; ராமநாமம் ஒன்றே போதும். கடவுளைத் தம் உள்ளத்தினுள் இருத்திக் கொள்ளலே பிரார்த்தனைகள் அனைத்தின் சாரம். நீங்கள் அதில் வெற்றி பெறுவீர்களானால் உங்களுக்கும், சமூகத்திற்கும், உலகிற்கும் நன்மையுண்டு'' என்றார்.

—மஸ்ஸூரி: 8–6–'46

வெறும் ஆஷாடபூதித்தனம்

வாயால் ராமநாமத்தை செபித்துக்கொண்டு நடைமுறையில் இராவணன் வழியே செல்வதனால் ஒரு சிறிதும் பயனில்லை. அது வெறும் ஆஷாடபூதித்தனமே. ஒருவன் தன்னை ஏமாற்றிக் கொள்ளலாம்; உலகத்தை ஏமாற்றலாம்; ஆனால் ஸர்வேச்வரனை ஏமாற்றுவதென்பது நடவாது.

—புது டில்லி: 18–6–'49

கடவுள் திருநாம அமுதம்

பிரார்த்தனையில் பாடப்பட்ட மீராபாயின் கீர்த்தனையை விளக்கும் முகத்தான் காந்திஜி, "அந்தப் பாட்டில் பக்தர் தம் ஆன்மாவிடம் கடவுளின் திருநாம அமுதை வேண்டியமட்டும் அள்ளி அள்ளிப் பருகும்படிக் கூறுகிறார். நாம் தினமும் உண்ணும் உணவும் அருந்தும் பானங்களும் அளவுக்கதிகமானால் திகட்டலை உண்டாக்கி நோயை விளைவிக்கின்றன. ஆனால் கடவுளின் திருநாம அமுதத்திற்கோ அத்தகைய வரம்பெதுவும் கிடையாது. அதைப் பருகப்பருக பருகுவோருக்கு அதன் தாகம் பெருகவே செய்கிறது. ஆனால் அது உள்ளத்தில் நன்கு பதியவேண்டும். அப்பொழுது எல்லா அஞ்ஞானங்களும், பற்றும், போக நசையும், பொறாமையும் தாமே நம்மைவிட்டு விலகிப்போம். ஆனால் பிடிவாதமும், பொறுமையும் வேண்டும். அத்தகைய முயற்சிக்கு வெற்றி கிடைத்தல் உறுதி'' என்றார்.

—புது டில்லி: 18–6–'46

நம்பிக்கை விளக்கும் அற்புதங்கள்

"பக்தருக்கு ஏமாற்றமென்றால் என்னவென்றே தெரியாது. ஏனெனில் அனைத்தையும் வகுத்து நடத்தும் அந்த ஆண்டவனிடம் காலமே அடக்கமென்றும், அவன் அனைத்தையும் அததற்குரிய காலத்தில் செய்வானென்றும் அவருக்குத் தெரியும். ஆகையால் பக்தர் நம்பிக்கையுடன் பொறுமையாக எப்பொழுதும் காத்திருப்பார்."

காந்திஜி விளக்கிக் கூறியது கஜேந்திரனும் முதலையும் என்ற புராணக் கதையை : "ஆற்றில் நீர் அருந்தச் சென்ற கஜராஜன் அதற்குத் தெரியாமல் முதலையினால் பற்றி நீருக்குள் இழுத்துச் செல்லப்பட்டது. அது போராடப் போராடக் கீழே சென்றுகொண்டே இருந்தது. இவ்வாறிருக்கையில் இனி தன் உடல்வலியினால் ஒன்றும் ஆகாது என்ற நிலைமை வரவே, அது தன் முழுப் பொறுப்பையும் ஆண்டவன் அருளிடம் ஒப்படைத்து அவனுடைய உதவியைக் கோரவே, துவாரகாநாதன் கண்ணிமைப்பொழுதில் வந்து அதைக் காத்தான்.

"இந்தக் கதையிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியது, ஆண்டவன் தன் அன்பர்களை ஆபத்துக் காலங்களில் ஒருபொழுதும் கைவிடமாட்டான் என்பது. ஆனால் அதற்குள்ள ஒரு நிபந்தனை என்னவென்றால், அன்பருக்கு உண்மையான நம்பிக்கையும், அவனே அடைக்கல மென்ற உறுதியும் இருக்கவேண்டும். நமக்கு நம்பிக்கை இருக்கிறதென்பது நம் கடமையைச் செய்தபின் அவனாக நமக்கு மகிழ்ச்சியையோ, துன்பத்தையோ, நன்மையையோ, தீமையையோ எதைச் செய்தாலும் அதை 'எல்லாம் அவன் அருள்' என்று ஏற்கச் சித்தமாயிருப்பதிலிருந்து வெளியாக வேண்டும். தம் தலைநகரம் தீப்பற்றி எரிகிறது என்று சொல்லக்கேட்டு 'அதைப்பற்றிக் கவலைப்படுவதற்கு நான் யார்?' என்று கேட்ட ஜனகராஜனைப் போல் அவர் இருப்பார்.

"அவர் பரபரப்பின்றி மன அமைதியுடன் இருந்ததின் இரகசியம் அவர் எப்பொழுதும் விழிப்புடன் தம் கடமையில் சிறிதும் தவருமல் இருந்து வந்ததே. தம் கடமையைச் செய்தபின் மற்றவை யெல்லாம் ஆண்டவன் பொறுப்பு என்று விட்டுவிடுவது அவர் வழக்கம்.

"ஆகையால் தம் பக்தருக்கு ஆபத்து எதுவும் நேரும்படி கருணைக்கடலான கடவுள் செய்யவேமாட்டார். ஆனால் ஆபத்து நேருமானால், அவர் தம் விதியையோ கடவுளையோ நொந்து கொள்ளாது 'இதுவே ஆண்டவன் விருப்பம்' என்ற உறுதி காரணமாக மன அமைதியைச் சிறிதும் நழுவவிடாது மன நிறைவுடன் அனைத்தையும் ஏற்றுக் கொள்வார்."

—புது டில்லி : 20–6–'46

ராமநாமத்தின் பொருள்

இன்றைய மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் ராம நாமத்தின் பொருளை விளக்கி காந்திஜி கூறியதாவது : "கடவுளென்பது ஒரு நபரல்ல. அது ஸர்வவ்யாபியாய் ஸர்வசக்திமானுய் விளங்கும் வஸ்து. அதைத் தம் உள்ளத்தில் தாங்கும் எந்த ஆண், அல்லது பெண்ணுக்கும் மின்சாரத்திற்கு உள்ளது போன்று நிதர்சனமும் ஆனால் அதிலும் எவ்வளவோ சூக்குமமும் ஆன சக்தி அல்லது வீரியம் ஏற்படும்." "நான் செய்துவருவது ஒருவகைக் குருட்டு நம்பிக்கைப் பிரசாரமா ?" என்ற கேள்வியைத் தாமே கேட்டுக்கொண்டு, "இல்லை, வெறும் ராமநாமத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வதனுல், அசாதாரணமான விளைவு எதுவும் ஏற்பட்டுவிடாது. ராமநாமம் என்பது ஜாலவித்தையைப் போன்றதல்ல. அதன் தத்துவம் முழுவதையும் நன்கு உணர்ந்து நாம் அதை செபிக்கவேண்டும். அது எவ்வளவோ காலமாக, எத்தனையோ நிபுணர்கள் செய்த சோதனைகளின் விளைவாகத் தோன்றிய கணித

சூத்திரம் போன்றது. கிளிப்பாடமாக ராமசெபம் செய்வதனால் பலம் எதுவும் கிட்டாது. அதற்கு அதன் கருத்தை உணர்ந்து செபத்திற்குரிய நிபந்தனைகளுக்கேற்ப நடந்தாக வேண்டும். கடவுளின் பெயரைச் சொல்வதற்கு கடவுள் ஒப்பக்கூடிய முறையில் வாழ்ந்தாக வேண்டும்" என்று விடையளித்தார்.

—பூனா: 2–7–'46

அகத்துப்புரவும் புறத்துப்புரவும்

இன்றைய பிரார்த்தனைப் பேச்சின் இடையில் மற்ற விஷயங்களுடன் தாம் ஜாகை வைத்துக் கொண்டுள்ள, அசுத்தத்தினிடையில் அமைந்துள்ள ஹரிஜனங்களின் வாசஸ்தலத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்: "சுகாதார நிர்வாகத்தை நடத்தி வருகிறவர்கள்—நகரசபையும், பொது மராமத்து இலாக்காவும்—இந்த ஆபாசத்தை எப்படித் தான் பார்த்து சகித்துக் கொண்டிருக்கிறார்களோ வென்று எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. நான் அங்கே போய்த் தங்குவதால் அந்த இடத்தை ஆரோக்கியத்திற்கும் சுகாதாரத்திற்கும் உகந்ததாக்க ஒரு தூண்டுதல் ஏற்படவில்லையானால் என்ன பயன்?

"இந்த விஷயங்களுக்கும் பிரார்த்தனைக்கும் என்ன சம்பந்தம்? புறத் துப்புரவு பற்றிய விதிகளுக்கு ஒத்து நடவாதவன் அகத் துப்புரவுக்காகப் பிரார்த்தனை செய்ய இயலாது. நீங்கள் பிரார்த்தனைக்கு வருவதற்குக் காரணம் என்னதான் நடக்கிறதென்று பார்ப்போமே என்ற எண்ணமாய் மட்டும் இருக்குமானால் வந்ததன் மூலமாய் ஒரு பாவமே செய்தவராவீர்கள். பிரார்த்தனையில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தால் அகத்துப்புரவும் புறத் துப்புரவும் கிட்ட வேண்டுமென்று வேண்டிக் கொள்ள வேண்டும். சொல் வேறு செயல் வேறு என்பது மோசடியே. எவரும் கடவுளை ஏமாற்ற முடியாது. ஏனெனில் அவர் ஸர்வவியாபி, ஸர்வசக்திமான்.

"அங்கேயுள்ள அசுத்தத்திற்கும், அழுக்கிற்கும் ஒரு அளவேயில்லை. கக்கூசுகள் ஒரே ஆபாசமாயிருப்பதனால் தாம் அவைகளை உபயோகிக்கவே முடியவில்லை யென்றும் எங்கும் ஈ மொய்த்த வண்ணமிருப்பதால் எனக்கு ஏதேனும் நோய் வந்து உயிருக்கு ஆபத்து நேராமலிருக்க வேண்டுமே என்று தாம் கவலைப் படுவதாயும் டாக்டர் டின்ஷா என்னிடம் சொன்னார். ஆனால் எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை; என்னுடன் உள்ள இரு டாக்டர்களும் என்னைக் கவனித்து வந்த போதிலும் நான் கடவுளை யன்றி வேறு எவரையும் நம்பியிருக்கவில்லை. கடவுள் என் உடம்பு கெடாது பார்த்துக் கொள்வார். ஆனால் என் நண்பர்களுக்கோ கடவுளிடம் அத்தகைய நம்பிக்கை யில்லை."

—பம்பாய் : 6-7-'46

தலைசிறந்த மருந்து

பிரார்த்தனைப் பேச்சில், காந்திஜி நண்பர்களிடமிருந்து, தாம் விடாது இருமிக்கொண்டிருப்பதைக் குறித்துக் கவலை தெரிவிக்கும் பல கடிதங்களும், தந்திகளும் வந்து கொண்டிருப்பதைக் குறிப்பிட்டார் : "என்னுடைய பேச்சு ஒலி பரப்பப்படுகிறதா, அத்துடன் மாலை நேரத்தில் திறந்த வெளியில் அடிக்கடி தொந்தரவு தரும் இருமலும் ஒலி பரப்பில் எங்கும் எட்டி விடுகிறது. ஆனால் சென்ற நான்கு நாட்களாக மொத்தத்தில் இருமலின் சிரமம் குறைவென்றே சொல்ல வேண்டும். சீக்கிரத்தில் அது அறவே நீங்கிவிடுமென்றும் நம்புகிறேன். இருமல் நீடித்ததற்குக் காரணம் நான் அதற்கெனச் சிகிச்சை எதுவும் செய்து கொள்ள மறுத்ததாகும். ஆரம்பத்திலேயே பென்சிலினை ஏற்றிருந்தால் மூன்று நாளில் குணமேற்பட்டிருக்குமென்றும், இல்லையேல் குணமாவதற்கு மூன்று வாரமாகுமென்றும் டாக்டர் ஸுசீலா சொன்னார். பென்சிலினுக்குள்ள சக்தியில் எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் சகல ரோகங்

களுக்கும் ராம நாமமே தலைசிறந்த மருந்து; ஆகவே அது எல்லா மருந்துகளுக்கும் மேலானது என்று நான் நம்புபவன். நாற்புறமும் தீ கொழுந்துவிட்டெரியும் இந்த சந்தர்ப்பத்தில் கடவுளிடம் பரிபூரண நம்பிக்கை கொண்டிருக்க வேண்டியது மிக மிக அவசியம். கடவுள் ஒருவரால் தான் இத்தீயை அவிக்கும்படி மனிதரைச் செய்யமுடியும். என் மூலமாய் இன்னும் சேவை செய்விக்க வேண்டியிருக்குமாயின் கடவுள் என்னை உயிருடன் வைத்திருப்பார்; இல்லையேல் அழைத்தேகி விடுவார். ராம நாமத்தில் உறுதியுடன் இருக்கும்படி கவி மனிதனிடம் வற்புறுத்திக் கூறும் பாட்டை நீங்கள் இப்பொழுதுதான் கேட்டீர்கள். கடவுள் ஒருவர்தான் மனிதனுக்கு அடைக்கலம். இப்பொழுது எழுந்துள்ள நெருக்கடியில் கடவுளிடம் என்னைப் பரிபூரணமாக ஒப்புவித்து உடற் கோளாறுக்காக வைத்திய உதவியைப் பெருதிருக்க விரும்புகிறேன்.”

—புது டில்லி: 18-10-’47

32. தினக் கருத்துக்கள்

உடல் கெடுவதைக் குறித்து எவரும் வெட்கப்பட வேண்டும். உடல் கெட்டதென்ருல் அதற்கு ஏதோ குற்றம் குறை நடந்திருக்கிறது என்பதுதான் பொருள். உடலும் மனமும் முற்றிலும் செவ்வையாய் இருக்கும் ஒருவருக்கு நோய் என்பதே ஒருபொழுதும் வரக்கூடாது.

—ஸேவாகிராமம்: 26-12-’44

தீய எண்ணம் ஒன்று தோன்றியதென்ருல் அதையும் நோயின் அறிகுறி யென்றே கருதவேண்டும். ஆகையால் தீய எண்ணங்கள் தோன்ருதவாறு நாம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

—ஸேவாகிராமம்: 27-12-’44

தீய எண்ணங்களுக்குக் கைகண்ட மருந்து ராம நாமமே. அது உதட்டினுல் மட்டும் உச்சரிக்கப்படுவதாயிராது உள்ளத்திலிருந்து எழுவதாய் இருக்கவேண்டும்.

—ஸேவாகிராமம் : 28-12-'44

நோய்கள் எத்தனையோ இருப்பதைப்போல வைத்தியர்களுக்கும் அவர்கள் செய்யும் சிகிச்சைகளுக்கும் கணக்கில்லை. நாம் எல்லா நோய்களும் ஒன்றென்றும் இராமன் ஒருவனே அதற்கு வைத்தியனென்றும் கருதுவோமானுல் நம் தொந்தரவுகளிற் பெரும்பாலானவை தவிர்ந்துபோம்.

—ஸேவாகிராமம் : 29-12-'44

என்றும் இருப்பவனும் ஒருபொழுதும் கைவிடாத வைத்தியனுமான இராமன் இருப்பதை அறவே மறந்து சாக்காட்டிற்கு இலக்கான வைத்தியர்களையும் டாக்டர்களையும் தேடி அலைகிருேமே, இது என்ன விந்தை!

—ஸேவாகிராமம் : 30-12-'44

நாமும் ஒரு நாள் சாகவேண்டியவர்களே; டாக்டர்கள் செய்யும் வைத்தியத்தினுல், அதிகமானுல், ஒன்றிரண்டு நாள் அதிகம் ஜீவிக்கலாம் என்பது தெரிந்திருந்தும் நாம் படாத பாடுகளெல்லாம் படுகிருேமே, அது மேலே கூறியதைவிட அதிக வியப்பிற்குரிய விஷயம்.

—ஸேவாகிராமம் : 31-12-'44

சிறியோரும் முதியோரும், தனிகரும் வறியோரும்—எல்லோரும் நம் கண் முன்னரே மடிந்து மறைகிருர்கள். ஆயினும் நாம் இராமன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு அமைதியாய் அமர்ந்திராது ஒரு சில நாட்கள் அதிகம் ஜீவித்திருப்பதற்காக நம்மால் முடிந்ததை யெல்லாம் செய்து பார்க்கிருேமே!

—ஸேவாகிராமம் : 1-1-'45

இது ஒன்றை உணர்ந்து இராமன்மீது நம் பாரம் முழுவதையும் போட்டுவிட்டு, எந்த நோய்வந்தாலும் பொறுமையுடனும் உண்மை மனவமைதியுடனும் வாழமுடியுமானல் எவ்வளவு நன்ருயிருக்கும்!

—ஸேவாகிராமம்: 2-1-'45

தெய்வபக்தி உள்ளவனென்று கருதப்படும் ஒருவன் நோயுற்று வருந்துகிருனென்ருல், அவனிடம் ஏதோ குறையிருக்கிறதென்றே பொருள்.

—ஸேவாகிராமம்: 22-4-'45

ஒருவன் எவ்வளவோ முயன்றும் தன் மனத்தைத் தூயதாக்கிக்கொள்ள முடியாதிருக்குமாயின் அவனுக்கு ராம நாமமே கதி என்று இருந்துவிடுவதைத் தவிர வேறு உபாயமில்லே.

—சென்னேயை நெருங்குகையில்: 21-1-'46

ஆலோசித்துப் பார்க்கப் பார்க்க இதயபூர்வமாயும், புத்தி பூர்வமாயும் செய்யப்படும் ராமசெபம் ஸர்வரோக நிவாரணி என்பதை நான் அதிகமாய் உணருகிறேன்.

—உருளி: 22-3-'46

காமம், குரோதம் முதலியவைகள் உடல் நோய்களே விடக் கொடியவை; ராம நாமத்தைத் தவிர அவைகளுக்கு வேறு பரிகாரம் கிடையாது.

—உருளி: 23-3-'46

மனவழுக்கு உடலழுக்கினும் ஆபத்தானது; ஆனல் வெளியழுக்கு உள்ளத்தழுக்கின் ஒரு அறிகுறியேயன்றி வேறல்ல.

—உருளி: 24-3-'46

ஆண்டவனிடம் அடைக்கலமாவதனுல் விளேயும் மகிழ்ச்சியையும் இன்பத்தையும் யாரால் விவரிக்க முடியும்?

—உருளி: 25-3-'46

அதற்குரிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கிறவர்களுக்கு இராம நாம செபம் உதவுகிறது.

—புது டில்லி : 8-4-'46

இராமன் உவக்கும் சேவையையும் உடன் செய்யாது ராமநாமத்தை மட்டும் செபித்துக் கொண்டிருப்பதால் பயனெதுவுமில்லை.

—புது டில்லி : 21-4-'46

நோயால் மாய்கிறவர்களைவிட நோயின் பீதியினுல் மாய்கிறவர்கள் அதிகம்.

—ஸிம்லா : 7-5-'46

மூவகை நோய்களுக்கும் ராம நாமம் கைகண்ட மருந்து.

—புது டில்லி : 24-5-'46

ராம நாமமே கதி என்று இருப்பவருடைய விருப்பம் அனைத்தும் நிறைவேறும்.

—புது டில்லி : 25-5-'46

ராம நாம அமுதத்தைப் பருக விரும்புகிறவர் அதற்கு முன்பே காமம் குரோதம் முதலியவைகளை அகற்றிக் கொண்டுவிட வேண்டும்.

—புது டில்லி : 20-6-'46

குறை எதுவுமின்றி சௌக்கியமா யிருக்கும்பொழுது எல்லோரும் கடவுள் பெயரைச் சொல்லுகிறுர்கள். ஆனுல் ஒன்றும் கைகூடி வராமல் துன்பத்தில் தத்தளிக்கும் சமயத்தில் கடவுளை மறவாதிருப்பவனே உண்மை பக்தன்.

—பம்பாய் : 6-7-'46

ராம நாம அமுதம் உள்ளத்தை மகிழ்வித்து உடற் கோளாறுகள் அனைத்தையும் அகற்றி விடுகிறது.

—பூனு : 9-7-'46

33. இரு கடிதங்கள்

I

எரவாடா மந்திரம், 12–11–1930.

அன்புள்ள........,

உன் உடல் நலத்திற்காக நீ இடைமுழுக்குச் செய்வதோடு வெயில் காயவும் வேண்டும். மன அமைதிக்கோ ராம் நாமமே தலைசிறந்த மருந்து. புலன்கள் வருத்தும்பொழுது நீ உன்னையே அடக்கிக்கொள். கடவுள் உவக்கும் வழியிற் செல்ல விரும்புவோருக்கு கடவுளின் சிருஷ்டியாகிய மக்களுக்குச் சேவை செய்வதொன்றே உபாயம். கடவுளின் அருள் அல்லது வழி என்பதற்கு வேறு பொருளெதுவுமில்லை.

பாபுவின் ஆசிகள்

II

ஸேவாகிராமம், 9–1–1945.

அன்புள்ள........,

உன் கடிதம். நீ குணமடைந்தாலும் அடையா விட்டாலும்—கவலை ஏன்? கடவுளின்மீது எந்த அளவுக்கு நம் பாரத்தைப் போடுகிறோமோ அந்த அளவுக்கு நமக்கு மன அமைதி ஏற்படுகிறது. வைத்தியர்களும் டாக்டர் களும் இருக்கத்தான் செய்கிறார்கள்; ஆனால் அவர்கள் நமக்குச் செய்யும் உதவி நம்மைக் கடவுளிடமிருந்து விலகும்படி செய்வதே. அதனாலேயே நான் உன்னை அங்கே அனுப்புவது நலமென்று கருதினேன். இயற்கைச் சிகிச்சைமுறை நம்மைக் கடவுளின் அருகில் அழைத்தேகு கிறது. அதுவும் வேண்டாமென்று நம்மால் இருக்க முடியு மானால் எனக்கு அதிலும் ஆக்ஷேபணை இல்லை. ஆனால் உபவாசத்திற்கு அஞ்சுவானேன்? சுத்தமான காற்று வேண்டாமென்று கூறுவதுதான் ஏன்? இயற்கைச் சிகிச்சை என்பதற்கு இயற்கையை, அதாவது கடவுளை அணுகுதல்

என்பது பொருள். எனக்கு இதில் எவ்வளவு வெற்றி கிடைக்கிறதென்று பார்ப்போம். ஆனால் இதற்காக நான் அளவை மீறி என்னை சிரமத்திற்கு உள்ளாக்கிக் கொள்வேனோவென்றால், நிச்சயமாய் மாட்டேன்.

பாபுவின் ஆசிகள்

34. வினு விடை

பாராயணம்

வினு :-பிறருடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுதோ, அறிவைச் செலுத்தி வேலை செய்துகொண்டிருக்கும் பொழுதோ, திடீரென்று ஒருவருக்குக் கவலைகள் தோன்றும் பொழுதோ மனவொருமையுடன் ராமநாமத்தை செபித்தல் சாத்தியமா? இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் இராம செபம் செய்கிறவர்கள் இருக்கிறார்களா? இருக்கிறார்களென்றால் அவர்கள் இதை எப்படிச் செய்கிறார்கள்?

விடை :—அனுபவத்திலிருந்து தெரிவதென்னவென்றால், ராம நாமம் ஒருவரது உள்ளத்தில் கோயில்கொண்டிருக்குமாயின் எந்த சமயத்திலும்,—தூக்கத்திலும்கூட அதை செபிக்கலாம். ராம செபம் பழக்கத்திற்கு வந்துவிடும் பொழுது அதை செபிப்பது மூச்சுவிடுவதைப்போல இயற்கையாகிவிடுகிறது. இல்லையேல் இராம நாம செபம் வெறும் சடங்காகவே இருந்துவரும். அதிகமானால் அது உள்ளத்தின் மேல் பரப்பைத் தொட்டதாகலாம். உள்ளம் முழுவதையும் ராம நாமம் ஆட்கொண்டுவிடும்பொழுது அதை வாயினால் செபித்தல் என்ற பிரச்னையே எழாது. ஏனெனில், அது அப்பொழுது வாக்கை மீறியதாகிவிடுகிறது. ஆனால் இந்த உயரிய நிலையை எய்தியவர் ஒரு சிலரே இருப்பர் என்பது உண்மை.

ராமநாமத்திற்கு உண்டென்று சொல்லப்படும் சக்திகள் அத்தனையும் அதற்கு உண்டு என்பதில் சந்தேகமில்லை.

எவரும் விரும்பியமாத்திரத்தில் ராம நாமத்தைத் தம் உள்ளத்தில் பதித்துக்கொண்டுவிடுதல் சாத்தியமில்லை. தளராத முயற்சியும் பொறுமையும் அதற்கு வேண்டும். உண்மையில் எங்குமிராத பரிசவேதியைப் பெறும் பொருட்டு மக்கள் எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்கள், எவ்வளவு பொறுமையாய் உழைத்திருக்கிறார்கள்! கடவுளின் திருநாமமோ உண்மையில் அதைவிட எவ்வளவோ சக்தி வாய்ந்தது, என்றுமிருப்பது.

சேவையா, செபமாலையா?

வினா :—வேலையின் நிர்ப்பந்தங்கள் அல்லது நெருக்கடி காரணமாக ஒருவரால் முறைப்படி தினசரி பிரார்த்தனைகளையும் நித்திய கர்மங்களையும் செய்ய முடியவில்லையென்றால் அதில் குற்றமுண்டா? சேவை, செபமாலை ஆகிய இரண்டினுள் எது ஏற்கத்தக்கது?

விடை :—எத்தகைய விபரீதமான சந்தர்ப்பங்களிலும் வேலை நெருக்கடிகளிலும் இராம நாம செபம் மட்டும் நிற்கக்கூடாது. வெளியநுஷ்டானம் சந்தர்ப்பத்தையொட்டி மாறும். கையில் மாலையில்லாமையினால் உள்ளத்தில் உறுதியாய் இடம்பெற்றுள்ள ராம நாமம் தடைப்படாது.

ராம நாமம்

வினா :—ராம நாமத்தை உள்ளத்தில் பதித்துக்கொண்டிருந்தால் போதாதா? அதை வாயினால் சொல்வதற்கு விசேஷ மகிமை ஏதேனும் உண்டா?

விடை :—ராம நாமத்தை வாயினால் செபிப்பதற்குத் தனி மகிமையுண்டு என்பது என் நம்பிக்கை. உண்மையில் தம் உள்ளத்தில் கடவுள் வசிப்பதை ஒருவர் உணருவாரானால் அவர் செபம் செய்யத்தேவையில்லை என்பதை நான் ஒப்புகிறேன். ஆனால் அத்தகைய எவரையும் நான் கண்டதில்லை. இதற்கு மாறாக ராம நாம செபத்திற்கு

அசாதாரணமான மகிமையுண்டு என்பது என் சொந்த அனுபவம். ஏன், எப்படி என்றெல்லாம் தெரிந்து கொள்ளத் தேவையில்லை.

பின் இணைப்பு :—

I. இந்த இராமன் யார்?

எல்லா நோய்களுக்கும் கைகண்ட மருந்து என்று எந்த இராமன் பெயரைக் கூறிவருகிறேனோ அவன் சரித்திரத்தில் வரும் இராமனுமல்ல, மந்திரவாதிகளும் மாயாஜாலக் காரரும் மந்திரமாய் உபயோகிக்கும் இராமனுமல்ல. ஸர்வ ரோக நிவாரணி என்று எந்த இராமன் பெயரைக் குறிப்பிட்டு வருகிறேனோ, பக்தர்களெல்லாம் எதை செபித்ததன் விளை வாகத் தூய்மையும் மன அமைதியும் பெற்று வந்திருக்கிறார் களோ அந்தக் கடவுளே. அது மனம், ஆன்மா, உடல் ஆகிய அனைத்தின் நோய்களுக்கும் கைகண்ட தலைசிறந்த மருந்து. உடற் கோளாறுகளை டாக்டர்களிடமும், வைத்தி யர்களிடமும் போய் குணப்படுத்திக் கொள்ளலாமென்பது உண்மையே. ஆனால் ராம நாமமோ நமக்கு நாமே டாக்டர் அல்லது வைத்தியராகவும், நோயைப்போக்கும் அமுதை நம் உள்ளத்திலிருந்தே பெறவும் உதவுகிறது. தீராத வியாதியாயிருப்பதால் நம்மால் தீர்த்துக் கொள்ள முடியாதபொழுதும் அதைப் பொறுமையுடனும், மன அமைதியுடனும் சகித்துக்கொள்ள அது உதவுகிறது. ராம நாமத்தில் நம்பிக்கை யுள்ளவர் பெயர்பெற்ற வைத்தியர் களையும் டாக்டர்களையும் தேடி எவ்வாறேனும் உயிர் வாழ்ந்தால் போதும் என்பதற்காக அவர்கள் வீட்டிற்கு நடையாய் நடக்கமாட்டார். டாக்டர்களும் வைத்தியர் களும் கைவிட்ட பிறகு செபிக்க ஏற்பட்டதுமல்ல ராம நாமம்; அவர்கள் உதவியை என்றும் நாடாமல் இருக்க உதவவே ஏற்பட்டது. ராம நாமத்தில் நம்பிக்கை

யுள்ளவருக்கு அது ஒன்றே ஆரம்பமுதல் இறுதிவரை மருந்தாகும்.

—ஹரிஜன், 2-6-1946

II. ஸர்வரோக நிவாரணி

"நீங்கள் எனக்குச் செய்யக்கூடிய பேருதவி உங்கள் உள்ளங்களிலிருந்து அச்சத்தை அகற்றுவதே. அதைச் செய்ய உங்களுக்கு உதவும் மந்திரம் யாது? அது என் பிழைபடாத ராம நாம மந்திரமே. எங்களுக்கு அவரிடம் நம்பிக்கையில்லையென்று நீங்கள் சொல்லலாம். அவர் அருளின்றேல் நீங்கள் ஒரு மூச்சுக்கூட விட முடியாதென்பதை நீங்கள் அறியவில்லை. அவரை ஈசுவரனென்றே, அல்லா வென்றே, 'காட்' என்றே, அஹோரா மஜ்தா என்றே அழையுங்கள். மக்கள் எத்தனையோ, அத்தனை பெயர்கள் கடவுளுக்கு உண்டு. அவர் ஒப்புவமையற்றவர். அவர் ஒருவரே பெரியவர்; அவரினும் பெரியவர் எவருமில்லை. அவர் காலம் கடந்தவர், உருவற்றவர், மாசற்றவர்; இவ்வாறெல்லாம் உள்ளவர் என் இராமர். அவர் ஒருவரே என் ஆண்டவரும், அரசருமாவார்."

சிறு பிள்ளையாய் இருந்த காலத்தில் தாம் பயங்காளியாயிருந்ததையும், நிழலைக்கண்டாலும் தமக்கு அச்சமாயிருந்துவந்ததையும், தமது செவிலித் தாயான அரம்பை அச்சத்திற்கு மருந்து ராம நாமமென்று அதன் இரகசியத்தை போதித்ததையும் மிகவும் உருக்கமாக விளக்கினர். "'பயம் தோன்றும்பொழுது ராம நாமத்தைச் சொல். அவர் உன்னைக் காப்பார்' என்று அவள் என்னிடம் சொல்லிவந்தாள். அதுமுதல் ராமநாமம் எனக்குப் பழுதுபடாப் புகலிடமாய், கேடயமாய் இருந்து கொண்டு எல்லா அச்சங்களினின்றும் என்னைக் காத்து வருகிறது.

"அவர் எப்பொழுதும் தூயோர் உள்ளத்தில் வதிகிறார். ஸ்ரீ சைதன்யர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஆகியோருடைய பெயர்கள் வங்காளத்தில் போல, காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையில் ஹிந்துக்களிடையே மிகவும் பிரசித்தமான துளசிதாசரென்ற அந்த மகா பக்தர் ராம நாம மகிமையை தம் சிரஞ்சீவி நூலான இராமாயணத்தில் நமக்கு விளக்கியிருக்கிறார். அந்தப் பெயருக்குமட்டும் நீ அஞ்சி வாழ்வாயானால் நீ உலகிலுள்ள எந்த மனிதனுக்கும்—அவன் அரசனாயினும் சரி, ஆண்டியாயினும் சரியே—அஞ்ச வேண்டியதில்லை. அல்லாஹூ அக்பர் என்ற கோஷத்தைக்கேட்டு நீங்கள் ஏன் பயப்படவேண்டும்? இஸ்லாம் மதத்தின் அல்லா தூய்மையின் பாதுகாப்பாளர். கீழ் வங்காளத்தில் நடந்திருக்கும் செயல்களுக்கு நபிநாயகம் பரப்பிய இஸ்லாம் மதத்தில் ஆதாரமே கிடையாது.

"உங்களுக்கு ஆண்டவனிடம் நம்பிக்கையிருக்குமாயின் உங்கள் மனைவிமாரையும், உங்களையும் யார் அவமானத்திற்குள்ளாக்கத் துணிவர்? ஆகையால் முஸல்மான்களைக் கண்டு அஞ்சுவதை நீங்கள் விட்டுவிடுவீர்களென்று நான் எதிர்பார்க்கிறேன். ராம நாமத்தில் உங்களுக்கு நம்பிக்கை உண்டானால் கீழ் வங்காளத்தைவிட்டு வெளியேற நீங்கள் நினைக்கவே கூடாது; பிறந்து வளர்ந்த இவ்விடத்திலேயே இருந்து கொண்டு, தேவையானால் ஆண்களும் பெண்களும் வீரமக்களைப்போல உயிர் விடவும் சித்தமாயிருக்கவேண்டும். ஆபத்தை எதிர்த்து நில்லாது அதற்கு பயந்து ஓடுவதென்றால் நமக்கு மனிதனிடமும் கடவுளிடமும் தம்மிடமும் நம்பிக்கை யில்லையென்றே ஏற்படும். இவ்வாறு நம்பிக்கையின்றி உயிர்வாழ்வதைவிட ஒருவருக்கும் சொல்லாமல் ஆற்றிலோ குளத்திலோ விழுந்து உயிர் துறத்தல் சாலச் சிறந்தது."

ஹரிஜன், 24-11-1946

III. ஒரே கடவுளின் ஆட்சியை ஒப்புவோம்

அவரை எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் சரி, அந்த சர்வவல்லமை பொருந்திய ஒரே கடவுளின் ஆட்சியை ஒப்புங்கள். அப்போது நீங்கள் தனி மனிதனிடமோ பல மனிதர்களிடமோ மண்டியிட மாட்டீர்கள். சாதாரண மனிதனுன இராமனை நான் கடவுளுடன் சேர்த்துப் பேசுகிறேனென்பது அறியாமையே. என் இராமன் கடவுளேயன்றி வேறல்லவென்று நான் மீண்டும் மீண்டும் விளக்கி யிருக்கிறேன். என் இராமன் இதற்கு முன் இருந்தான், இன்று இருக்கிறான், என்றும் இருப்பான். அவன் பிறக்கவுமில்லை, எவரும் அவனை சிருஷ்டிக்கவுமில்லை. ஆகவே, நீங்கள் பல்வேறு மதங்களையும் சகிப்புடன் நோக்கவும் மதிக்கவும் வேண்டும். நானே விக்கிரக ஆராதனையில் நம்பிக்கையில்லாதவன்தான்; ஆனால் எனக்கு விக்கிரக வழிபாடு செய்வோர் எனப் படுவோரிடமும் அதே அளவு மதிப்புண்டு. விக்கிரகங்களை வழி படுவோர் சர்வ வியாபியாய் சிறு மண் திவிலையிலும், கிள்ளி எறியப்படும் நகத்துணுக்கிலும் பிரசன்னமாயுள்ள அதே கடவுளைத் தான் வழிபடுகிறார்கள். எனக்கு ரஹீம், ரஹ்மான், கரீம் என்ற பெயர்களுள்ள முஸ்லிம் நண்பர்களுண்டு. நான் அவர்களை ரஹீம் என்றும் கரீம் என்றும், ரஹ்மான் என்றும் அழைக்கும்போது அவர்களையும் கடவுளின் வரிசையில் சேர்த்து விடுவதாகப் பொருள் கொள்ளலாமா?

ஹரிஜன், 23-2-1947

IV. சகிப்பு

"கேள்விகளும் ஆத்திரமான கடிதங்களும் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன: நீங்கள் ஏன் தம்மை முஸ்லிம் என்று அழைத்தீர்கள்? ராமனுக்கும், ரஹீமுக்கும் வேற்றுமையில்லை யென்று ஏன் கருதினீர்கள்? எனக்கு 'கல்மா'* ஓதுவதில் ஆட்சேபனை இல்லையென்று

* இஸ்லாமிய பிரார்த்தனை.

சொல்லும் அளவுக்கு நீங்கள் ஏன் மோசமாகிவிட்டீர்கள்? நீங்கள் ஏன் பஞ்சாபுக்குப் போகவில்லை? நீங்கள் மட்ட ரகமான ஹிந்து வல்லவா? நீங்கள் ஐந்தாம் படையைச் சேர்ந்தவரல்லவா? உங்களுடைய அஹிம்சை, ஹிந்துக் களைக் கோழைகளாக்கிக் கொண்டிருக்க வில்லையா? ஒரு கடிதத்தின் விலாசம் 'மகாத்மா காந்திக்கு' என்று வேறு எழுதப் பட்டிருந்தது!''

காந்திஜி அவர்களுடனெல்லாம் சாந்தமாய் பொறுமை யுடன் வாதித்தார்: "ஒரு சிலரின் பாவச் செயலுக்காக இஸ்லாம் மதத்தையே ஏன் கண்டிக்க வேண்டும்? எப்படிக் கண்டிப்பது? நான் என்னை ஒரு சநாதன ஹிந்துவென்று கருதுகிறேன். ஹிந்துமதத்தின் சாரமும், ஏன்—எல்லா மதங்களின் சாரமும் சகிப்பே ஆகையால் நான் ஒரு நல்ல ஹிந்துவாயிருக்கும் பட்சத்தில் ஒரு நல்ல முஸ்லிமும், நல்ல கிறிஸ்தவனும் ஆவேன். உயர்வு தாழ்வெல்லாம் மத தத்து வத்திற்கு முரணானது. அஹிம்சைக்குப்பணிவு இன்றியமை யாதது. ஹிந்து மத சாத்திரங்கள் கடவுளுக்கு ஆயிரம் பெயர் உண்டென்று சொல்லவில்லையா? ரஹீம் என்பதும் அவைகளுள் ஒன்றாக ஏன் இருக்கலாகாது? 'கல்மா' கடவுளைப் புகழ்கிறது, முகம்மதை அவருடைய நபி*யென மதிக்கிறது. கடவுளைப் புகழவும் புத்தரையும் ஜிரஸ்த ரையும் ஏசுநாதரையும் போல முகம்மதையும் கடவுளின் தூதரென்று மதிக்கவும் நான் சிறிதும் தயங்கேன்.

—ஹரிஜன், 27-4-1947

V. மக்களின் மருந்து

நாற்பது ஆண்டுகளுக்குமுன் நான் கூன் என்பவ ருடைய New Science of Healing† என்ற புத்தகத்தை யும், ஜஸ்ட் என்பவர் எழுதியுள்ள Return to Nature‡ என்ற நூலையும் படித்தபொழுது இயற்கை வைத்திய

* தூதன். † புதிய சிகிச்சை சாத்திரம் ‡ இயற்கைக்குத் திரும்பல்.

முறையில் எனக்குத் திடமான நம்பிக்கை பிறக்க, நான் அதன் பக்தனுய்விட்டேன் என்பதை அறிய நீங்கள் மகிழ் வீர்கள். 'இயற்கைக்குத் திருப்பம்' என்ற சூத்திரத்தை அதன் முழுப் பொருளில் என்னல் அனுஷ்டிக்க முடிய வில்லை என்பதை நான் ஒப்புக்கொண்டாகவேண்டும். அதற்குக் காரணம், எனக்குப் போதிய உறுதி இல்லா திருந்ததல்ல, என் அறியாமையேயாகும். இப்பொழுது நான் இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ஏழை எளியோ ருக்கு உகந்த இயற்கை வைத்திய முறை ஒன்றை உரு வாக்க முயன்றுகொண்டிருக்கிறேன்; மண், நீர், ஒளி, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களின் உதவிமட்டும் கொண்டு செய்யக்கூடிய சிகிச்சைகளைப் பரப்புவதோடு நிறுத்திக்கொள்ள முயன்று வருகிறேன். இதிலிருந்து இங்கே எந்தக் கடவுளை கோடானுகோடி மக்கள் இராமன் என்ற பெயராலும், இன்னும் பல கோடிப்பேர் அல்லா என்ற பெயராலும் உணருகிருர்களோ, அவர் பெயரை மனவொருமையுடன் செபிப்பதே சகல ரோகங் களையும் போக்க உதவும் மருந்து என்பதை உணரத் தொடங்குகிருேம். அவ்வாறு மனவொருமையுடன் செபிக் கும் ஒருவர் இயற்கை மனிதனுக்கென வகுத்துள்ள விதி களினின்றும் வழுவாதிருக்கக் கடமை பட்டவர். இவ்வாறு சிந்திக்கையில் நோய்வந்த பிறகு அதைப் போக்க முயலு வதை விட அது வராமல் தடுப்பது மேல் என்ற முடிவுக்கு வருகிருேம். ஆகவே ஆரோக்கிய விதிகளை, அதாவது மனம், உடல், சுற்றுப்புறங்கள் ஆகியவற்றைத் துப்புரவாக வைத்துக்கொள்வதன் அவசியத்தை உணர்ந்து நடப்ப தைத் தவிர வேறு உபாயமில்லை.

ஹரிஜன், 15-6-1947

VI. ராம செபம்

ராமசெபம் செய்தல் அல்லது கடவுளின் பெயரை மன வொருமையுடன் திரும்பத் திரும்பச் சொல்லல் என்பதற் குள்ள மகிமை அதில் சிறிதேனும் அனுபவம் உள்ளவருக் குத் தெரியும். இலட்சக்கணக்கான சிப்பாய்கள் தம் படை யின் பாண்ட் வாத்தியத்திற்கு ஒத்து அடிவைத்து நடை போடுவதிலுள்ள சக்தி எனக்குத் தெரியும். படைபலத் தினுல் உலகம் எந்த அளவுக்குப் பாழாகியிருக்கிறது என்பது யாவரும் அறிந்ததே. யுத்தம் முடிந்து விட்ட தென்று கூறப்பட்டபோதிலும் அதன் விளைவுகள் யுத்தத்தின் விளைவுகளைவிட மோசமாயிருக்கின்றன. படைபலத்தின் இழிவை என்னென்பது!

கோடிக்கணக்கான மக்கள் தாளத்திற்கு ஒத்து ஓதும் ராம நாமாவளி படை பலத்திலிருந்து வேறுபட்டிருப் பதோடு அதைவிட எவ்வளவோ சக்தி வாய்ந்தது என் பதைச் சிறிதும் தயக்கமின்றி வற்புறுத்தவே நான் இங்கு வந்திருக்கிறேன். இவ்வாறு மனவொருமையுடன் கடவு ளின் பெயரை ஓதுவதனுல் இப்பொழுதுள்ள பஞ்சமும் படுசாவும் நீங்க, அழியாத அமைதியும் ஆனந்தமும் தோன்றும்.

—ஹரிஜன், 31–8–1947

VII. உண்மை ஒளி

ஆகா, இன்று இந்தியாவில் ராமராஜ்யம் இல்லையே! ஆகையால் நாம் தீபாவளியை எப்படிக் கொண்டாடுவது? எவர் உள்ளத்தில் இராமன் வீற்றிருக்கிருனோ அவரே வெற்றியைக் கொண்டாட முடியும். ஏனெனில், கடவுள் ஒருவரால்தான் நம் உள்ளங்களில் ஒளி பரப்ப முடியும்; அந்த ஒளியே ஒளியெனத் தக்கது. (பாடப்பட்ட) பாட்டு அதை எழுதியவருக்கு கடவுளை தரிசிப்பதிலுள்ள ஆவலை நன்கு வெளியிடுகிறது. மக்கள் செய்யும் தீப அலங்காரங்

களைக் காண்பதற்கு ஜனங்கள் திரண்டு போனார்கள். ஆனால் நம் உள்ளங்களில் அன்பின் சுடரைக் கொளுத்திக் கொள்வதே இன்று நமக்குத் தேவை. அப்பொழுதுதான் பிறர் நல்வாழ்த்துக்களைப் பெற நமக்குத் தகுதி ஏற்படும். இன்று ஆயிரக்கணக்கானவர்கள் சகிக்க முடியாத பெருந் துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். 'இந்தக் கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் மார்பில் கை வைத்து, கஷ்டப்படும் இந்த ஹிந்துக்களும் முஸ்லிம்களும், சீக்கியரும் என் சகோதர சகோதரிகளே என்று சொல்லமுடியுமா? இதுவே உங்களுக்கு பரீட்சை. இராமன் இராவணன் என்பவை நன்மைக்கும் தீமைக்கும் ஸதா ஸர்வ காலமும் நிகழும் போரையே குறிக்கின்றன. உள்ளத்தினின்றும் தோன்றுவ தொன்றே உண்மை ஒளி.

—ஹரிஜன், 23–11–1947

VIII. முந்திய நாள்

[ஜனவரி 29ம் தேதியன்று, அதாவது தாம் இறந்ததற்கு முதல் நாள் காந்திஜி எழுதிய போஸ்டு கார்டு ஒன்று பிப்ரவரி 2ம் தேதி ஸ்ரீ கி. க. மஷ்ரூவாலாவுக்குக் கிடைத்தது. அது ஸ்ரீ மஷ்ரூவாலா காந்திஜியின் உதவியாளர் ஒருவருக்கு அவர் தமக்கு எழுதியிருந்தது வந்து சேர்ந்தது என்று தெரிவித்திருந்ததைக் குறிக்கிறது. ஆகவே காந்திஜியே எழுதியிருந்த பதில் அவருக்கு மகிழ்ச்சி கலந்த வியப்பை அளித்ததோடு மதிப்பிடற்கரிய நினைவு சின்னமாகவும் அமைந்தது. அந்தக் கார்டின் பொதுப்படையான மொழிபெயர்ப்பு பின்வருமாறு:

—ஆசிரியர், ஹரிஜன்]

29–1–'48. பு. டி.

"என் அன்பார்ந்த கிசோர்லால்,

"இன்று பிரார்த்தனைக்குப் பிந்திய நேரத்தை கடிதங்கள் எழுதுவதில் கழித்துக் கொண்டிருக்கிறேன். நீ சங்கரன்ஜியின் பெண் இறந்த செய்தியை இங்கே அனுப்பி வைத்தது நல்லதாயிற்று. நான் அவருக்கு ஒரு கடிதம்

எழுதியிருக்கிறேன். நான் அங்கே (ஸேவாகிராமம்) வரும் செய்தியை இன்னும் நிச்சயமாகாத நிலையில் உள்ளதாகவே கருதவேண்டும். நான் அங்கே 3-ம் தேதியிலிருந்து 12-ம் தேதி வரையில் தங்கவேண்டி யிருக்குமென்று தெரிவித்திருக்கிறேன். இங்கே டில்லியில் “செய்தேன்” என்பது உண்மையானல் என் விரதத்தை நிறைவேற்றும் பொருட்டு இங்கே இருந்து வரவேண்டிய அவசியம் இராது; இங்குள்ள என் தோழர்கள் எவ்வாறு அபிப்பிராயப்படுகிறர்கள் என்பதையே இது பொறுத்திருக்கிறது. ஒருக்கால் நாளை முடிவு செய்தல் சாத்திய மாகலாம். நான் வருவதன் நோக்கம் நிர்மாண வேலைகளைச் செய்துவரும் பல்வேறு ஸ்தாபனங்களையும் ஒன்றுபட இணைப்பது சாத்தியமா என்பதை ஆலோசிப்பதும், ஜம்னுலாலினுடைய சிராத்த தினத்தை அனுஷ்டிப்பதுமே. என் உடலின் தென்பு திருப்திகரமாய் வளர்ந்து வருகிறது. இந்தத் தடவை சிறுநீர் பிரித்தி, கல்லீரல் இரண்டிலும் கோளாறு கண்டிருந்தது. இது ராம நாமத்தில் எனக்குள்ள நம்பிக்கைக் குறைவைக் காட்டுகிறது என்பதே என் கருத்து.

“ உங்கள் இருவருக்கும் ஆசிகள் ”

குறிப்புகள் :—ஸ்ரீ சங்கரன்ஜி ஸேவாகிராமம், ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தில் ஒரு ஆசிரியர்.

“ செய்தேன் ” என்ற சொல் அவர் டில்லியை அடைந்ததும் ஏற்ற “ செயல் அல்லது சாவு ” என்ற விரதத்தைக் குறிக்கிறது.

“ இருவருக்கும் ஆசிகள் ” என்று இறுதியில் குறித்திருப்பதிலுள்ள இரண்டாவது நபர் ஸ்ரீமதி கோமதிபென் மஷ்ரூவாலா ஆகும்.

—ஹரிஜன், 8–2–1948

IX. “ ராம ! ராம ! ”

பிரார்த்தனைக் கூட்டத்தில் வேலி கொண்டு அமைத்திருந்த நடைபாதை வழியாய்ப் போய்க்கொண்டிருக்கை

யில் காந்திஜி கூட்டத்தாரின் நமஸ்காரத்திற்கு பதில் நமஸ் காரம் செய்யும் பொருட்டு இரு பெண்களின் தோள்களிலும் அமர்த்தியிருந்த தம் இரு கைகளையும் எடுத்துக் கூப்பினர். திடீரென கூட்டத்திலிருந்த ஒருவன் மற்றவர்களைத் தள்ளிக் கொண்டு வலப்புறமிருந்து நடைபாதையில் புகுந்தான். அவன் காந்திஜியின் காலைத்தொட்டு வணங்க வருகிருனென்று எண்ணிய மனு ப்ரார்த்தனைக்கு ஏற்கெனவே தாமதமாகிவிட்டதால் ஏதோ ஆட்சேபித்துச் சொல்லி ஹத்து மீறி வந்தவனுடைய கையைப்பற்றி நிறுத்த முயன்றுள். அவன் அவள் பிடியை முரட்டுதனமாய் உதறித் தள்ளியதில் அவள் கையில்இருந்த ஆசிரம பஜனவளியும் பாபூ எச்சில் உமிழும் கிண்ணமும், செபமாலையும் நழுவிக் கீழே விழுந்தன. அவள் அவைகளை எடுக்கக் கீழே குனிந்த சமயத்தில் அவன் மூன்று அடிக்கும் குறைவான தூரத்தில் பாபுவின் எதிரில் போய் நின்று கொண்டான். அவன் எவ் எவ்வளவு அருகில் போய் நின்றிருக்க வேண்டுமென்பது அவன் சுட்ட துப்பாக்கிரவைகளில் ஒன்று பாபுவின் மேலாடையின் மடிப்புக்களில் சிக்கிக் கொண்டிருந்ததிலிருந்து தெரியவரும். ஏழு அறைகள் உள்ள தானே இயங்கும் கைத் துப்பாக்கியால் ஒன்றையடுத்து ஒன்ருக மும்முறை சுடப் பட்டது. முதல் இரவை அடி வயிற்றின் வலது புறத்தில் நடுக்கோட்டிலிருந்து $3\frac{1}{2}''$ தள்ளியும், இடையிலிருந்து $2\frac{1}{2}''$ மேற்புறத்திலும் பாய்ந்தது. இரண்டாவதோ 7-வது வலது விலா எலும்புகளின் இடைவெளியில், மத்திய இரேகையிலிருந்து 1″ வலப்புறமாகப் பாய்ந்திருக்க, மூன்ருவதோ வலது மார்பில் மத்திய இரேகையிலிருந்து 4″ வலப் புறத்தில் தள்ளியும் ஸ்தனத்திலிருந்து 1″ மேற் புறத்திலும் பாய்ந்தது. முதல் இரு இரவைகளும் உடலை ஊடுருவிப் பாய்ந்து முதுகுப் புறத்தில் வெளிவந்துவிட்டன. மூன்ருவது மட்டும் நுரை ஈரலில் போய் தங்கிவிட்டது. முதல் அடி பட்டதும் முன் வைப்பதற்காக எடுக்கப்பட்ட பாதம் அப்படியே தரையில் அமர்ந்து விடவும் அப்

பொழுதும் நின்று கொண்டிருந்தவர், இரண்டாவது இரவை பாய்ந்ததும் சாய்ந்துவிட்டார். அவர் வாயிலிருந்து இறுதியாய் வந்த வார்த்தைகள் "ராம! ராம!" என்பவையே.

—ஹரிஜன், 15-2-1948

X. ராம நாமம்

ஆம்கீ என்ற ஊரில் இருந்த பொழுது, பாபுவுக்கு ஆட்டுப்பால் கிடைக்கவில்லை. எவ்வளவோ முயன்றும் பயனில்லாது போயிற்று. நான் இதை பாபுவினிடம் தெரிவிக்கவே அவர், "அதனுலென்ன? ஆட்டுப்பால் இல்லை யென்ருல் தேங்காய்ப் பால் உபயோகிக்கலாம். புதிதாகக் காய்ச்சிய தேங்காய் எண்ணெயை நெய்க்கு பதிலாக வைத்துக் கொள்ளலாமே" என்ருர்.

இவற்றைத் தயாரிப்பது எப்படியென்று அவர் எனக்கு சொல்லிக் கொடுக்கவே நான் அவ்வாறு செய்து கொடுத்தேன். அவர் எப்பொழுதும் எட்டு அவுன்ஸ் ஆட்டுப்பால் சாப்பிடும் வழக்கமாகையால் அதே அளவு தேங்காய்ப்பால் அருந்திஞர். ஆனுல் தேங்காய்ப்பால் சீரணமாகாமையினுல் அவருக்கு பேதி கண்டுவிட்டது. அடிக்கடி பேதியாய்க்கொண்டே யிருந்ததினுல் பலவீனம் வரவர அதிகமாகி, மாலையில் ஜாகைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபொழுது தலை சுற்றிக் கீழேவிழுந்தார்.

அவர் இவ்வாறு நினைவிழந்து கீழே விழவிருக்கும் பொழுது அதன் அறிகுறிகள் முன்னரே தோன்றும்: அடிக்கடி கொட்டாவி விடுவார், உடல் வியர்க்கும், சில சமயங்களில் கண்களும் செருகிப் போம். இவ்வாறு கொட்டாவிகளிலிருந்து மயக்கம் போடப்போகிறதென்று நான் உணர்ந்து கொண்டேன். படுக்கைக்கு இன்னும் நான்கு அடிதானே இருக்கிறது, பாபூஜி போய்விடலாம் என்று எண்ணினேன். ஆனுல் நான் எண்ணியது தவருயிற்று. எனது உதவி கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தவர், இதற்குள் தள்ளாடி விழலானுர். நான்

அவர் தலையை சாக்கிரதையாய்ப் பற்றிக்கொண்டு நிர்மல பாபுவை உறக்கக்கூவி அழைத்தேன். அவர் வரவே, நாங்கள் இருவருமாய்ச் சேர்ந்து பாபூஜியைப் பிடித்துத் தூக்கிப் படுக்கையில் கிடத்தினோம். அப்பொழுது பக்கத்து கிராமமொன்றில் இருந்த டாக்டர், ஸுசீலாபஹனைத் தருவிக்க வேண்டுமென்று தோன்றிற்று. பாபூஜியின் அசௌக்கியம் மிகவும் கடுமையாகி அவருக்கு (ஸுசீலா பஹனுக்கு)த் தகவல் அனுப்பித் தருவிக்காதிருந்து விடுவேனானால் என்னை எல்லோரும் முட்டாள் என்பார்களே என்று அஞ்சினேன். ஒரு சிறிய குறிப்பெழுதி நிர்மல பாபுவினிடம் அதை அனுப்புவதற்காகக் கொடுக்கவிருந்த தருணத்தில் நினைவுவந்து பாபூ விழித்துக்கொள்ளவே அவர், "மனுடீ, (பாபூ என்னைச் செல்வமாய் அழைக்கும் முறை இதுவே) நீ நிர்மலபாபுவை அழைத்தது எனக்குப் பிடிக்கவில்லை. நீ இன்னும் குழந்தையாகையால் இதை மன்னித்து விடுகிறேன். ஆனால் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் நீ மன வொருமையொடு ராமநாம செபம் செய்வதைத் தவிர வேறெதுவும் செய்யக் கூடாதென்று நான் எதிர்பார்க்கிறேன். நானே அவர் நாமம் செபிப்பதில் முன்னரே ஆழ்ந்துவிட்டேன். நீயும் நிர்மல பாபுவுக்காகக் கூப்பாடு போடாமல் ராம நாமத்தை செபித்துக் கொண்டிருந்திருப்பாயானால் எனக்கு எவ்வளவோ திருப்தியாயிருந்திருக்கும். ஸுசீலாவுக்குச் சொல்லியனுப்பவும் வேண்டாம், அவளை அழைக்கவும் வேண்டாம். உண்மை வைத்தியன் இராமனே. என் சேவை தேவையாயிருக்கும் வரையில் அவன் என்னை உயிருடன் வைத்திருப்பான். தேவை முடிந்தவுடனே தன்னிடம் அழைத்துக்கொள்வான்" என்றார்.

"ஸுசீலாவுக்குச் சொல்லியனுப்பவும் வேண்டாம், அவளை அழைக்கவும் வேண்டாம்" என்ற அவரது சொற்கள் காதிற் புகுந்தவுடனே என்னை ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. நிர்மல பாபுவினிடமிருந்த காகிதத்தை வாங்கி சுக்குச் சுக்காகக் கிழித்தெறிந்தேன். இந்தப்

பார்த்த பாபூ, "நீ அவளுக்கு இதற்குள் எழுதியும் விட்டாயா?" என்றார். நான் ஒப்புக்கொள்ள வேண்டிய தாயிற்று. பிறகு அவர், "இன்று கடவுள் நம் இருவரை யும் காத்தார். உன் சீட்டைப் படித்ததும் அவள் தன் வேலைகளை அப்படியே போட்டுவிட்டு இங்கே ஓடிவந்திருப் பாள். எனக்கு அது அறவே பிடித்திராது. அப்பொழுது அது என்னைத் தன்னிடமும் உன்மீதும் ஆத்திரப்படும்படி செய்திருக்கும். கடவுள் என்னை இன்று சோதித்ததற்காக அவருக்கு நன்றி. ராம நாமம் என் உள்ளத்தினுள் புகுந்து பரவியிருக்குமாயின் நான் வியாதியினால் சாகமாட்டே னென்ற உறுதி எனக்குண்டு. இவ்விதி எல்லோருக்கும் பொருந்தும். ஒருவர் செய்த பிழைகளுக்கு வருந்தியே யாகவேண்டும்; அதே எண்ணத்தில் நான் இந்த நோயை அனுபவித்துக் கொண்டிருந்தேன். உயிர் உடலை விட்டு நீங்கும் வரையில் ராம நாமம் உதட்டைவிட்டு நீங்கக் கூடாது. ஆனால் அதைக் கிளிப்பாடமாய்ச் சொல்லு வதிலும் பயனில்லை. அனுமார் இராம செபம் பண்ணி வந் தனதைப் போல உள்ளத்திலிருந்து அது வரவேண்டும். சீதாதேவி ஒரு முத்து மாலையை அனுமாருக்கு வெகுமதி யாகக் கொடுத்தபோது அவர் அதன் முத்துக்களையெல்லாம் கடித்து அவற்றினுள் ராம நாமம் இருக்கிறதா என்று பார்த்தாராம். இது உண்மையில் நடந்த நிகழ்ச்சியா அல்லவா என்று நாம் விசாரிக்கத் தேவையில்லை. அனுமாரைப்போல் நம்மால் உடலை உறுதியுள்ளதாய்ச் செய்து கொள்ள முடியாது. ஆனால் நம் உள்ளத்தை அதே பெருமை வாய்ந்ததாய்ச் செய்து கொள்ள முடியும். நமக்கு மனத்தில் உறுதியிருக்குமாயின் அனுமாருடையது போன்ற பக்தியைப் பெறலாம். நாம் அந்த நிலையை எய்த முடியாவிட்டாலும் அதற்கென உண்மையுடன் முயற்சிப்ப தில் தவறொன்றுமில்லை. கீதைத்தாய், எல்லா முயற்சிகளை யும் செய்து பயனைக் கடவுளிடம் விட்டுவிடவேண்டுமென்று நமக்கு போதிக்கவில்லையா? அந்த உபதேசத்தை நம்மா

லானவரையில் பின்பற்றுவதற்கு முயல வேண்டும். நானே நீயோ வேறு எவரோ நோயுற்றிருந்தாலும் என் கருத்து அவ்விஷயத்தில் எப்படியிருக்குமென்று நீ இப்பொழுது புரிந்து கொண்டிருப்பாய்" என்றார்.

அன்றைய தினமே நோயுற்றுக் கிடந்த ஒரு சகோதரிக்கு அவர் எழுதியதாவது: "உலகத்தில் உள்ள ஒரே மருந்து ராம நாமமே. ஆனால் அது பயன் தர வேண்டுமென்றால் அது பற்றிய விதிகளை யெல்லாம் சிறிதும் வழுவாமல் அனுசரிக்க வேண்டும். ஆனால் இந்த ராமபாண முறையை அனுஷ்டிக்க நமக்கு பாக்கியதை எங்கே இருக்கிறது?"

இதில் ஆச்சரிய மென்னவென்றால், மேலே கூறிய சம்பவம் அவர் இறந்ததற்குச் சரியாய் ஒரு வருஷம் முன்பு, அதாவது 1947-ம் ௵ ஜனவரி ௴ 30-ம் தேதி நடந்தது.

ராம நாமத்தினிடம் அந்த அசையாத நம்பிக்கை அவருக்குக் கடைசி மூச்சு வரையில் இருந்துவந்தது. சரியாக ஒரு வருஷம் கழிந்த பிறகு அதே தினத்தில் அவர் உயிர் விடுந் தறுவாயில் கடைசி வார்த்தையாக ரா......ம ரா......ம வென்று அவர் இருமுறை சொல்லக் கேட்கும் சகிக்க முடியாத அனுபவம் எனக்கு ஏற்படுமென்று நான் அப்பொழுது கருதவில்லை. ஆண்டவன் செயலை யாரே அறிய வல்லார்!

—மனு காந்தி எழுதிய "பாபூ—என் தாய்" இலிருந்து

CONNEMARA PUBLIC LIBRARY
17 FEB 1955
MADRAS